ள்தமயந்தி—எ-று, (கருத்து) அன்னமேயிசைகேட்டுருகினளன்பாலாசையுற்றனளென்றறியாய்என்பதாம்* நன்னூல்சிவனென்னிவினாவினைக்குறிப்பிழிவிருபால். (௬௰)

வேட்கைதனதுளத்கடக்கிமெய்நாணான்மறைத்திகலும்
வாட்படைபோனெடுங்கண்ணாள்வழங்கியசொற்பொருடேர்ந்து
நாட்கமலவள்ளவாய் நறும்போதிலமர்செய்ய
தாட்பவளக்கடிகைவாய்மடவன்னஞ்சாற்றுமால்.

(இ-ள்) நாள் - அன்றுபூத்த—கமலம் தாமரையினது—வள்ளம், கிண்ணம்போலும்—வாய-வாயையுடைய—நறும் போதி, நல்லமலரில்அமர்வாசஞ்செய்கின்ற—செய்ய-சிவப்புநிறம் பொருந்திய—தாள் அடிகளையும்—பவளக்கடிகை- பவளத்துண்டம்போலும்—வார் - வாயை யுமுடைய—மடம் இளமைபொருந்திய—அன்னம், அன்னமான—இகலும்போர்செய்தற்குரிய- வாட்படைபோல்—வாளாயுதம்போலும்—நெடுங்கண்ணாள் நெடியகண்களை யுடையவள்வேட்கை(நளன்மேலுண்டாகிய)வாசையை, தனது தன்னுடைய, உளத்து, மனத்தின்கண்—அடக்கி, வெளிப்படாமல் வைத்து—நாணால் வெட்கத்தினால்—மெய், அவ்வாசைகொள்ளப்பட்ட பொருளை—மறைத்து (சிலேடையால்) மறைத்து—வழங்கிய சொல்லிய—சொற்பொருள், வாக்கியார்த்தத்தை—தேர்ந்து-அறிந்து—சாற்றும்சொல்லும்—எ-று. (கருத்து)தமயந்திநளனிடத் திச்சைவைத்து மறைபொருளாகச்சொன்னசொல்லையறிந் தன்னஞ்சொல்லும் என்பதாம். (௬௧)

தருவின்நறுங்கொழுநனையார்தருகென்பாரென்றதுஞ்சீர்
மருவுபுரிநரம்பிசைக்கு மாடகநல்லியாழிசைகேட்
டுருகினளன்பால்வேட்கையுற்றனளென்றுரைத்ததுயா
கருதினனற்பலகலையுங்கற்றுணர்ந்ததெளிவினால்-

(இ-ள்) தருவின - கற்பகத்தருவினது—நறும்பு-வாசனைபொருந்திய கொழுநனை, செழிய வரும்பை—யார் எவர்—தருகென்பார், தருகவென்று சொல்லுவார்—என்றதும் என்றுசொன்னதும்—சீர்மருவும் சிறப்பிப்பொருந்தும்—புரி, கட்டுகளையும் நரம்பு, தந்திகளை—இசைக்கும் இசைவிக்கின்ற—மாடகம், முறுக்காணிகளையுமுடைய—நல் நல்ல—யாழ்வீணையின்—இசைகேட்டு-இசையைக்கேட்டு* உருகினளன்பால்-உருகினள் அன்பால் உருகினளன்பால்-வேட்கை. ஆசை—உற்றனளென்று அடைந்தனளென்று உரைத்ததும் சொன்னதும்—யான் பலவகையும் பலவகை நூல்களையும், கற்றுணர்ந்த-கற்று (அவற்றின் பொருளை)யறிந்த—தெளிவினால்-தெளிவைக்கொண்டு—கருதினன்-நளனைக்குறித்துச் சொல்லப்பட்டவையென்று-அறிந்தேன்—எ-று. (கருத்து)தமயந்தியே நீசிலேடையாகச் சொன்னதையானறிந்தேன்என்றன்னஞ்சொல்லிற்று என்பதாம்*சிலேடை. (௬௨)

வறங்கிளருமதர்நெடுங்கட்கன்னியர்தமநமொன்றிற்
செறிந்துமுடன்பிரியுமெனத்தெளிவுடையோர்செப்புதலா

னறுந்துணரொண்சில்லோதிநயப்புறுநின்குறிப்புளாக
ளறிந்துமறியேபோலவையுறஉற்றிருந்தனன்யான்.

(இ-ள்) நறுந்துணர்-நறியமலர்களையும்—ஒண்சில்- ஒள்ளியபொன்வட்டத்தகட்டணியையுமணிந்த—ஓதி - கூந்தலையுடையவளே—மற-ம்கொலைத்தொழிலால்—கிளரும்- விளங்காநின்ற—மதர்-மதர்த்த,நெடு-நெடிய—கண்-ககண்களையுடைய,கன்னியர்-கன்னியர்களின், மநம்-மநங்களானவைஒன்றில்- ஒருபொருளில்—செறிந்தும்அழிந்தியும்,உடல்விளைவில்—பிரியுமென-(அன்னிலையில்)நீங்குமென்று—தெளிவுடையோர், அறிவுடையோர்,செப்புதலால-சொல்லுதலினலே—நயப்புறு- விரும்பப்படுகின்ற—நின் - உன்னுடைய—குறிப்புளாகள்குறிப்புச்சொற்களின்பொருளை —யான்-நான்—அறிந்தும்-தெரிந்தும்— அறியேன்போல- அறிந்திலேன்போல—ஐயுறவுற்று - சந்தேகமடைந்தும்— இருந்தனன்-இருந்தேன்—எ-று- (கருத்து)தமயந்தியேபெண்கள மனங்கள்விளைவிற்பிறியுமென அறிவுள்ளோர்சொல்லுதலால்உன்குறிப்புச்சொற்களைநானறிந்தும்அறியாதுபோலச் சந்தேகித்தேன் என்றது அன்னமென்பதாம்*தொல்காப்பியம்-தாமென்கிளவிபுன்மைக்குரித்தே (௬௩)

உலகமெலாம்பொதுநீக்கியோராழிதனையுருட்டி
யலகில்புகழ்ப்படடம்போர்த்தவரசர்பிரான்றிருமுன்னர்
மலர்பொதுளஞ்சில்லோதியையுற்றுமடநாணுற்
சிலமொழிசொற்றனளென்னுச் செப்புவதுஞ்சீர்மைத்தோ

(இ-ள்) உலகமெல்லாம்-பூமிமுழுதையும்—பொது(பலவரசர்க்கும்)பொதுமையினின்று—நீக்கி நீவகு வித்து—ஓராழிதனை - ஒருசக்கரத்தை—உருட்டி-செலுத்து—அலகில்அளவில்லாத-புகழ்-புகழாகிய—படாம்-உடையை—போர்த்தல் செய்த—அசரர்பிரான்ராஜாதிராஜனது திருமுன்னர்-சன்னிதானத்தில்-மலர்-மலர்கள்—பொதுள்நெருங்கப்பெற்ற—அம்-அழகிய—சில்-பொன்வட்டத்தகட்டணியணிந்த—ஓதி-கூந்தலையுடைய (தமயந்தி) ஐயுற்று-சந்தேகிற்று—மடம்-அறியாமையோடு கூடிய—நாணல்-வெட்கத்தினலே சிலமொழி (உன்னைக்குறித்து) சிலசொற்களை-சொற்றனளென்னு - சொல்லினளென்று—செப்புவதும் சொல்லுவதும்—சீர்மைத்தோ - சிறப்புடைத்தாமோ—எ-று.*இலக்கணக்கொத்து-ஒழிபியல்-௩௪-ரூ-வேற்றுமைவழியோடல்வழியன்றியு-மவ்விருவழியு மடங் குங்கும் பொதுவழி - யம் மூன்றுள்ளேயடங்காவழியு- மெனநான் கென்றேயியம்புவர்சந்தி - இவ்விதியால் - உலகம்பேடு- தெய்வம் - அலி - இவற்றிற்குச்சொற்பொருடிணைபால் தொடுக்கிற்சிறப்புயன்று பொதுவுமன்றுஅடங்காவழிஎனக்கொள்க (கருத்து) தமயந்தியே நளராசன் திருக்கொலு வின் முன்னே யான்போய்அரசனேஉன்னைக்குறித்துத் தமயந்தி வெட்கத்தாற்சில சொற்கள்சொன்னுள்என்றுசொல்லுவதுசிறப்பாகுமோ என்றன்னஞ் சொல்லிற்றுஎன்பதாம். (௬௪)

கந்தடுகிம்புரிக்கோட்டைக்கழைசுளியுங்கடாயானை
மந்தரத்தாற்பகைக்கடலைமதித்தடையும்வயவேந்தன்

சிந்தைநின்பாற்பிணிப்பிற்றெள்ளமுதத்திருவேயுன்
றந்தைபிறற்களிந்திடினென்வாய்மைதவறாகாதோ

(இ-ள்) தெள்ளமுதம்-தெள்ளியபாற்கடலிற்பிறந்த—திருவே-திருமாதே—சந்து - கட்டுத்தறியை—அடு - ஒடிக்கின்ற—கிம்புரி-பூணையணிந்த—கோட்டு-கொம்புகளையுடைய, கவைகரும்புகளை—களியும்-மூறிக்கின்ற—கடாயானை - மதயானை யாகிய—மந்தரத்தால் - மந்தரகிரியினாலே—பங்க-பங்கவரது—கடலை (சேனையாகிய பாற்கடலை— மதித்து-கடைந்து—அடையும்-அடையப்பட்ட—வயம்-வெற்றித் திருவை)யுடைய —வேந்தன்-நளராஜனது—சிந்தையை- மனத்தை—நின்பால்-உன்னிடத்தே—பிணிப்பின் (யான்)கட்டிவைத்தால் - உன்னுடைய—தந்தை தகப்பனானவன்— பிறற்குமற்றொருவனுக்கு—அளித்திடின்- (உன்னைக்) கொடுப்பானேயானால்—என் எனது—வாய்மை- வாய்ச்சொலலின்றன்மையானது—தவறாகாதோ- வழுவாகாதோ-எ-று. (கருத்து) தமயந்தியேநளன்மனதையான்உன்னிடத்தில்வசப்படுத்திவைத்தால்உன்பிதாஉன்னைப்பிறருக்குக்கொடுத்துவிட்டால் என்சொற்பழுதாமென்றன்னஞ்சொல்லிற்றென்பாம். (௯௫)

என்னுளத்தினையுறல்போல் யார்க்களிப்பான்றந்தையென
வுன்னுளத்துமையமுளதாதலாலிஃதொழிக
பின்னரொவையுரைத்திடினுமுடிப்பலெனப்பேரொழில்கூ
ரன்னமடவாளுள்ளமறியுமாறுரைத்ததுவே.

(இ-ள்) பேரொழில்-பெரியவழகினால்—கூர்- மிகுந்த—அன்னம்-அன்னப்பறவையானது—என்னுளத்தில்-எனது*மனத்தில்— ஐயுறல் போல்-சந்தேகமிருத்தல்போல—தந்தை -தகப்பனானவன்—யார்க்கு-யாருக்கு,அளிப்பானென்-கொடுப்பானோவென்று- உன்னுளத்தும்-உனதுமனத்திலும் ஐயம்-சந்தேகமானது. உளது-இருக்கின்றது,ஆதலால்-ஆகையினாலே,இஃது-இக்காரியம்,ஒழிக-நீங்கக்கடவது, பின்னர்-அதுவன்றி,எவை-எந்தகாரியங்களை,உரைத்திடினும (நீஎனக்குச்) சொன்னாலும்முடிப்பலென(யான் முடிப்பேனென்று—மடவரம்-தமயந்தினது, உள்ளம்கருத்தை, அறியுமாறு-உணரும்படியாக,உரைத்தது-சொல்லிற்று—எ-று* தருக்கசங்கிரகம்- உ எ - ௬ - விசும்பேதலாந்தின்சயோடான்மாமனமேனுமைந்துநிலைப்பொருளாங்கள்- முன்னையநான்குநிறையுடையவ்வே-இவ்விதியால்மனம்நிலையுள்ளபொருளாம்(கருத்து) தமயந்தியேஎன்மனத்திற்-சந்தேகமிருக்கிறதுபோல உன்மனதிலுஞ் சந்தேகமிருக்கிறதுஇது நீங்கவேறுகாரியமிருந்தாற்சொல்லிமுடிப்பேனென்றன்னஞ் சொல்லிற்றென்பதாம் (௯௬)

கன்னிமனஞ்சூழ்கிடந்தாணென்னுங்கடியரண
மன்னமெழியெனும்படைகள் வழங்குகலுமழிந்ததாண்
முன்னிபுளந்தனிற்சிறிதுமுறுவலித்துமுகங்கோட்டி
யின்னமுதமுகுவதுபோல் வெளிப்படையினியம்பினள்.

(இ-ள்) கன்னி-தமயந்தியானவள்—மனம்-மனத்தை—சூழ்கிட-சூழ்ந்துகி— ந்த—நாணென்னும்-நாணமென்கிற—கடி - காவலாகிய—அர

னல்-மதினானது—அன்னம்- அன்னத்தினது —மொழியெனும்-சொற்களென்கிற—படைகள-ஆயுதங்கள்—வழங்குதலும் மேற்சென்றவளவில்—அழிந்ததால்- கெட்டமையால்—சிறிதுசிறிதுபொழுதுஉளந்தனில் (தன்)மனத்திலே,முன்னி-ஆலோசித்து, முறுவலித்து-சிரித்து, முகங்கோட்டி-முகங்கவிழ்த்து, இன்னமுதம்- இனியவமிர்தத்தை—உகுவதுபோல்-சொரிவதுபோல்—வெளிப்படையின் - வெளிப்படையினலே—இயம்பினாள்-சொல்லுவாள—எ-று. (கருத்து) தமயந்தியானவள் வெளிப்படையாகச்சொல்லுவாள் என்பதாம். (சுசு)

விரையுயிர்க்குந்தாமரைக்குவெய்யவனுஞ்சேதாம்பன்
மருவுயிர்க்குநாண்மலர்க்குமாமதியுமல்லாம
லுரைபெருநற்றலைவர்பிறருளர்கொல்லோபொலன்சிறைய
வரசமடவனமெனையுமன்னளாயெண்ணுதியால்

(இ-ள்) பொலன் பொன்மயமாகிய— சிறைய-சிறைகளையுடைய—மடம்-இளமைபொருந்திய—அரசவனம்- அரசவன்னமே—விரை-வாசனையை—உயிர்க்கும்-வீசுகின்ற—தாமரைக்கு -தாமரைப்பூவிற்கு—வெய்யவனும்-சூரியனும்—சேதாம்பல்-செவ்வலலியினது—மரு-வாசனையை, உயிர்க்கும்-வீசுகின்ற—நாள-பருவமுள்ள—மலர்க்கு - பூவிற்கு—மாமதியும்,பெரியசந்திரனும்— அல்லாமல்-அன்றி—பிறர்-அன்னியர்களாகிய—உரைபெறு - புகழ்பெற்ற—நற்றலைவர் - நல்லநாயகர்—உளர்கொல்லோ-இருக்கின்றாரோ (இல்லை எனையும் என்னையும்—அன்னளாய்-அப்படிபட்டவளாய்,எண்ணுதி- நளனன்றிநாயகனிலையென் றெண்ணக்கடவைய்-எ-று. (கருத்து)அன்னமேதாமரைக்குச்சூரியனும்அல்லிக்குச்சந்திரனும் அன்றிவேறுநாயகனில்லாதுபோல எனக்குநளனையன்றிநாயகனில்லையென்றெண்ணக்கடவாய் என்றாள்என்பதாம தொல்காப்பியம் கொல்லையையம், (சுஎ)

ஐயமுறேனளன்மார்பிலணியலணிகுவனன்றி
மையல்புரிவேள்வரினுமன்றலந்தார்சூட்டுவனே
செய்யொழுகுவேற்றாதைபிறற்களிப்பநேர்குவனேல்
வெய்யழற்புகுந்தாவிவிட்டுனுரைநிறுத்துவனல்

(இ-ள்) ஐயமுறேல் (அன்னமேநீ)சந்தேகப்படாதே— நளன்நளராசனது—மார்பில்-மார்பின்கண்—அணியல் - மாலையை—அணிகுவனன்றி-சூட்டுவனல்லாமல்—மையல்புரி-மயக்கத்தைச்செய்கின்ற—வேள் -மன்மதனானவன்—வரினும் - வந்தாயினும்—மன்றல்வாசனைபொருந்தி—அம்-அழகிய—தார்-மலையை—சூட்டுவனே-யாஞ் சூட்டுவேனோ, செய்-யானது—ஒழுகு-ஒழுகம்பெற்ற—வேல்-வேலையுடைய—தாதை -என்தகப்பனானவன்—பிறற்கு- மற்றொருவனுக்கு—அளிப்ப- என்னைக் கொடுக்க—நேர்குவனேல்-உடன்படுவானாயின்—வெய்யதழல் - வெப்பம்பொருந்தியநெருப்பினுள்—புகுந்து-முழுகி —ஆவிவிட்டு-உயிரைவிட்டு—உன்உனது—உரை - சொல்லை—நிறுத்தவன (நளனிடத்தில்(நிலைபெருவிப்பேன்—எ-று. (கருத்து)அன்னமே யான் நளனுக்கே மா

லையிடுவேன் என்பிதாபிறருக்கென்னைக்கொடுக்கவுடன்பட்டால் அக்கினியுள் வீழ்ந்திறந்துன்சொல்லை நிலைநிறுத்துவேன் என்றாள் தமயந்தி என்பதாம். (௯௯)

ஊழியல்பிற்றிறல்வேந்தை வேட்டுள்ளமுருகுமென்னை
வாழிமடவனக்கூட்டலரிதென்னமதித்திடேல்
கேழ்கிளர்தாமரையின்முகைக்கிளரொத்தகண்ணோற்கலரா
தேழ்பரித்தேரவன்காணினலர்ந்திடுதலியல்பன்றே.

(இ-ள்) மடம்-இளமைபொருந்திய—அனம்-அன்னமே—வாழி - வாழக்கடவாய்—ஊழ்-விதியினது—இயல்பின்- சம்பந்தத்தினால்—திறல்-வலிமையுள்ள —வேந்தை-நளராஜனை —வேட்டு - விரும்பி —உள்ளமுருகும்-மனமுருகாநின்ற—எனை-என்னை—கூட்டல்-அவனுக்குமனைவியாக்குதல்—அரிது-உனக்குப்பெரிது—என்ன - என்று—மதித்திடேல-நினைத்திடாதே—கேழ்-நிறத்தினாலே—கிளர்- விளங்காநின்ற—தாமரையின்-தாமரையினது—முகை-அரும்புக்கு—கிளர்- விளங்காநின்ற—ஒளித்தண்ணோற்கு-சீதளகிரணத்தையுடையசந்திரனால்—அலராது-மலராமல்—ஏழ்பரித்தேரவன்-சூரியனை—காணின்-கண்டால்—அலர்ந்திடுதல்-மலர்தல்—இயல்பன்றே-சுபாவமன்றோ—எ-று. (கருத்து) அன்னமேவிதியின் சம்பந்தத்தினாலே நளனையிச்சித்து மனமுருகுமென்னை அந்நளனோடுகூட்டிவித்தல் உனக்குப்பெரியகாரியமல்லவென்று சொன்னாள் என்பதாம். (௱)

வாட்டிறல்சேர்வயவேந்தின்மணிபுயத்தின்முலைதிளைப்பக்
கூட்டுதியேலுயிர்வாழ்வல்கூட்டாயேலுலகறிய
மூட்டழலிற்புகுந்தாவிமுடித்திடுவலொளிகெழுசெஞ்
சூட்டுமடவனமிவற்றுளென்செய்வான்றுணிந்தனையால்.

(இ-ள்) ஒளிகெழு - காந்திபொருந்திய—செஞ்சூட்டு - செய்யவச்சிக்கொண்டையையுடைய—மடம்- இளமைபொருந்திய—அனம்- அன்னமே—வாள்-வாளினது—திறல் - போரினாலே—சேர்- சேர்ந்த—வயம்-வெற்றிபொருந்திய—வேந்தின்-நளராஜனுடைய—மணி- அழகிய—புயத்து-தோள்களிடத்து—என்-என்னுடைய—முலை- முலைகளானவை—திளைப்ப-அழுந்தும்படியாக—கூட்டுதியேல் (என்னைஅவனோடு) சேர்ப்பாயானால்—உயிர்-வாழ்வல்—உயிர்- வைத்திருப்பேன் —கூட்டாயேல்சேர்க்காயானால்—உலகறிய- உலகத்தாரறிய—மூட்டு - மூட்டப்பட்ட—அழலில்-நெருப்பினுள் —புகுந்து-முழுகி—ஆவி - உயிரை—முடித்திடுவல்-விட்டுவிடுவேன்—இவற்றுள்- (கூட்டலுங்கூட்டாமையுமாகிய) இவ்விரண்டினுள்—என்செய்வான்-எதுசெய்யும்படியாகத்துணிந்தனை (நீ) நிச்சயித்தாய்—எ-று. (கருத்து) அன்னமேநீஎன்னை நளனோடுசேர்த்தால்உயிர்வைத்திருப்பேன் சேர்க்காவிட்டால் உயிரைவிட்டுவிடுவேன் என்றாள் என்பதாம். (௱௧)

* உயிருதவிசெய்தவர்க்கொன்றாற்றக்கூலுணர்வுடையோர்
செயிரறுதம்முயிரளித்துச்செய்நன்றிக்கடன்கழிப்பார்
மயர்வறவென்னுயிரினுஞ்சீர்வாய்ந்தநளன்றனையளிப்பி
னயர்வறுமோதிமமதற்குக்கைம்மாறேதறிகிலன்யான்.

(இ-ள்) அயர்வறு மனச்)சோர்வற்ற—ஓதிமம் - அன்னமே—உணர்வுடையோர்-அறிவுடையோர்—உயிருதவிசெய்வதற்கு (ஆபத்துவந்தபோது) தம்முயிரைக்காப்பாற்றினவருக்கு—ஏன்ற-ஓராபத்து—உற்றக்கால்-வந்ததாயின்—செயிர் அறு-குற்றமற்ற—தம்- தம்முடைய—உயிர்-உயிரை—அளித்து-கொடுத்து. செய்-(அவராற்செய்யப்பட்ட) நன்றி-உபகாரமாகிய, கடன்-கடனை, கழிப்பார்-தீர்ப்பார், மயர்வு- மயக்கமானது, அற்றீங்க: என்-எனது. உயிரினும்- உயிரைக்காட்டிலும்—சீர்வாய்ந்த-சிறப்புப்பொருந்திய, நளன்றனை-நளராஜனை, அளிப்பின்-கொடுப்பாயானால், அதற்கு அவ்வுபகாரத்திற்கு, கைம்மாறு-எதிருபகாரம்,ஏது-யாதுநான், அதனை யறியேன்—எ-று. [யாதுஅறியேனெனவேயில்லையென்றதாயிற்று] * தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் ௬௮-ம்-சூ-ம், காலமுலக முயிரேயுடம்பேபால்வரைதெய்வம் வினையேம்பூத, ஞாயிறுதிங்கள் சொல்லெனவருஉ-மாயீரைந்தொடு பிறவுமன்ன, வாவயின்வருஉங், கிளவியெல்லாம் பால்பிரிந்திசையா வுயர்திணைமேள (கருத்து) அன்னமே உயிர்க்குதவிசெய்தவர்க்கு உயிர்க்குதவிசெய்வார்கள் உணர்வுடையவர்கள் என்னுயிரினுஞ் சிறந்தநளனை நீ எனக்குக்கொடுத்தால் உனக்கென்ன பிரதிவுபகாரஞ் செய்வேன்என்றான் என்பதாம். (௱௨)

கைம்மாறுநினக்காற்றலரிதெனினுங்களிப்பினுளஞ்
செம்மாந்துன்செயிரறுசீரை வாதுசெப்புவல்யா
னெம்மாவியிறந்துபடாதிருக்குங் கொல்விரைவினிற்போய்த்
தெம்மாறுசுடர்வேலவான்றிருவருள்பெற்றிடாயெனினே

(இ-ள்) கைம்மாறு- பிரதியுபகாரத்தை—நினக்கு-உனக்கு—ஆற்றல், செய்தல்—அரிதெனினும்-இல்லையாயினும்—களிப்பின் - மகிழ்ச்சியினாலே—உளம்-உள்ளத்தில்—செம்மாந்து-இறுமாந்து—உன்-உனது, செயிரறு-குற்றமற்ற—சீர்-குணத்தை—ஓவது-இடைவிடாமல்—யான்-நான், செப்புவல்-சொல்லுவேன் (ஆனால்) அதை - நன்றாகவாலோசித்து—விரையாமற்செய்வே-னென்பாயாயின்—விரைவினில்-சீக்கிரத்தில்—போய்-சென்று—தெவ்-பகைவரும்—மாறு- வட்பினராய) வேறுபடுதற்குக் காரணமாகிய—சுடர்-ஒளிபொருந்திய—வேலான்-வேலையுடையவனது திரு-அழகிய—அருள்-அருளை, பெற்றிடாயெனின்-பெறாயாயின்-எ-ம்-எம்முடைய, ஆவி * உயிர்களானவை, இறந்துபடாது-நீங்கிப்போகாமல்—இருக்குங்கொல்-இருக்குமோ—எ-று. [தாய்மார்பாங்கிமாரையுஞ்சேர்த்துபன்மையாக எம்மாவியென்றாள்] (கருத்து) அன்னமேநானுனக்குப் பிரதியுபகாரஞ்செய்த லரிதென்றாலும் வுன்புகழ்ச்சியை இடைவிடாதுசொல்வேன்நீவிரைவிற்போய்நளனருளைப்பெறாவிடில் எங்களுயிர்களிருக்குமோஎன்றாள்என்பதாம் தருக்கசங்கிரகம்அறிவிர்ப்பண்பிற்றனமாவதுதானிறையுநூயிருமென்றுவிருவகைத்தே. (௱௩)

எனக்குறைநீவயவேந்தற்கியம்புதியேல்வடக்கிடந்து
பொன்பிதிர்மின்சுணங்கார்ந்தபொம்மலிளமுலையினம்பா

லன்பிறு நல்லமயமதிலேறையற்கவனைகுதியே
னன்குனாதீங்காமவர்பானயப்புற்றதன்மையினுல்

(இ-ள்) என்-எனது, குறைகுறைப, நீ, நீ, வயம்வேற்றீனையுடைய, வேந்தர்க்கு-ளராசனுக்கு, இயம்புதியேல்சொல்லுவாயின், வடம்-முத்துவடமானது, கிடந்து தங்கபெற்று, பொன்பிதிர்பொன்போல, மின்விளாகுகின்றாசுணங்கு தேமலால், ஆர்ந்த- நிறைந்த, பொம்மல் பொலிவுள்ள, இள-இளமைபொருந்திய, முலையினாபால் முலையினரிடத்து, அன்புறு-அன்பிற்றிருக்கின்ற, நல்லமாயமதில் நல்லசமயத்தில், அரையர்க்கு அதனைச் சொல்லாதே, அரைகுதியேல் அப்போதுசொல்வையே யானுல், அவர்பால-அவரிடத்தே, நயப்புற்ற-இன்பமுற்ற, தன்மையினுல்குணத்தினுலே, நன்குனா உனது நல்லசொலலும், தீக்கம் (அவனுக்குக் குற்றமுள்ளதாகும. எ-று (கருத்து) அன்னமேநீஎன்குனைகளை அரசனிடத்திற்சொல்லுவையேயானுல் அரசன் பெண்களிடந் தன்புள்ளசமபத்திற் சொல்லாதேசொன்னுல்நல்லவார்த்தையுங்குற்றமாய்விடும் என்றுளஎன்பதாம()

வேற்றரசர்திறைகொணரும்வேலையினுஞ்*சொல்லர்க்க
யாற்றரசர்பால்வெகுளுமமயத்தும்வகுத்துரைவே
றேற்றமுடைமதிவல்லேர்நோர்ச்சியினுநதெரிந்துரையேல்
சாற்றினுரைத்தனவெல்லாநதவருதறிதியே.

•(இ-ள்) வேற்றரசர்-பிறவரசருடைய, திரை-இறைப்பொருளைகொணரும்-விருக்கின்ற, வேளையினும்-காலத்திலும், சொலலர்ச்சொல்லாதொழிக, மாற்றரசர்பால்-பகையரசரிடத்து, வெகுளும்-கோபஞ்செய்கின்ற, அமயத்தும்-காலத்திலும, வகுத்துரையேல்சொல்லாதே, தேற்றம்-தெளிவை, உடை-உடைய, மதிவல்லோர்மந்திரிகளோடு, தேர்ச்சியினும்-ஆலோசனைசெய்யுங்காலத்திலும், தெரிந்துரையேல்- சொல்லாலே, சாற்றின்(நீ)-சொல்லின, உரைத்தவெல்லாம் - உன்னுற் சொல்லப்பட்டனவெல்லாம், தவறுதல்- குற்றமுடையனவாகலே, அறிதி (நீ அறிவாய் —எ-று*இலக்கணத்திரட்டு எதிர்மறையேவற்கேலேயேல்லே யன்னமோவற்கவாகுமொருமைக்காமினன்மினற்பீர்பன்மைஇவ்விதியாலற்கவிகுதிஒருமையில்வந்தது(கருத்து) அன்னமேஅரசர்திறைசருமபோதும்பகையரசனைக்கோபிக்கும்போதும்மந்திரிகள்மதிசொல்லும்போதும்என்வார்த்தைகளைச் சொல்லாதேயான் சொன்னதெல்லாஞ்சொல்லென்றுளஎன்பதாம். (௱௬)

பொறிசெறித்தமாண்பினராய்ப்பொருந்தலர்செற்றிருநிதியஞ்
செறிதருமாறீட்டியருவினைவாங்குசெயலினரு
முறுபிழையுடளறியற்றிஞெறுத்*திடுவர்வயவேந்த
ரறுதிபெறநீமொழியுமமயறிந்துரைத்தியால்.

(இ-ள்) பொறிஐம்பொறிகளையும், செரித்த அடக்கிய, மாண்பினராய் நற்குணமுடையவராகிய, பொருந்தலர்பகைவரை, செற்றுவென்று; இருநிதியம் அதிகதிரவியத்தை, செரிதருமாறுநெருக்குமாறு, ஈட்டிசேர்த்து அருவினைபெரியதொழில்களை, வாங்கு(தம்மிடத்து)வாங்கிய, செயலின

ருஞ்செய்கையையுடையவரும் உறுபலவா யுறுகின்ற,பிழையுள்குற்றங்க ள்,சிறிது-சிறியவொருகுற்றத்தை, இயற்றின்செய்தாலும், வயும்-வெற்றியு டைய,வேந்தர்அரசராயினோர்) அறுகி-தம்மினைழிவை—பெற-அடைய—ஒறுத்திடுவார்(அப்படிப்பட்டவரையும்)தண்டிப்பார்(ஆதலால்)நீவி வேகியாகிய)நீ—மொழியும்-சொல்லுதற்குரிய—அமயம்-காலத்தை, அறிந்து-தெரிந்து,உரைத்திசொல்லு—எ-று.(கருத்து) அன்னமேபகைவ ரைவென்றுபாக்கியஞ் சம்பாதித்தக்கருமவல்லவர்களும் அற்பகுற்றஞ் செய்தால்அரசர்தண்டிப்பாராகையால் குற்றமின்றிக் காலமறிந்துகூறெ ன்றான்0தாதுவிளக்கம்-இடுவிடுமுதலியவினையிடைச்சொல்லே. (௰௬)

உளத்தனவாண்முகத்தானவாயுதிக்குமவைகுயிப்புறுற்
றெளித்துரைத்தல்சீர்மைத்தேதூதர்செயலிற்றாகும்
விளக்கமுறநீயலதியாரறிவாரிவைமெலியுமெனை
யளித்திடுதிவிரைவினிற்போயாய்தூவிமடவனமே.

(இ-ள்) ஆய்-மிகமெல்லிய,தூவி-இறகையுடைய,மடம்- இளமைபொருந்திய,அனமே-அன்னமே,உளத்தன (ஒருவர்) மனத்திலுள்ளணங்களானவை,வாள்ஒளியுள்ள,முகத்தனவாய்- முகத்தினிடத்தனவாகி,உகிக்கும்தோன்று, அவை-அக்குணங்களை,குறிப்பினால் அம்முகக்குறிப்பினாலே, தெளிந்து-அறிந்து,உரைத்தல்-சொல்லுதல்,சீர்மைத்தே சிறப்புடைத்தாகும்,தூதர்-தூதரது,செயல் தொழிலானது,இற்றாகும்-இத்தன்மைத்தாகும்,இவை-(நளன்மனதிலுள்ள) விவற்றை, விளக்கமுறவிளக்குதலுறநீயலதுநீயல்லாமல்,யார் வேறே)யாவர்,அறிவர்-அறியவல்லவர்,விரைவினில்சீக்கிரத்தில்,போய் நளராசனிடத்துப்போய், மெலியும்- வருந்துகின்ற,எனை-என்னை-அளித்திடு-காப்பாற்று—எ-று (கருத்து)அன்னமே அகத்திலுள்ளவைமுகத்திற்காட்டும் முகக்குறிப்பறிந்துசொல்லுதல்தூதர்திறமாகும் நளன் மனத்துள்ளவைநீயல்லாமல்யாரறிவார்கள்சீக்கிரம் போய் என்னைக்காப்பாற்றுஎன்றாள்-ம் (௰௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்னவாங்குவெளிப்படையிற்குயிலுநாண0வின்னமிழ்தின
கன்னறபாகிற்கொற்றேனியிற்கனிக்கமொழிநவிலும்
பொன்னம்பாவையன்னாடனனுள்ளந்தேர்ந்துமகிழ்புரியா
வன்னங்கண்ணுலருந்துகல்போரேநோக்கிச்சிலசொல்லறையுமா

(இ-ள் என்ன,என்று, அன்னம்அன்னமானது,ஆங்குஅந்தச்சோலையினிடத்து வெளிப்படையின்வெளிப்படையினாலே,குயிலும்,கோகிலமும்நாணவெட்கமுற,இன்னமிழ்கின்,இனிதாகியவமிர்தத்திலும்,கன்னறபாகின்,சக்கரைக்கும்பினும்,கோற்றேனின்,கொம்புத்தேனினும்,கனியின்முக்கனியினும்,கனிந்த,சுவைமிகுந்த,மொழி-இந்தச்சொற்களை,நவிலும்,சொல்லிய,பொன்,பொன்மயமாகிய,அம-அழகிய,பாவையன்னாள்பாவைபோல்பவளது,உள்ளம்-கருத்தை,தேர்ந்து-அறிந்து,மகிழ்புரியாமகிழ்ந்து

கண்ணுலருந்துதல்போல்-கண்களால்விழுங்குதல்போல்—நோக்கி-அவளைப்பார்த்து—சிலசொர்க்களை-அறையும்சொல்லும்—எ-று. ० தாதுவிளக்கம், சாரியைவிகுதிதாங்கெடலுரித்தே-இவ்விதியால் இணிப்புஎன்றதில், இகாசச்சாரியையும் புவிகுதியும் கெட்டின (கருத்து) அன்னமானது தமயந்தியைப்பார்த்துச் சிலசொர்க்களைச்சொல்லும (ளஅ)

சுணங்குபூத்துக்குலிகச்செப்பெனலாய்ச்சுருங்கிநுழைந்நுசுப்பு
வணங்கித்தேம்பசவருமுலையாயுரைத்தமாற்றமெய்யாமே
லிணங்குலாயில்யார்வேண்டுநளற்குநினக்குமிதயத்து
ளணங்குநோய்செதலர்தூற்றமநங்கனொருவனிருக்கவே.

(இ-ள்) சுணங்கு-தேமலானது, பூத்து-படரபெற்று, குலிங்கச்செப்பெனலாய்-இங்குலிகத்திலாகியசெப்புக்கறெனற்தாகி, நுழை-நுண்ணிற—நுசுப்பு-இடையானது, சுருங்கி-இளைத்து, வணங்கி-வளைந்து, தேம்ப-வருந்த, வரு-வளர்கின்ற, முலையாய்-முலைகளையுடையவளே, உரைத்த-உன்னால் சொல்லப்பட்ட, மாற்றம்-சொலல, சொல்லானது-மெய்யாமேல-சத்தியமாயின, நளர்க்கும்-நளராசனுக்கும், நினக்கும்-உனக்கும், இதயத்துள்-மனத்தின்கண், அணங்கு-வருத்தஞ்செய்கின்ற, நோய்-காம நோயை, செய்து-உண்டாக்கி, அலர்-தூற்றும், பழிமொழியைப் பரப்புகின்ற, அநங்கனொருவன்-மன்மதனொருவன், இருக்க-உளனாகஇணங்கு, (தமயிருவரையும்) பொருந்துதற்கு, வாயில்-சந்திசெய்வோர், யார்-எவர், வேண்டும்- உங்களுக்கு)வேண்டும்—எ-று, (கருத்து) தமயந்தியே நீசொன்னசொல்மெய்யானால் இருவரையுங்கூட்டிவைக்க இடையில் மன்மதனொருவனிருக்க வேறேயொருவர் வேண்டுமோவென வன்னஞ்சொல்லிற்று என்பதாம். (ளகூ)

०கடல்சூழ்புவியிப்பாதலத்திலமரருலகிற்கவின்றிகழுங்
கொடிநேரிடையாள்யாரென்னநின்னையாங்கள்கூறுதலும்
படியேழ்புரக்கும்வேந்துளத்துப்படைவேள்பகழிபுகும்வழிபோய்
மடமானோக்கிநீயுரைதன்மறந்தாய்கொல்லோமறைத்தனையோய்.

(இ-ள்) மடம்-இளமைபொருந்திய—மான்-மான்(கண்போலும்) நோக்கி-கண்களையுடையவளே, படியேழ்-எழுதீவுகளையும், புரக்கும்-காக்கின்ற, வேந்து-நளராஜனானவன், கடல்-கடலானது, சூழ்-சூழப்பெற்ற, புவியில்-பூலோகத்திலும், பாதலத்தில்-நாகலோகத்திலும், அமரருலகில்-தேவலோகத்திலும், கவின்-அழகினாலே, திகழும - விளங்காநின்ற, கொடிநேரிடையாள்-கொடிபோலிடையையுடையமங்கை, யாரென்ன-சவிளன்றுவினவ, யாங்கள்-நாங்கள், நின்னை-உன்னை, கூறுதலும்-சொல்லுதலும், படை-படையையுடைய, வேள-மன்மதனது, பகழி-பாணமானது, புகும்-சென்ற, வழி-வழியால், போய்-சென்று, உளத்து-(அவன்) மனத்தின்கண், நீ-நீ, உறைதல்-இருக்கையை, மறந்தாயகொல்-மறந்தாயோ, மறைத்தனையோ எனக்கு ஒளித்தனையோ—எ-று. (கருத்து) தமயந்தியேநளமகாராஜன் அழகு ள்பெண்யாரென் றெங்களைக்கேட்க யாங்களுன்னைச்சொல்லுதலும, மன்மதபாணஞ்சென்றவழியே நீபோயிருந்ததைமறந்தாயோ அல்லதுமறைத்துச்சொல்லுகிறாயோ என்றன்

ணஞ்சொல்லியது ० தருக்கசங்கிரகம் - ௰௧ - ௫ - கடலீயாறுதியவிடய மாகும். (௯௰)

ஈட்டுமணிகள்பலதெரித்துன்னெழுதற்கரிய० திருவுருவங்
கோட்டுங்கிழிதான்முலைகோட்டப்பரப்பின்றென்னுங்கொடிமருங்கு
நீட்டவனைகோனுதிநுண்மையிலதென்றெண்ணித்திகைக்குமுளம்
வேட்டுநெடுங்கண்ணிமையாமனோக்கித்தளரும்வேல்வேந்தே.

(இ-ள் வேல்-வேற்படையையுடைய, வேந்து-நளராஜனானவன், உன் உனது, எழுதற்கரிய-சித்திரக்காரராலெழுதற்கரிதாகிய, திரு-அழகிய, உருவம்(உளது) வடிவத்தை, ஈட்டு(தன்னால்) சம்பாதிக்கப்பட்ட, பல-பலவகையாகிய, மணிகள-மணிகளை, தெளித்து-பதித்து, கோட்டும்-எழுதுகிறான், முலை-உன்முலைகளை, கொட்ட-எழுதுதற்கு, கிழி-படத்தில், பரப்பு-அகலம், இன்றென்னும்-இல்லையென்கிறான், கொடி-பூங்கொடி போலும், மருங்குல்-(உன திடையை, நீட்ட-எழுதுதற்கு, வனைகோல்-தூரிகைக்கோலினது, நுதி-நுனியின்கண், நுண்மை-கூர்மையானது, இலதென்று-இல்லையென்று, எண்ணி-நினைத்து, திகைக்கும்-திகைக்கிறான், உளம்-மனத்தில், வேட்டு-விரும்பி, நெடுங்கண் - நெடியகண்களானவை, இமையால்-இமையாதிருக்க, நோக்கி அவ்வடிவத்தைப்) பார்த்து, தளரும்-வருந்துகிறான்—எ-று ० இலக்கணத்திரட்டு-கனவுநினைவுகட்பொறிசெவிப்பொறியென நான்காகுமெவ்வகைக்காட்சியும்-இவ்விதியால் சித்திரக்காட்சி சொலலப்பட்டது (கருத்து) நளமகாராசன்உனதுதிருவுருவத்தையெழுதுகிறான் உன்கனதனங்களை யெழுதப்பட கமலமில்லைகிறான் உனதிடையை எழுதுதற்குத்தூரிகைக்கோல் கூர்மையில்லை யென்கிறான் உன்னுருவத்தை இமையாதுநோக்கிவருந்துகிறான் என்பதாம், (௯௰௧)

பருந்துங்கழுகுக்கொடியினமுமருந்தப்பகைஞருடறடிந்து
விருந்துசெய்யுஞ்சுடர்வடிவேல்வேந்தனுயிருநீயென்னும்
பொருந்துங்காமப்பிணிநீக்கிப்புலம்புதீர்த்தினுயிரளிக்கு
மருந்துநீயேயென்றெண்ணிமகிழ்தூங்குளத்தோடிருந்தயரும்,

(இ-ள்) பருந்தும்-சேனங்களும், கழுகும்-எருவைகளும், கொடியினமும-காக்கைக்கூட்டங்களும், அருந்த-தின்னும்படியாக, பகைஞர்-பகைவருடைய, உடல்-உடம்புகளை, தடிந்து-துணிந்து, விருந்துசெய்யும்-(அவற்றிற்கு) விருந்து-செய்கின்ற, சுடர்-ஒளியும், வடி-கூர்மையும்பொருந்திய, வேல்-வேலையுடைய, வேந்தன்-நளராஜனானவன், உயிரும்-(தன்) னுயிரும், நீயென்னும்-நீயாக வேண்டுகிறான்) பொருந்தும் (தன்னைப் பற்றிய, காமப்பிணி-காமநோயை, நீக்கி ஒழித்து, புலம்பு-(அதனாலாகின்ற) துன்பத்தை, தீர்த்து-தீர்வித்து, இன்-இனிதாகிய, உயிர்(தன்) னுயிரை, அளிக்கும்-காப்பாற்றும், மருந்து-ஔஷதமும், நீயேயென்று-நீயேயாக, எண்ணி-இடைவிடாது, நினைத்து, மகிழ்-மகிச்சியில், தூங்கு-பரவசப்பட்டிருக்கின்ற, உளத்தோடு-மனத்துடனே, இருந்து-தங்கி, அயரும்-வருந்துகிறான்—எ-று (கருத்து) தமயந்தியே நளமகாராஜன்உன்னைத்தன்னுயிராகநினைக்கிறான்-அன்றியுந் தன்காமநோயைத்தீர்த்து

உயிரைக்காப்பாற்றுமருந்தும் நீயேஎன்றெண்ணுகிறான்என்றுசொல்லி ற்றுஎன்பதாம். (௱௰௨)

தேறாரொளிருமணிமௌலியிடறித்தேய்ந்துவிளங்குநகக்
கூற்றாமென்னுமால்யானைப்பிடரிற்றோன்றுமெழிற்குறியா
வாற்றாரியாடவருமபெண்மைவிரும்புமடலைவேந்தன்
வேற்றோர்பொருளிலைம்புலனும்விழையாவாகமெலியுமால்.

(இ-ள்) தேற்றார்-பகைவரது, ஒளிரும்-விளங்காநின்ற, மணி-நவமணிகளாலாகிய, மௌலி-மகுடத்தில, இடறி-தாக்குண்டு, தேய்ந்து-தேய்தலால், விளங்கு-விளங்காநின்றே, நகம்-நகங்களையுடைய, கூற்றமென்னும்-கொலையிலேயமனெனப்படுகின்ற, மால-பெரிய, யானை-யானையினது பிடரில்-எருத்தத்தில, தோன்றும் - காணப்படுகின்ற, எழில-தன்னழகை, குறியா-நினைத்து, ஆடவரும்-புருஷரும், ஆற்றாரி-பொருக்கமாட்டாதவராகி, பெண்மை-பெண்வடிவத்தை, விரும்பும்-விரும்பப்பெறுகின்ற, அடலவேந்தன்-வெற்றிவேந்தனானவன், வேற்றோர்பொருளில-உன்னிடத்தன்றிவேறொருபொருளிடத்து, ஐம்புலனும் - பஞ்சவிஷயங்களும், விழைவாக-விரும்பப்படாதனவாக, மெலியும-தளர்கின்றான் எ-று. ௦நன்னூல - பலலோர்படர்க்கைமுன்னிலைதன்மையிற்சொலலாதாகுஞ்செய்யுமென்முற்றே இவ்விதியால மெலியும்என்றது மெலிகின்றானென்றாயிற்று (கருத்து) நளமகாராஜனானவன் உன்னையலலாமலவேறொருபொருளிடத்திலிச்சைவைத்திலன் என்றுசொல்லிற்றுஎன்பதாம (

கார்க்கும்வெண்மையளித்திருண்டகரியகூந்தற்கனக்குழையா
யார்க்குஞ்சுரும்புமிசைத்தேனும்வண்டுஞ்சுழலுமைங்கணைவேள்
போர்க்குமெலிந்தோவெண்டிங்கள்பொழியுநிலவின்றேம்பியோ
பார்க்குந்தோறும்புதிதாக ௦ வுடலமெலியும்பார்வேந்தே,

(இ-ள்) கார்க்கும்-மேகத்திற்கும், வெண்மை-வெள்ளைநிறத்தை, அளித்து-கொடுத்து, இருண்ட-கறுத்த, கரிய-பெரிய, கூந்தல-கூந்தலையும், கனம்-கனம்பொருந்திய, குழைபாய்-குண்டலத்தையுமுடையவளே, பார்-பூமியையுடைய, வேந்து-நளமகாராஜன், ஆர்க்கும-ஒலிசெய்கின்ற, சுரும்பும்-பொறிவண்டுகளும், இசை-இசைபடுகின்ற, தேனும்-தேன்வண்டுகளும், வண்டும்-கருவண்டுகளும், சுழலும் சுழலப்பெறுகின்ற, ஐங்கணை-பஞ்சபாணத்தையுடைய, வேள்-மன்மதனது, போர்க்கு-சண்டையினால், மெலிந்தோ-இளைத்தோ, வெண்டிங்கள் - வெளியசந்திரனது, பொழியும்-சொரியப்பட்ட, நிலவின்-நிலாவினாலே, தேம்பியோ-வருந்தியோ, பார்க்குந்தோறும்-காணுந்தோறும், புதிதாக-நூதனமானதாக, உடலம்-உடம்பு, மெலியும்-இளைக்கப்பெறுகிறான்—எ-று ௦தொல்காப்பியம்-மெய்ப்பாட்டியல-௨௨-ரு-இன்பத்தைவெறுத்தறன்பத்துப் புலம்பலெதிர்பெய்துபரிதலேதமாய்தல் "பசிபடநிற்றல்பசலைபாய்தலுண்டிற்குறைதலுடம்புநனிசுருங்கல் கண்டுயின்மறுத்தல்கனவொடுமயங்கல் இவ்விதியால் உடல்மெலிவுகூறினார் (கருத்து) தமயந்தியேஎனம

காராசனைவன் மன்மதன்பேரினாலேயோ சந்திரகிரணங்களாலேயோ
உடலிளைக்கப்பெறுகின்றானென்று சொல்லிற்று என்பதாம். (௱௰௪)

அலர்வார்பகழிதுரந்து துங்காகமெலிவித்திடுதலன்றிச்
சிலைவேள்வேந்தனிப்பலபனைத்துங்கவர்ந்தான்போலுந்தீங்கிழைத்து
முலைமேற்கூடப்பெறுமெனிலோவதுவுமியற்றுமுதுக்குறைவற்
றுலையாக்காமக்கொடுந்துயரமுழந்துநாணுமிழக்குமால்.

(இ-ள்) சிலை-கருப்புவில்லையுடைய வேள்-மன்மதனானவன், வார்-நெ
டிய அலர்-மலர்களாகிய,பகழி-பாணங்களை-துரந்து துரந்து-செலுத்திச்
செலுத்தி, ஆகம்-உடம்பை, மெலிவித்திடுதலன்றி-இளைப்பித்தலல்லா
மலும், வேந்தன்-அரசனுடைய, இபலபனைத்தும்-பாவத்தையஞ்சுதல்
இழிதொழிலினை முதலாகிய, பாவகுண-முழுவதையும், கவர்ந்தான்
போலும் - வௌவிக்கொண்டானோ, என்னென்றால்-தீங்குபாவத்தை, இ
ழைத்து-செய்தலினாலே, உன்முலைமேல் - உன்கொங்கைகளின்மேலே,
கூடப்பெறுமெனிலோ-கூடப்பெறலாமென்றாலோ, அதுவும் அப்பாவ
த்தையும், இயற்றும்-அஞ்சாதுசெய்வான், முதுக்குறைவற்று-பேரறிவ
ற்று, உலையா-கெடாத, காமம்-காமமாகிய, கொடு-கொடிய,துயரம்-துன்
பத்தில், உழந்து-வருந்தி, நாணும்-நாணத்தையும், இழக்கும்-விட்டுவிடு
கிறான்-எ-று. (கருத்து) தமயந்தியே நளன்பாவஞ்செய்தாவது உன்னைக்
கூடப்பெறவானானால் அதுவுஞ்செய்வான் பேரறிவிழந்து காமத்திலுழ
ந்து நாணத்தையும் விடுகிறான் என்பதாம். (௱௰௫)

நின்சீருருவுவெளிப்படுதலைநோக்கிநோக்கிநிலைதளரு
மென்பூடுருகவிளமுலைமேற்புல்லுமுனிந்தாயெனவருந்து
மன்போடூடறீர்த்தனன்போனகைக்குமகன்றாயெனவெளியிற்
பின்போதருநல்லுணர்விழந்தபித்தர்போலப்பேதுறுமால்.

(இ-ள்) நின்-உனது, சீர்-சிறப்புபொருந்திய, உருவு-வடிவமானது, வெ
ளிப்படுதல்-தோன்றுதலை, நோக்கிநோக்கி-பார்த்துப்பார்த்து, நிலை-தன்
னறிவுநிலை, தளரும்-தளரப்பெறுகின்றான், என்பு-எலும்பு, உருக-உள்
ளுருக, இள-இளமைபொருந்திய, முலைமேல்-அவ்வடிவத்தின்முலைகளின்
மேல், புல்லும்-தழுவுகின்றான், முனிந்தாயென-ஊடினையென்று, வருந்தும்-
வருந்துகின்றான், அன்போடு- ஆசையினால், ஊடலை-அவ்வூடலை, தீர்த்தன
ன்போல்-நீக்கினவன்போல, நகைக்கும்-சிரிக்கின்றான், அகன்றாயெனநீ
ங்கினையென்று, வெளியில்-வெறுவெளியில், பின்-அவ்வடிவத்தின்பின்னே
போதரும்-போகின்றான், நல்லுணர்வு-நல்லறிவை, இழந்த-துறந்த, பித்த
ர்போல-பித்தநோயினர்போல, பேதுறும்-மறவியுற்றிருக்கின்றான்-எ-று.
இலக்கணவிளக்கம், அகத்திணையியல், ௬௯-ஞ்-சூ-காட்சிவேட்கையுள்ளுத
லமெலி, தலாக்கஞ்செப்பனாணுவரையிறத்த-னோக்குபவெல்லாமவை
யேபோன்றமறத்தலமயக்கஞ்சாக்காடென்றவையிரண்டவத்தையும்பெ
ய்கிழற்காளையும்பு ருமகம்பரிதன் முதலவாகிக் காட்சிமுதலூன
றையுங் கருதிநந்தாய் மாட்சிமைத்த வீராறுமெய்ப்பாடு

முருந்திளமுறுவலும்பொருந்துதலுறினைமெய்யுறுபுணர்ச்சியெய்துத
குறித்தே இவ்விதியால்மயக்கங்காண்க கருத்து) சமயந்தியோனன்உ
ன்னுருவெளி தோற்றத்தைக்கண்டுநிலைதளருகிறான் உன்னுருவெளியை
த்தழுவுகிறான் பிணங்கினையென்றுவருந்துகிறான் பிணக்குநீக்கினவன்
போல்நகைக்கிறான் உருவெளியின்பின்போகிறான் நல்லறிவிழந்திருக்கி
றான் என்றன்னஞ்சொல்லிற்று என்பதாம். (௱௰௬)

புலவுநாறும்வேல்வேந்தர் சேனைப்புணரிகடந்தெதிரற்
றுடவுநிடதக்கடாயானையுனதுவிரகப்பேராற்றி
னலையினிலைகாண்பதரிதாகியந்தோவாழ்ந்துமயங்கியதாற்
சிலைகொணுதலாய்பின்னர்வருமவத்தைசேராதருள்புரியாய்

(இ-ள்) சிலை-வில்வடிவத்தை, கொள்-கொண்ட, நுதலாய்-நெற்றியையு
டையவளே, புலவு(புலால்) நாறல்-நாறும், நாறுகின்றவேல்-வேலைத்தாங
கிய, வேந்தர்-அரசர்களுடைய, சேனை-சேனையாகிய, புணரி-கடலை, கடந்து
தாண்டி-எதிரற்று, எதிரியில்லாமல், உலவும்-திரிகின்ற, நிடதக்க-யானை
களாகிய களிறுனது, உனது-உன்சம்மந்தமாகிய, விரகம்-விரகமென்கிற
பேர்பெயரையுடைய, ஆற்றின்-ஆற்றினது, அலையின்-அலையில், நிலை-நிலை
ய, காண்பரிதாகி-காணமாட்டாததாகிய, ஆழ்ந்து-முழுகி, மயங்கியது-
மூர்ச்சித்தது, அந்தோ-ஐயோ, பின்னர்வரும்-(அம்மயக்கத்தின்பின்)
வருவதாகிய, அவத்தை-(சாக்காடாகிய) அவஸ்தையை, சேராது-அடை
யாமல், அருள்புரியாய்-அருள்செய்வாயாக-எ-று. தொல்காப்பியமெ
ய்ப்பாட்டியல்-௩-சூ-நகையேயழுகையிளிவரன்மருட்கையச்சம்பெ
ருமிதம்வெகுளியுவகையென்றப்பாலெட்டே மெய்ப்பாடென்ப இவ்விதியால்ம
யக்கமாகிய வருட்கைவந்தது மெய்ப்பாடெனக் கருத்து சமயந்தியோனள
னென்னும்யானையானது உனதுகாமக்கடலாற்றில் முழுகிமயங்கியது அ
தற்குமரணமாகியபத்தாமவத்தைச்சாராதருள் புரிவாயாகஎன்றன்னஞ்
சொல்லிற்றுஎன்பதாம் (௱௰௭)

குடங்கையணையிற்பகைவேந்தர்துயிலுங்கொற்றமுற்றத்த
மடங்கலனையபோர்மீளியின்னவாறுமதிமயங்கித்
தடங்கொண்முலையாயெனைத்தூதுநின்பாலவிடுத்தான்றளர்ந்திடேன்
முடிந்ததுவுமிருவீருமுன்னர்ச்செய்தவப்பேற்றால்.

(இ-ள்) தடம்-மலைவடிவத்தை, கொள்-கொண்ட, முலையாய்-முலைகளையு
டையவளே, பகை-தன்னோடுபகைத்த, வேந்தர்-அரசரானவர், குடங்கை-
உள்ளங்கையாகிய, அணையில்-தலையணையில், துயிலும்-நித்திரைசெய்ய
ப்பெற்ற, கொற்றம்-வெற்றிபொருந்திய, முற்றத்து-முற்றத்தையும், மட
ங்கலனைய-ஆண்சிங்கம்போலும், போர்-போர்த்தொழிலையுமுடைய மீளி-அ
க்காளையானவன், இன்னவாறு-இப்படிப்பட்டவிதமாக, மதிமயங்கி-அறி
வுகலங்கி, நின்பால்-உன்னிடத்து, தூது-தூதாக, எனை-என்னை, விடுத்தான்-
அனுப்பினான், தளர்ந்திடேல்-நீவருந்தாதே, இருவீரும்-நீங்களிருவரும்,
முன்னர்-முற்பிறப்பிலே, செய்த-செய்துவைக்கப்பட்ட, தவப்பேற்றால-
தவங்களைப்பெற்றிருக்கையினாலே, அதுவும்-அக்காரியமும், முடிந்ததுமு

டியுபெற்றது-எ-று. (கருத்து) தமயந்தியேநளமகாராசனானவன்இவ்வா றுமதிமயங்கியென்னிடத்தென்னையனுப்பினன்நீவருந்தாதேமுற்பிறப்பி லிருவருஞ்செய்யப்பெற்ற தவத்தாலதுவுமுடிந்ததென்றன்னஞ்சொல் லிற்றென்பதாம். (௩௰௮)

முருகன்வேலுமுக்கண்ணன்முடித்தபுனிற்றுப்பிறைக்கொழுந்து
திருவின்கொழுநன்பாயலுங்கண்டிலகநுதல்பேரகலல்கு
லுருவமாகத்தனித்தகவர்ந்தவுனக்குக்கலுழிமதமொழுகுங்
கரடக்களிற்றுநளனுள்ளங்கவருமாறுவியப்பாமோ.

(இ-ள்) முருகன்-சுப்பிரமணியனது,வேலும்-வேலையும்முக்கண்ணன் பரமசிவனது,முடித்த-முடியிற்சூடப்பட்ட,புனிற்று-புதிய,பிறைக்கொ ழுந்தும்பிறைப்பிள்ளையையும், திருவின்கொழுநன்திருமாலினது-பாய லும்-பாம்பாகியசயனத்தையுமகண்கண்ணினதும், திலகம்பொட்டை யுடைய,நுதல்-நெற்றினது,பேர்-பெரிய,அகல்-பரந்த,அல்குல்-அல்குலி னதும்,உருமாகவடிவடிவங்களா,தனி-தனித்து,கவர்ந்த-வெள்விய,உனக் குனக்கு.கலுழி-கான்யாறுபோல்,மதம்மதநீரானது ஒழுகும்-இழியப் பெற்ற,கரடம் கதுப்பையுடைய,களிறு-களிறுபோலும்,நளன்-நளராச னது,உள்ளம்உள்ளத்தை, கவருமாறு வௌவுமாறு,வியப்பாமோ-ஆச் சரியமாமோ-எ-று. (கருத்து) தமயந்தியேநளமகாராசனதுமனதைவெ ளவுதலுனக்காச்சரியமாமோஎன்றன்னஞ்சொல்லிற்று-என்பதாம். (௯

பொன்னேயமுதேமொழிக்கரும்பேபூந்தாமரையிற்றிருவேநின்
மின்னேரிடைதேய்ந்தறவருந்தவிம்முமுலையெல்லாம
லென்னேதொய்யிற்றொழிலனைத்துமெழுதலாமேயென்றெண்ணி
மன்னேயுனைக்குமெங்களுடன்மதுமார்பொழிலினிடையிருந்தே

(இ-ள்) பொன்னே-தங்கமே,அமுதே-அமுர்தமே,மொழிசொல்லாகி ய-சாரத்தையுடைய,கரும்பே கன்னலே,பூ அழகிய,தாமரை தாமரைமல ரிடத்து,இல்- இல்லாத,திருவே சீதேவியே, நின் உனது, மன்னே மின போலும்,இடை இடையானது,தேய்ந்து-இளைத்து,அற-மிகவும்,வருந்த நோவ, விம்மும் பருகின்றமுலையினல்லாமல்முலைகளிடத்தல்லாமல் தொய்யில்சந்தனக்கோலத்தினதுதொழிலனைத்தும்வேலைமுழுவதும்,எ ன்னேஎன்னாலும், எழுதலாமோயென்று- மற்றொன்றிலெழுதலாமோ வென்றெண்ணி-ஆலோசித்து, மன்னே நளராசனே,மது,வண்டுகளான வை, ஆர்ஒலிசெய்யப்பெற்றிருக்கின்ற, பொழிலினிடை-சோலையின்கண், இருந்து-தங்கி-எங்களுடன் எங்களோடு,உனைக்கும்-இனிச்சொலலுவா ன-எ-று. (கருத்து) தமயந்தியேஉன்னைநளன்மணந்துன்முலைகளிற்றொ ய்யிலெழுதிப்பார்த்துவிபந்துசொல்லுவான்என்பதாம். (௪௰)

இன்பக்கலவிக்கரணங்களியாவுமியற்றியிருவீரு
மன்புற்றவசமுறுமேனியயர்தீர்வதற்கெம்பொலன்சிறையான்
முன்புற்றுயர்வானதிப்புனலின்மூழ்கித்தண்ணென்குறுந்திவலை
நன்கிற்றெறிப்பவீசுதற்குக்காலமணித்தாய்நண்ணியதே

(இ-ள்) இருவீரும்-நளராசனுநீயும்—இன்பம்- சுகத்தைத்தருகின்ற கலவ-புணர்ச்சியினுடைய—கரணங்களியாவும் - கரணங்கள்யாவற்றையும், இயற்றி-செய்து. அன்புற்று- ஒருவர்மேலொருவரன்புமிகுந்து—அவசமுறும்-பரவசப்படுமாறுண்டாகும்—மேனி (உங்க) ளுடம்பினுடைய—அயர்-தளிர்ச்சியானது—தீர்வதற்கும்- நீங்குதற்பொருட்டு—உயர்-உயர்வாகியவானதிஆகாயங்கையினது—புனலின்-நீரின்கண—மூழ்கி-முழுகிவந்து—முன்புற்று-முன்னிருந்து—எம் - எமது—பொலன்-பொன்னுருவமாகிய—சிறையால்-சிறைகளினாலே—தண்ணென- குளிர்ச்சிபொருந்திய—குறுந்திவலை- சிறியதுளிகள்—நன்கின்-நன்றாக—தெறிப்பட- வீசுதற்கு—வீசுதல்செய்தற்கு - காலம்காலமானது—அணித்தாய்-சமீபித்து—நண்ணியது-வந்தது—எ-று. கலவிக்கணங்களாவன-ஆலிங்கனம் (௫) சும்பனம்(௰௧) அமிர்தநிலை ௰௬)நகக்குறி(அ) பற்குறி(அ) குரல்(அ)தாடனம்(அ) ஆக ௬௪)கொக்கோகத்திற்காண்க கருத்து) தமயந்தியே நீங்களிருவரும் புணர்ந்திளைப்புறுந் திருமேனியிலேஆகாசகங்கைநீர்த்துளிபொருந்தியஎன்னிறகுகளினால் வீசுதற்குக்காலஞ்சமீபமாயிற்று என்பதாம். (௱உக)

கொல்லும்வேலுங்கூர்வாளுங்கூற்றுங்கொடிகடல்விடமும்
வெல்லுநெடியகருங்கண்ணாய்வேல்வேந்திடத்தியானவிரைவிற்
செல்லுமளவுநீவருந்தேலசெல்லிற்றிகழ்பூண்வனமுலைகள்
புல்லும்வேட்கைத்தேரூர்ந்துவேந்துன்னகர்ம்புகுவானால்.

(இ-ள்) கொல்லும்-கொலைசெய்கின்ற—வேலும்- வேலையும்—கூர்கூரிய—வாளும்-வாளையும்—கூற்றும்-யமனையும்—கடல்-கடலிற்பிறந்த—கொடிய-தீயவிடமும்—ஆலகாலத்தையும்—வெல்லும் - வெல்லுகின்ற, நெடிய-நீட்சிபொருந்திய—கரு- கரிய—கண்ணாய் - கண்களையுடையவளே—யான்-நான்—வேல - வேலையுடைய—வேந்திடத்து - அரசனிடத்தே—விரைவில்-சீக்கிரத்தில்—செல்லுமளவும்- போமளவும்—நீ-நீ—வருந்தேல்-வருந்தாதே—செல்லின்-போனால்—திகழ்- விளங்காநின்ற—பூண்-ஆபரணத்தையும், வனம்- சந்தனக்கோலத்தையுமுடைய—முலைகள்-முலைகளை—புல்லும்- தழுவுதலைக்குறித்துண்டாகிய—வேட்கை-ஆசையினாலே—வேந்த-அரசனானவன்—தேர்-தேரை—ஊர்ந்து-செலுத்தி—உன்-உனது நகரம்-பட்டணத்திற்புகுவான்வருவான்—எ-று. (கருத்து) தமயந்தியே நீவருந்தப்படாதே நான்போனால் நளன்உனதுநகரத்திற்குவருவான் என்றன்னஞ்சொல்லிற்று என்பதாம். (௱உஉ)

மடைவாய்த்தவழுஞ்சூற்சங்கம்வனசப்பொகுட்டின்மணியுயிர்ப்பப்
பெடைநாரைகடங்கருவென்றுவடைசேர்விடதப்பெருமான்பால்
விடைதாவென்னமடவன்னஞ்சிறகர்நீவிருப்பினொடும்
படைவாணெடுக்கட்பசுந்தோகைமுகமனுரைகள்பணித்தனளால்.

(இ-ள்) மடைவாய்-மடையின்கண்—தவழும் - ஊர்கின்ற—சூல்-கருப்பத்தையுடைய—சங்கம்-சங்குகளானவை—வசனம்-தாமரைமலர்களுடைய—பொகுட்டில்-கர்ணிகையில்—மணி- முத்துக்களை—உயிர்ப்பஈன்றிட-பெடைநாரைகள் பெண்ணாரைகளானவை—தம்- தமதுடைய—கருவென்றுமுட்டைகளென்று அடைசேர்-அடைகின்ற—இடதம்-இ

டதேயத்தையுடைய—பெருமான்பால்-அரசன்கட் (சொல்ல) விடை
உத்தரவை—மடம்-இளமைபொருந்தியே—அன்னம்- அன்னமானது,
தாவென்ன-கொடுவென்றுசொல்ல—சிறகர்(அத)ஞ்சிறகைநீவிதட வி-வி
ருப்பினுெடும்-ஆசையோடும்—படைவாள்-வாட்படைபோலும்—நெடு
ங்கண்-நெடியகண்களையுடைய—பசுந்தோகை - பச்சைமயில்போல்பவ
ள்—முகமனுரைகள்-உபசாரவார்த்தைகளை—பணித்தனள்- சொல்லினு
ள்—எ-று. (கருத்து) அன்னமானது நளனிடத்துச்செல்லஉத்தரவுதா
வென்றுகேட்கத்தமயந்தி உத்தரவுகொடுத்தாள் என்பதாம். (௱௨௩)

இவ்வாறிருந்துநன்மொழிகளியம்பும்வேலையமுதூறுஞ்
செவ்வாய்மடந்தைசீறடியின்சுவடுநோக்கிச்சிலதியரு
மைஅஞ்சனநெடுங்கட்டோழியரும்வரக்கண்டயிர்ப்பரிவொன்று
வெவ்வாய்வடிவேல்வேந்தன்பாலன்னம்விளைவினேகியதே.

(இ-ள்) இவ்வாறிருந்து- இவ்விதமாயிருந்து—நன்மொழிகள் - நல்ல
வார்த்தைகளை—இயம்பும் - வேலைசொல்லிமுடித்தசமயத்தில்—அமு
து, அமிர்தமானது, ஊறும்- சுரக்கின்ற—செவ்வாய் - செய்யவாயையு
டைய—மடந்தை-தமயந்தியினது— சீறடியின- சிறியவடிகளது—சுவடு-
சுவட்டை—நோக்கி-பார்த்துக்கொண்டு—சிலதியரும்-தாதிகளும்—மை
அஞ்சனம்பொருந்திய—வாள்-வாள்போலும்—நெடு - நெடிய—கண்-க
ண்களையுடைய—தோழியரும்-பாங்கிகளும்—வர- தேடிக்கொண்டுவர,
கண்டு-(அவர்களை)ப்பார்த்து—இவர் - இம்மங்கையர்—அயிர்ப்பொன்
று-சந்தேகிப்பாரென்று—நினைத்து-வெவ்வாய் - வெவ்வியவாயின்கண்,
வடிகூர்மைபொருந்திய-வேல்-வேலையுடையவேந்தன்பால்—அரசனிட
த்து, அன்னம்-அன்னமானது—விளைவில்-விளைவிலே—ஏகியது-போ
யிற்று—எ-று. (கருத்து) தமயந்தி இவ்வாறுசொல்லுகையில் பாங்கி
யருந் தோழியரும் வருதலைக்கண்டு அன்னமிவர்கள் சந்தேகிப்பார்க
ளென்று நளனிடத்துச்சென்றது—எ-று. (௱௨௪)

அன்னமுரைத்தமொழியமுதமருந்தித்தெவிட்டாவாரமுதக்
கன்னற்குதலையிருகண்ணுங்கருத்துமகன்பின்றொடர்ந்தேகப்
பொன்னம்பாவைதழற்பெய்தமெலன்னவுருகிப்புலம்புகொண்டாங்
கின்னற்கடலின்கரைகாணுதிருந்தாளிருந்தவேலைதனில்.

(இ-ள்) அன்னம்-அன்னத்தினுல்—உரைத்த- சொல்லப்பட்ட—மொ
ழி-சொல்லாகிய—அமுதம்-அமிர்தத்தை—அருந்தி-உட்கொண்டு, தெ
விட்டா-வெறுக்காத—ஆர்-உண்டற்குரிய—அமுதம்- அமிர்தமும்—க
ன்னல்-சர்க்கரையும்போலும்—குதலை - மழலைச்சொற்களையுடையவள்,
இருகண்ணும்(தன்)னிருக்கட்பார்வையும்— கருத்தும்- மனமும்—அத
ன்பின்-அவ்வன்னத்தின்பின்—தொடர்ந்து-பற்றிக்கொண்டு—ஏக-போ
க—பொன்னம்பாவை-பொன்மயமாகியபாவையை—தழல்-நெருப்பின்
கண்—இரங்குதல்-கொண்டு—ஆங்கு-அவ்விடத்து—இன்னல் - துன்ப
மாகிய—கடலினது-கரைகரையை, காணுது-காணுமல்—இருந்தாள் - இ
ருந்தனள்—இருந்தவேலைதனில்அப்படியிருக்கசமயத்தில்—எ-று. (க
ருத்து) தமயந்திகருத்துங்கண்ணும்அன்னத்தின்பின்செல்லத்துன்பக்
கடலின்கரைகாணுதிருந்தசமயத்திலென்பதாம். (௱௨௫)

ஆயவெள்ளம்படமெய்தியனிச்சமலரின்றாதுரைப்பச்
சேயநிறமாஞ்சீறடிகள்கன்றச்செங்காலனந்தொடர்ந்து
மேயதென்னமதிகொல்லோமுருகுவிம்மநறவுமிழுந்
தூயமலர்ப்பங்கயப்போதை துறந்தெமமனையிற்புகுந்திருவே

(இ-ள்) ஆயவெள்ளம்-வெள்ளம்போலு மங்கையர் கூட்டமானது—படை-பக்கத்தில்—எய்தி-அடைந்து—முருகு-வாசனையானது—விம்ம பெருக-நறவு—தேனை-உமிழும்—கக்குகின்ற-தூயமலர்—பரிசுத்த மலராகிய-பங்கயப்போதை—தாமரைப்பூவை-துறந்து—விட்டு-எம்மனையில்-எனதுவீட்டின்கண்—புகும்-வந்த—திருவே-சீதேவியே— அனிச்சமலரின்-அனிச்சப்பூவினது—தாது-மகரந்தமானது, உரைப்ப-உறத்த சேயநிறமாம்-சிவப்புநிறமாகின்ற, சீறடிகள்-சிறியவடிகள்—கன்ற-வாட்ட செங்கால்-செய்யகால்களையுடைய—அனம்-அன்னத்தை—தொடர்ந்து பிடிக்கும்படியாகப்) பின்சென்று—மேயது-இங்கே யடைந்ததற்குக் காரணமாயது—என்னமதி-என்னவறிவு—எ-று. தொல்காப்பியம் - விளிமரபியல்—௰-சூ-அண்மைச்சொல்லேயியற்கையவாகும் இவ்விதியால்திருவேஎன்றதண்மைவிளியியல்பாயிற்று(கருத்து)தமயந்தியேஅன்னத்தைத்தொடர்ந்துசென்றதென்னமதி யென்றார்கள் பாங்கி மார்கள் எ-ம். (௱௨௬)

மையன்மதவெங்களியானைவீமன்வரத்தால்வருந்திருவே
கையுமுகமுமரிபரந்தகண்ணுமுருகுகொப்பளிக்கும்
செய்யகமலமெனவீழு மளிகளோச்சுந்திறத்தானோ
தொய்யிலெழுதுந்தடமுலைகள் சுமந்தோமேனி துவண்டதுவே

(இ-ள்) மையல்-மயக்கஞ்செய்கின்ற—மதம்-மதத்தாலுண்டாகிய—வெங்களி-வெவ்வியசெருக்கையுற்ற—யானை-யானையையுடைய—வீமன் வீமராசனது—வரத்தால்-வரத்தினாலே—வரும்(மகளாய்ப்)பிறந்த—திருவே-திருமகளே—கையும்-உங்களையும்—முகமும்-முகத்தையும்—அரி இரேகையானது—பரந்த-படரப்பெற்ற—கண்ணும் கண்களையும்—முருகு-தேனை—கொப்பளிக்கும் உமிழ்கின்ற—செய்ய கமலமென - செந்தாமரைமலர்களென்றுமயங்கி—வீழும்(வந்து) வீழ்கின்ற—அளிகள்வண்டுகளை—ஓச்சுந்திறத்தானோ-ஓட்டுஞ்செயலாமோ—தொய்யில்- சந்தனக்கோலத்தை—எழுது-எழுதப்பெற்ற—வடம்-மலைபோலும்— முலைகள் முலைகளை—சுமந்தோ-தாங்கியதோ—மேனி-உடம்பானது—துவண்டது-வாடியது—எ-று. (கருத்து வீமராசன் பெற்றெடுத்த மயந்தியேஉனதவயத்தாமரைகளில்விழுந்தவண்டுகளை ஓட்டும் வகையினாலோ உனதுதனதனங்களைச்சுமந்தோதிருவுருவந்தளர்வடைந்ததுஎன்றார்கள் எ-ம். (௱௨௭)

அன்னந்தொடருமயர்வதுவோவபலார்விழியூறடைந்ததுவோ
பன்னுமமொழில்வால்வாய்ப் பல்வலகை யெதிர்ந்தே மருட்டப் பயந்து
பொன்னங்கிளியேமடமயிலேபுகல்வாய்க்குயிலேமீன்கமல
மன்னுந்திருமானேயன்னவணங்குவாய்ந்தமரகதமே

(இ-ள்) பொன்னங்கிளியே-அழகியபொற்கிளியே—மடமயிலே இள மயிலே—புகல்-கூவும்—வாய் வாயையுடையகுயிலே-குயில்போல் பவளே—பூ-அழகிய—கமலம்-தாமரையில்—மன்னும்-நிலைபெற்றிருக்கும திருமாளையன்ன-இலக்குமிக்கொப்பான—அணங்கு-அழகு—வாய்ந்த பொருந்திய—மரகதமே-மரகதம்போல்பவளே—அன்னம்-அன்னப்பறவையைப்பற்றி—தொடரும்-தொடர்ந்த—அயர்வதுவோ- வருத்தமோ அயலார்-அயலவர்களது—விழியூறு-கண்ணேறு—அடைந்ததுவோ-சேர்ந்ததுவோ—பன்னும்செலலும்-பொழில்சோலையின்—வாய்- இடத்து—பல்லவகை-பலபேய்களை—எதிர்ந்து- எதிர்ப்பட்டு—மருட்டவெருட்ட—பயந்தோ-பயமடைந்ததுவோ(அம்மேனி—எ-று. (கருத்து) தமயந்தியே அன்னத்தின்பின்சென்றவருத்தமோ அயலார்கண்பட்டதோபேயால்வந்தகோளோ என்பதாம் இக்கவிசிலபுத்தகங்களி லிருக்கின்றது ஆகையாறசேர்த்துக்கொண்டனம். (௱௨௮)

தாதுகமழுமலர்த்திருவேயென்னச்செவிலித்தாயர்பலர்
பூதியணிந்தாலத்திநீர்சுழற்றித்தெய்வம்பாராலப் போற்றிக்
காதன்மயிலைக்கொடுவந்துகடிமாமனையிற்பசுந்தேறற
சீதமலர்மெல்லணைமீதுசேர்த்தாரவளுஞ்*செயடிழந்தாள்

(இ-ள்) தாது-மகரந்தமானது—கமழும்-மணக்கப்பெற்ற—மலர்தாமரைப்பூவிலுள்ள—திருவே-திருமாதே—என்ன-என்று சொல்ல—பலர்-பலராகிய—செவிலித்தாயர்-வளர்த்தகாய்மாரானவர்—பூதிதிருநீற்றை—அணிந்து-(நெற்றியி)லிட்டு—ஆயிளிநீர்-ஆலாத்தியை—சுழற்றி சுற்றி—தெய்வம்-குலதெய்வத்தை—பாராய்-பிரார்த்தித்து— போற்றி-துதிசெய்து—காதல்-ஆசையைத்தருகின்ற—மயிலே-மயில் போல் பவளை—கொடுவந்து-கொண்டுவந்து—கடி-காவலையுடைய— மா-பெரிய—மனையில்மாடத்தின்கண்—பசுந்தேறல்-பசியதேனையும்— சீதம்- குளிர்ச்சியையுமுடைய—மலர்-மலர்களாகிய மெல்-மெல்லிய அணைமீது-சயனத்தின்மேல்—சேர்த்தார்-கிடத்தினர்— அவளும்-அத்தமயந்தியும்—செயல்-(தன்)செய்கைகளை— இழந்தாள்-இழந்தனள்—எ-று. தொல்காப்பியமெய்ப்பாட்டியல்-ங-கு நகையேயழுகையிளிவரன்மருட்கை-யச்சம்பெருமிதம் வெகுளியுவகையென்றப்பறலெட்டே மெய்ப்பாடென்ப இவ்விதியால்செயலிழந்தாளென்றது-மருட்கையாகியமெய்ப்பாடு வந்த வாறுணர்க(கருத்து)என்றுசொல்லவளர்த்ததாய்மார்கள்தமயந்திக்குவிபூதியணிந்து ஆலஞ்சுற்றிக்குல தெய்வத்தைப்போற்றி மனையிற் கொண்டுவந்துமலரணையிற் சேர்த்தார்களென்பதாம, (௱௨௯)

ஈங்கிவ்வாறுமயில்வருந்தியிருப்பவினவண்டிசைமிழற்றுந்
தேங்கொளபொழில்வாய்முகையவிழ்ந்தசெந்தேனிறைக்கு*மலர்வாவி
பாங்கரமளிமிசைவிரித்தபனிமென்போதுகரியவள் [ய
ரோங்கற்றிணிதோள்வயவேந்தையன்னங்கண்ணுற்றுவந்ததால்.

(இ-ள்) மயில்மயில்போல்பவள்—ஈங்கு-இக்குண்டினபுரத்தின்கண் இவ்வாறு இவ்வண்ணமாக—வருந்தி-காம காமநோயால்)வருந்திஇருப்பஇருக்க(—அன்னம்-அன்னமானது, இனம்-கூட்டமாகிய— வண்டு-வ

ண்டுகளானவை—இசை இராகத்தை—மிழற்றும்-பாடப்பெற்ற—தே கம் வாசனையை—கொள்-கொண்ட—பொழில்வாய்சோலையின் கண்—முகை-அரும்புகளானவை—அவிழ்ந்து-விரிந்து—நெய்த்தேன் - செய்ய தேனினாலே—நிறைக்கும்-நிறைக்கப்பொருந்தின—மலர் -மலர்களையுடைய—வாவி-தடாகத்தினது—பாங்கர்-பக்கத்தில்—அமளிமிசை-சயனத்தின்மேல்—விரித்த-பரப்பட்ட—பனிகுளிர்ச்சிபொருந்திய—மெல்-மெல்லிய—போதுமலர்களும்-கரிப—கருகும்படியாக-வளர்-படுத்திருக்கின்ற—ஒக்கல-மலைபோலும்—திணிதிட்பமுற்ற—தோள - தோள்களையும்—வயம்-வெற்றியையுமுடைய—வேந்தை-நளராசனை—கண்ணுற்று-பார்த்து—உவந்தது-மகிழ்ந்தது— —எ-று *சொன்னூல விளக்கம் சொல்லணியியல்மறிநிலையுரிமைமாறணியாயவை-குமுமுதல காரணங் குறிப் பொருளைக்கூறிற்றே-இவ்விதியால் மலர்வாவியென்றது முதற்பொருளாகியதாமரையைநீக்கிச்சினைப்பொருளைக்காட்டினதால் முதன்மறிநிலையலங்காரமாயிற்று கருத்து)இவ்வாறுதமயந்திகுண்டினபுரத்தில வருத்தமுற்றிருக்க அன்னமானது நளனைக்கண்டு மகிழ்ச்சியடைந்தது எ-ம் இதுபுராணிகர்கூற்று. (௱௰)

பொன்னஞ்சிறையவடவன்னம்போதுமுன்னர்வேல்வேந்து
தன்னந்தனியோதுணையென்னும் தடங்கண்பொருந்தாதோவென்னு
மின்னூர்ந்தேகியவன்னமீளாதிருந்ததென்னென்று
மின்னினுருவுவெளிப்படுதலைநோக்கிநோக்கிவெய்துயிர்க்கும்

(இ-ள்) வேல்-வேலையுடைய—வேந்து-நள ராஜனானவன்—பொன்-பொன்மயமாகிய—அம்-அழகிய—சிறகுகளையுடைய—மடம் இளமை பொருந்திய அன்னம்-அன்னமானது—போதுமுன்னர்சொல்லுதற்கு முன்—தன்னந்தனியோ-தன்னந்தனியாகவிருக்கையோ துணையெனனும் எனக்குத்துணையென்றுசொல்லுவான்—தடங்கண் விசாலம் பொருந்திய கண்களையுடையவள்—பொருந்தாதோவென்னும் உடன் படாளோவென்றுசொல்லுவான்—தூது தூதாக—ஏகியசென்ற—அன்னம் அன்னமானது—இன்னும்-இதுவரையிலும்—மீளாதிருந்தது-திரும்பி வாராமைக்குக் காரணம்—என்னென்னும்-யாதென்றுசொல்லுயான் மின்னின்-மின்னல்போல்பவளது—வெளிப்படுதல்-வெளியிலேதோன்றுதலை—நோக்கிநோக்கி-பார்த்துப் பார்த்து—வெய்துயிர்க்கும் - கடுமூச்செறிவான்—எ-று. (கருத்து அன்னமேபோகுமுன்னம் நளனானவன்எனக்குத்தனித்திருத்தலோ துணை தமயந்தியுடன்படாளோ அன்னம் வாராதிருந்ததென்னமோவென்று உருவெளியைநோக்கிக் கடுமூச் செறிவான்என்பதாம். (௱௰௧)

மீண்டதன்னமெனதெண்ணிவினவு மொருகாழ்மணிமுத்தம் பூண்டபொம்மன்முலையென்னேபுகன்றதென்று மருந்தாமற் காண்டல் செயினுங்கேட்பினுமென்னுள்ளமயக்குங்கனிநரவைத்-தூண்டல்செய்யாமணிவிளக்கைக்கொணர்ந்தால்கொல்லோமெனச்*சோரும்.

(இ-ள்) அன்னம்-அன்னமானது—மீண்டதென-திரும்பிவந்ததென்று—எண்ணி-நினைத்து—வினவும் வினவுவான்—மணிஅழகிய மூத்தம் முத்துக்களையுடைய—ஒருகாழ்-ஒருசரத்தை-பூண்ட மேற்கொண்ட பொம்மல பொலிவுபொருந்திய—முலை-முலைகளை யுடையவள்— என்னை என்னசெப்பினையோ புகன்றது சொல்லினாள்—என்னும்-என்று சொல்வான்—அருந்தாமல் உண்ணப்படாமல்—காண்டல்செயினும் கண்டாலும்—கேட்பினும்-கெட்டாலும்—என்-உனது உள்ளம் - மனத்தை—மயக்கும்-மயக்காநின்ற,களிதறவை-தேன்குழம்பை— தூணடல் செய்ய-தூண்டப்படாத—மணிவிளக்கை-இரத்தின தீபத்தை-கொணர்ந்தாய் கொல்லோவென-கொண்டுவந்தாயோவென்று—சோரும்-தளருவான்—எ-று, தெனல்காப்பியமெய்ப்பாட்டிசல-எ-று, புதுமை பொருமைசிறுமையாக்கமொடுமதிமைசாலா மருட்கைநான்கே இவ்விதியால் சோருமென்றது மருட்கையாகியமெய்ப்பாடாகும்(கருத்து)நளனவன் அன்னம்வந்ததென்பான்தமயந்தியென்னசொன்னாளென்பான்தமயந்தியைக்கொண்டுவந்தாயோவென்பான்என்பதாம். (௱௩௨)

திருந்தார்மௌலிமணியுரிஞ்சித்திகழுங்கழற்காற்றேர்வேந்தே
வருந்தேல்வருந்தேனீ வேண்டின்வாராதன்வுமுளகொல்லோ
முருந்தேர்முறுவன்முகப்பெற்றுவந்தேனென்னமூர்ச்சைவெளிந்
தருந்தாவமுதமருந்தினன்போற்பலகாற்கேட்குமகமகிழும்.

(இ-ள்) திருந்தார்-பகைவருடைய—மௌலி - மகுடத்தி லுள்ள—மணி நவமணிகளை—எரிஞ்சு தேயக்க—திகழும்விளங்காநின்ற—கழல் வீரக்கழலையுடைய—கால்-பாதத்தையும்—தேர்-மகாரதத்தையுமுடைய—வேந்தே-அரசனே—வருந்தேல் வருந்தேல் வருந்தாதே வருந்தாதே—நீ- இப்படிப்பட்ட) நீ—வேண்டின்பெறவிரும்பினால்—வாராதனவும் (உனக்குக்) கிடையாதபொருள்களும்உளகொல் (உலக)த்திலுண்டோ—முருந்தோமயிலிறகினடிபோலும்—முறுவல்-பற்களையுடைய,தமயந்தியினதுமுகம்-நோக்கை,பெற்று,அடைந்து,வந்தேனென்னும் வந்தேனென்றவளவில்,அருந்தா முன் உண்ணப்பட்டில்லாத, அமுதம் தேவாமிர்தத்தை, அருந்தினன்போல்-உண்டவன்போல், மூர்ச்சைதெளிந்துமூர்ச்சைதீர்ந்து,பலகால்பலதரம்,கேட்கும்கேட்பான், அகம்உள்ளத்தின்கண்,மகிழும்களிப்பான்—எ-று(கருத்து)நளச்சக்கரவர்த்தியே வருந்தாதேவருந்தாதேநீவேண்டினால் வாராதபொருள்களுளவோ தமயந்தி திருமுகம்பெற்றுவந்தேனென்றன்னஞ் சொன்ன வுடன் மூர்ச்சை தெளிந்தெழுந்துநளன்பலகால்கேட்டுமனமகிழுவானென்பதாம் ( )

அன்னமுரைத்தவின்சொல்லினாவி தாங்கியதனோடு
பின்னுமடமான்பேரழகும்பெருகுதயவும்விளம்பியது
மின்னுமுரைத்தியுரைத்தியெனக் கேட்டங்கிவவரறிவனிருப்ப
மின்னுண மருங்குறுயரமுமேல்விளைந்தவாறும்விளம்புவாம்

(இ-ள்)அன்னம் - அன்னத்தினால்—உரைத்த சொல்லப்பட்ட—இன்சொல்லின் - இனிய சொற்களால்—ஆவி உயிரை—தாங்கி பொறுத்திருந்து — பின்னும் - (அதற்குப்) தன்னும்—மட மான் - இள

மைபொருந்தியமான்போல்பவளது—பேரழகும்- பெரியவழகையும்—பெருகுதுயரம்(காமத்தாலவளிடத்தே)வளர்கின்ற - துன்பத்தையும்—விளம்பியதும்-(தன்னைக்குறித்துஅவளாற்)சொல்லப்பட்டசெய்தியையும்—இன்னும்-இன்னமும—உரைத்தி-யுரைத்தியேனு—சொல்லு-சொல்லென்று—கேட்டு-வினவிக்கொண்டு—அதனோடு-அவ்வன்னத்தோடு இங்கு-இவ்விடத்தே—இவ்வாறு-இவ்விதமாக, இவன்-அந்நளன்—இருப்ப-இருக்கும்போது—(உடைசாகி மின்-மின்போலும்—நுண் - நுண்ணிய—மருங்குல் - இடையையுடையவளாகிய - தமயந்தியினது—துயரமும்-துன்பத்தையும்—மேல்-பின்பு, விளைந்தவாறும்-நடந்தசெய்தியையும்—விளம்புவாம - அவற்(யாம்) சொல்லுவாம—எ-று, *[௧]தொல்காப்பியம்வினையியல்-உசு-சூ-றள-முன்னிலைக்கிளவி-இ-ஐயாயெனவருஉமூன்று, மொப்பத்தோன்று மொருவற்குமொன்றற்கும இவ்விதியால் உரைத்திஎன்றது முன்னிலையொருமையிகரவிகுதி கருத்து அன்னஞ்சொன்ன இனியசொற்களால் நளமகாராசனனவ்வுயிரைவிடாதிருந்து தமயந்தி யென்னசொன்னு ளின்னஞ்சொல்லு சொல்லென்றுகேட்டு நளனிருக்கத்தமயந்தி படுந்துயரத்தைச்சொல்லுவாம் என்பதாம் இதுபுராணிகர்கூற்று. (௱௩௪)

அன்னத்தைதூதுவிட்டபடலம்-முற்றிற்று.

௨

கைக்கிளைப் படலம்.

* கைக்கிளையென்பதுஒருதலைக்காமம் அது ஆண்பாற்கைக்கிளையும் பெண்பாற்கைக்கிளையும எனஇருவகைப்படும்.

அவற்றுள் இதுபெண்பாற்கைக்கிளையாம்

கை-சிறுமை, கிளை-உறவு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொங்குவிம்முகோதையே கோதைதாழவாண்முகம்
பங்கயத்தைமற்றோர்பங்கயந்துவைத்தபாண்மைபோ
லங்கைசேர்த்திமைக்கநீலவாளிசிந்தவைகிய
மங்கைமெனமுலைத்துமாரன்வாளியேவினன்.

(இ-ள்) கொங்கு - வாசனையானது—விம்முவிரியப்பெற்ற - கோதையோடிபூமாலையோடு—கோதை-கூந்தலானது, தாழ-அவிழ்ந்துதொங்கவும்—பங்கயத்தை-ஒருதாமரைப்பூவை—மற்றோர்பங்கயத்து- மற்றொருதாமரைப்பூவிலே—வைத்தபான்மைபோல்- வைத்ததன்மைபோல்—வாள்-ஒளிபொருந்திய, முகம்-முகத்தை, அங்கை-உள்ளங்கையிலே, சேர்த்திவைத்து, மை-மையெழுதப்பெற்ற, கண்-கண்களிலிருந்து, நீலம்-க

ரிய, ஆலி-நீர்த்துளிகளானவை, சிந்த-உதிரவும், கைகிய-இருக்கின்ற, மங்கை-தமயந்தினுடைய, மென்முலைத்தடத்து-மெல்லியமுலைகளிடத்து, மாரன்-மன்மதனானவன், வாளி-பூவம்புகளை, எவினான்-செலுத்தினான் எ-று. * அகப்பொருள்விளக்கம் அவற்றுள் கைக்கிளையுடையதொருதலைக்காமம் கருத்து) தமயந்தி கனதனத்திடத்து மன்மதன்கணைதொடுத்தான் என்பதாம், (க)

செப்புநேர்முலைக்கண்வேனில்வேடொடுத்ததேமல
ரப்புமாரிசாமவெம்மை செய்யவாற்றலாமையா
லெப்புவிக்குப்வேந்தெழிற்கடற்படிந்துமீண்டுமால்
வெப்புநோயர்நீரின்மூழ்கின்வெம்மையாறுமோகொலாம்

(இ-ள்) வேனில்-வசந்தகாலத்திற்குரிய, வேள்-மன்மதனால்-தொடுத்த-செலுத்தப்பட்ட, தேமலர்-வாசனைபொருந்திய மலராகிய அம்பு (அம்பாகிய) நீரினது—மாரி-மழையானது, செப்புநேர்-செப்பும்போலும் முலைக்கண்-முலைகளையுடையவளாகிய-தமயந்தியிடத்து, காமவெம்மை காமசுரத்தை, செய்ய-உண்டாக, ஆற்றலாமையால்-பொறுக்கமாட்டாமையால், எப்புவிக்கும்-எல்லாத்தேசங்களும், வேந்து- அரசனாயுள்ளானாகியநளனது, எழில-அழகாகிய, கடல் கடலுள்ளே படிந்தும்-முழுகியும், மீண்டும்-அக்காமசுரமானது அவளுக்குபுகும், வெப்புநோயர்-சுரவியாதியையுடையவர், நீரில்-நீரினுள், மூழ்கின்-முழுகினால், வெம்மை அர்ச்சுரமானது, ஆறுமேகொல்-தீருமோ—எ-று, (கருத்து) தமயந்தியானவள் காமாக்கினியால் நளனழகென்னுங்கடலிற்படிந்தும் அவளுக்குக்காமக்கனல்மிகும்-என்பதாம், (உ)

அல்லலுற்*றழுங்கும்வாடிமாவிசோருமெல்லிதழ்ப்
பல்லவங்கடீயுமாறுபாயலிற்படுத்திடு
மொல்லையிற்பதைக்குநெட்டுயிர்ப்புவீங்கும்வார்கழை
வில்லிவாளிதன்னையார்விலக்குவார்கொலென்னுமால்

(இ-ள்) அல்லலுற்று-துன்பமுற்று—அழுங்கும்-வருந்துவாள் வாடும் வாடுகள்—ஆவிசோரும - உயிர்சோர்வாள—மெல்லிதழ்-மெல்லியபூவிதழ்களும்—பல்லவங்கள்-தளிர்களும்—தீயுமாறு - (தனதுடல்வெப்பத்தால்) கருகும்படியாக—பாயலில்-சயனத்தின்கண்—படுத்திடும்-படுப்பாள்—ஒல்லையில்-விரைவில்பதைக்கும்- துடிப்பாள்—நெட்டுயிர்ப்பு வீங்கும் பெருமூச்செறிவாள், வார்கழிவில்லி- நெடியகருப்புவில்லையுடைய மன்மதனது—வாளிதன்னை-அம்பை—யார்-யாவர்—விதக்குவார் விலக்கவல்லவர்என்னும-என்றுசொல்லுவாள். எ-று *தொல்காப்பியம - மூப்பேபிணியேவருத்தமேன்மையோடியாப்புறவந்தவிளிவானுங்கே-இவ்வியியல்அழுங்கும்என்றவருத்தமாகியமெய்ப்பாடறிக கருத்து) தமயந்தியானவள மன்மதபாணத்தையார்விலக்குவார்கள் என்றுசொல்லுவாள என்பதாம், (௩)

ஐம்மறந்தநீலவொண்கண்வார்புனற்சொரிந்தியாழ்
கைம்மறந்தகூட்டெலெண்ணிமெல்விரல்கள்கன்றின

பொம்மல்வெம்முலைத் தடங்கலன்றுறக்கபூமறந்
தம்மெலோதிசேர்ந்ததுள்ளமார்வமோடழிந்ததே

[இ-ள்] நீலம்-கருங்குவளைமலர்போலும், ஒள்-ஒள்ளிய, கண் கண்களானவை, வார்-தாரையாயொழுகின்றபுனல்-நீரை, சொரிந்து-பொழிந்து, மை-அஞ்சனத்தை, மறந்த-மறந்தன, கை-கைகளானவை, யாழ்-வீணை (வாசித்தலை) மறந்த-மறந்தன, கூடல்கூடற்-கழிகளை, எண்ணி-தொட்டெண்ணி, மெல்-மெல்லிய, விரல்பிள-விரல்களானவை, கன்றின-யாடின, பொம்மல்-பொலிவுபொருந்திய, வெம்-விருப்பத்தைத்தருகின்ற, முலைத்தடம்-முலைகளினிடங்களானவை, கலன்-ஆபரணங்களை, துறந்த-நீத்தன, ஆம்-அழகிய, மெல்-மெல்லிய, ஓதி-கூந்தலானது, பூமலரை, மறந்து-மறந்து, சேர்ந்தது-தளர்ந்து, உள்ளம்-நெஞ்சமானது, ஆர்வமோடு-ஆசையோடு-கூட, அழிந்தது-நிலைகெட்டது-எ-று. தன்மையலங்காரம்-பசப்புந்தொழிலும்பயனுமென்றிவற்றினுள் எப்பொருளோடுபொருள்புணர்ந்தொப்புமைகோடற்கேற்புடைத்தமை-இவ்விதியாலீவ்வாசகமெனறகப்படுபுவமையலங்காரம்-கருத்து-தமயந்திகண்கள்மையமறந்தன-கைகள்வீணையைமறந்தன-விரல்கள்கூடற்குறியெண்ணிவாடின முலைகள்ஆபரணங்களைநீத்தன-கூந்தல் பூமறந்துசேர்ந்தது நெஞ்சமானசையிலழிந்தது-எ-ம். ௯

மழைமதர்க்கண்முலைகள் செய்யமார்பனைத்துமென்மைநே
ரிழைபுகப்பெறாவிமயியோபெறக்கவர்க்கதாற்
கழைகுழைத்துமாரனெய்க்கணையினுள்ளழிந்துபோய்
நுழைவதற்கிடம்பெறாதுகாய் துதைத்துமீளுமால்

[இ-ள்] மழைகுளிர்ச்சிபொருந்திய, மதர் செருக்கையுற்ற, கண்கண்களையுடையவது, முலைகள்-முலைகளானவை, செய்யபிலப்பாகிய, மார்பனைத்தும்-மார்பிடமுழுதையும், மென்மைநேர்-மென்மையுநேர்மையும்பொருந்திய, இழைஒருநூலும், புக-நுழைதற்கு, பெறாது-சந்தில்லையாக, விம்மிபருத்து-ஏபெறஅழகுபெற, கவர்ந்ததால் வெளியினதால், கழை-கருப்புவில்லை, குழைத்து-வளைத்து, மாரன்மன்மதனால், எய்த-செலுத்தப்பட்ட, கணையின் அம்புகளால், உள்ளம் நெஞ்சமானது, உடைந்துபோய்-உள்ளுடைந்து, நுழைவதற்கு-அவ்விருமுலைகளுக்குமிடையேபுகுந்துவெளிப்படுதற்கு, இடம்பெறாது-வழிபெறாமல், காய் அசிறிது, உதைத்து-அவற்றினிடையையுதைத்து, மீளும்-திரும்பும்-எ-று. -கருத்து-தமயந்திமுலைகள் மிகவும்பூரித்ததால்மன்மதபாணத்தைக்காமற்றிரும்பும்-என்பதாம். ௰

கழித்தகூடல்கூடுறாதுநீர்சொரிந்துநாடொறு
பழித்தகண்கடியுலயமேலைமணிதயங்குமார்மதத்
திழைத்தவர்முலைதிளைப்பவெய்துபோழ்திலிறைவனை
விழித்துநீடக்குமாயமென்கொலென்றுவெலியுமால்

[இள] கழித்தகழிக்கப்பட்ட, கூடல்கூடற்-கழியானவைகூடுறாதகூடாமற்போக, நீர்நீரை, சொரிந்துபொழிந்து, நாடொறும்தினந்தோறும், அ

மே

ழித்த- கொடுத்துக்கொண்டுவந்த, கண்கள்கண்களை, துயிலும்தூக்கப் பெறுகின்ற,வேலை காலத்திலே, அணிஆபரணங்களால், ஈயங்கும்-விளங் காநின்ற,மார்பத்து-என்மார்பிலுள்ள, இழைத்த-செய்யக்கப்பட்ட, ஆரம் சந்தனத்தையுடையமாலை'என்றமாலைகளை, கிளைப்ப-கழுவ, எய்துபோழ்தி ல் அடைகின்றசமயத்தில்,விழித்து-இமைகளைத்திறந்து, நீ/நீங்கள், இறை வனொஎன்னுடையதலைவனாகிய நளராஜனை, அடக்கும், மறைக்கின்ற தாயி யமாய-வம்சவிகதைபானதுஎன்கொலென்றுளத்தன்மைக்காகுமென் றுசொல்லி,மெல்லியும், தளர்வாள்-எ-று* தொல்காப்பியப்பெயப்பாட்டி யல்டு-கு, இளிவேயிழவேயசை வேவறுமையென்றிளிவில கொள்கைய மூலகாண்கே-இவ்விநியால்மெலியும் என்றது அமுனையாகியமெய்ப்பா ட்டையுத்துணர்க- கருத்து-கண்களைநித்துயிலேகளனைக்கூடுஞ்சம யத்திலே விழித்துக்கொண்டு அந்தகளனையடக்கும் வஞ்சனையென்னவெ ன்பாள்என்பதாம். ௬

வாட்டடங்கண்மானையாவிவாட்டமாரன்வார்சிலை
பூட்டியெய்தபகழிதைத்தபுழைநுழைந்துதென்றல்போ
யீட்டுகின்றகாமவெந்தழற்பிழம்பையெரியெழ
மூட்டிமேலெழுந்ததாகுநெட்டுயிர்ப்புமுடிவினே

[இ-ள்] நெட்டுயிர்ப்பு-பெருமூச்சானது, மாரன்-மன்மதனாகிய-வேடு னானவன்,வாள்-வாள்போலும், கடம்-விசாலம்பொருந்திய,கண் -கண்க ளையுடையவளாகிய மானை-மானை, ஆவி-உயிரினைகணை, வாட்ட-வருத்துத ற்கு,வார்சிலை- நெடியவில்லினை, பூட்டி-தொடுத்து, எய்த-செலுத்தப் பெற்றபகழி-அம்புகளானவை,தைத்ததைத்ததாகிய, புழை- துளை களிலாநுழைந்துஒருவருமறியாமல்-புகுந்துபோய் சென்றுகூட்டுகின்ற கட்பாசச் சேர்க்கப்படுகின்ற,காமம காமமாகிய,வெம்-வெப்பம்பொருந் திய,தழல் நெருப்பினதுபிழம்பைசெறிவை எரியெழ-எரியமூட்டி-மூள வித்து,முடிவின்-அச்செய்கைமுடிவில், மேல்புறத்தேஎழுந்ததுபுறப்ப ட்டதாகிய, தென்றல்தென்காற்றே, ஆகும்-ஆகும், நெட்டுயிர்ப்பெருமூ ச்சானது-எ-று இலக்கணத்திரட்டு-சொல்லினை மடக்கலேசென்மடக்க ணியாம்-கருத்து-தமயந்திபெருவிசானதுமன் மதபாணத்தைத்தபுழை யிலே தென்றற்காற்றுன் நுழைந்தக்கினியை மூள்வித்து மேலெழுந் ததெப்பாகும்என்பதாம், ௭

௮ செயிர்ப்பின்மாரனெய்யவாவியில்லையுண்டுசிறிதென
வயிர்ப்பவாடிவிரகவெம்மையழலின்மூழ்கியருருமம
பயிர்பில்கோதைநெஞ்சணேய்கள் பரிவினேடுமழலுநெட்
டுயிர்ப்புதைதகதோகடுக்கலுற்றதுத்தரீயமேல்

[இ-ள்] மாரன் -மன்மதனானவன், செயிர்ப்பின் - கோபத்தினால் எய்ப - அம்புகளைச் செலுத்த, ஆவி - உயிரானது, இல்லை- இல்லையெ னவும், உண்டு சிறிதென - சிறிதுண்டெனவும் அயிப்பு - ஐயங்கொள் ள, வாடி - தளர்ந்து ரகமாகிய, வெம்மை - வெப்பம் பொருந்திய

அழலின்-நெருப்பினுள், மூழ்கி-மூழ்கி, அதூர்-வருத்தத்தை-உறும்- அடைந்த, பயிர்ப்பில்-அருவருப்புக்குணமிழந்திருக்கிற, கோதை-மங்கையினது, நெஞ்சுள்-நெஞ்சத்தினுளுண்டாகிய, நோய்கள்-நோய்களை, பரிவினேடும்-இரகத்தினேலே, அழலும்-சூடுபொருந்திய, நெட்டுயிர்ப்பு-பெருமூச்சானது, உரைத்தது-சொல்லியானல், மேல்-அந்நெஞ்சத்தின்மேலிடத்துள்ள, உத்தரீயம்-உத்தரீயமானது, நடுக்கம்-நடுக்கத்தை, உற்றதோ-அடைந்ததோ. எ-று. ஓரம்-உற்றத்திற்கூட்டப்பட்டது (கருத்து) தமயந்திநெஞ்சநோய்களை நெட்டுயிர்ப்பானதுகாட்டியது-எ-ம். அ

மையரிக்கண்வதனமங்கைவடிவமைந்தசிறடிச்
செய்யபங்கபங்களுண்டுமிழ்ந்தசெய்யகதிர்கொலோ
தொய்யில்வெம்முலைத்தடஞ்சுமந்துநொந்துவாடிய
வையநுண்மருங்குல்மெய்யழன்றெழுந்தவெம்மையே.

[இ-ள்] தொய்யில்-சந்தனக்கோலத்தினையுடைய, வெம் - விருப்பஞ்செய்கின்ற, முலை-முலைகளாகிய, தடம்-மலைகளை, சுமந்து-தாங்கி, நொந்து-வருந்தி, வாடிய இளைத்த, ஐயம்-உண்டோவில்லையோவென்னுமையத்தைத்தருகின்ற, நுண்-நுண்ணிய, மருங்குல்-இடையையுடையவளது, மெய்-உடம்பிலிருந்து, அழன்று-சுட்டுக்கொண்டு, எழுந்த-புறப்படுகின்ற, வெம்-வெப்பமானது, மை-அஞ்சனத்தையும், அரி-இரேகைகளையுமுடைய, கண்-கண்களும், வதனம்-முகமும், அங்கைஉள்ளங்கைகளும், வடிவு-அழகால், அமைந்த-நிறைந்த, சிறு-சிறிய, அடி-அடிகளுமாகிய, செய்யபங்கபங்கள்-செந்தாமரைமலர்களாலே, உண்டு - அதற்குமுன்னுட்கொண்டு, உமிழ்ந்த- அப்போதுகக்கப்படுகின்றசெய்யகதிர்கொல்சூரியகிரணமோ. எ-று ✱ தொல்காப்பியம்இடைச்சொல்லியல் கூறுகேற்றமவினுவேபிரிநிலையெண்ணேயீற்றசையிவ்வைந்தேகாரமே-இவ்விதியால்ஏகாரமீற்றசை-கருத்து- தமயந்திஉடம்பிலெழுந்தசூடானது இவளதுஅவயவத்தாமரைகள் உண்டுமிழ்ந்தசூரியகிரணமோ-எ-ம். ௬

அலைத்தடங்கரைதுவிபாயவாரவண்டலழியுமென்
முலைத்தடத்தினூடுதோன்றுநூகநீலவொண்கணுஞ்
சிலைத்தடக்கையாரணமாதசிக்கைமீதழுந்திட
வுலைத்துவிட்டகையகம்வெய்யவுற்பலத்தையொத்தவே,

[இ-ள்] தடம்-விசாலம்பொருந்திய, கண்-கண்களையிருந்து, அலை-அலையையுடைய, அருவி-வெள்ளமானது, பாய-பாயதலினலே, ஆரம்-சந்தனத்தினது வண்டல்-குழம்பானது, அழியும்-அழியப்பெற்ற, மெல்-மெல்லிய, முலைத்தடத்தின்-முலைப்பரப்பினுள்ளே, தோன்று- காணப்பட்ட, நூகமும்-முகத்தினதுகிழுளள, நீலம்-கருமைபொருந்திய, ஒள்-ஒள்ளிய, கணும்-கண்ணினதுநிழலும், சிலை-கருப்புவில்லையுடைய, தடம்-பெருமைபொருந்திய, கை-கையையுடைய, மாரன்-மன்மதனுடைய, ஆத-மங்கையினது, சிக்கைமீது-நெஞ்சின்கண், அழுந்திட-அழுந்த, உலைத்து இழுத்து, விட்ட-விடப்பட்ட, உற்பலம்-நீலமலர்ப்பூவம்பையுமொவ

ய்ய-கொடிய, உற்பலத்தை-நீலோற்பலப்பூவையையும், ஒத்த-ஒத்திருந்தன-எ-று, -கருத்து-கயமத்திழமையிவிடத்தோன்றும்முகங்களும் மனது தாமரைப்பூங்களையையும நீலோற்பலக்கிளையையும் நீலோற்பலக்கணையையும் ஒத்திருந்தன-எ-ம் ௰

வேயைவென்றபசியதோளணங்குகாமவெம்மையாற்
றீயின்மேயதளிரிணைவாடியழிகல்கண்டுசிந்தியா
நேயநெஞ்சமீழியமைக்கணீரிறைப்பநிலைதளர்ந்
தாயவெள்ளமவிரகவெம்மையாற்றுவான்றுணிந்ததே.

[இ-ள்] ஆயவெள்ளம்-வெள்ளம்போலும், மகளிர்-கூட்டமானது, வேயை-மூங்கிலை, வென்ற-ஜயித்த, பசிய-பசுமைபொருந்திய, தோள்-தோள்களையுடைய, அணங்கு-தெய்வப்பெண்போல்பவள், காமம்-காமத்தினது, வெம்மையால்-வெப்பத்தால், தீயில்-நெருப்பில், மேய-விழுந்த, தளிரிணை-தளிர்போல், வாடி-மெலிந்து, அழிகல்-வருந்துகலை, கண்டு-பார்த்து, சிந்தியா-இதற்கென்செய்வதென்று ஆலோசித்து, நேயம்-அன்பையுடைய நெஞ்சம், மனமானது அழிய-வருந்தவும், மை-மையையணிந்த, கண்-கண்களானவை, நீர்-நீரை, இறைப்ப-பொழியவும், நிலைதளர்ந்து-நிலைசோர்ந்து, விரகவெம்மை-விரகத்தாலாகிய ஆதபம், வெப்பத்தை ஆற்றுவான்-தணிக்கும்படியாக, துணிந்தது-நிச்சயித்தது-எ-று, தொல்காப்பியம், எச்சவியல்-உவமைத்தொகையே புவயனியல இவ்விதியால்-ஆயவெள்ளம்-இதிலபோலுமென உவமையுருபு குறைந்தது (கருத்து) தலைவியினது காமவெப்பத்தைத் தணிக்கும்பொருட்டுப்பெண்கள் கூட்டந்துணிந்துபுறப்பட்டது-எ-ம. ௰௧

மதுப்பிலிற்றுசோலைவாயின்மணிதெளித்தநீரதாம்
புதுப்புனற்றடத்திலிந்துகாந்தவேதிகைப்புறத்
துதித்ததிங்கள்வண்முகத்தணங்கைமாரனொள்கணை
வெதுப்புகின்றதொழியவாசமெல்லணைக்கிடத்தினார்,

[இ-ள்] மது-தேனை, பிலிற்று-துளிக்கின்ற, சோலைவாயில்-பொழிலின்கண், மணி-முத்துக்களை, தெளித்த-தெளிக்குலாகிய, நீரதாம்-குணமுடையதுபோலவாகிய, புது-புதிய, புனல்-நீரையுடைய, தடத்தில்-குளக்கரையில், இந்துகாந்தம்-சந்திரகாந்தத்தாலாகிய, வேதிகைப்புறத்து-மேடையின்மேல், வாசம்-பரிமளம்பொருந்திய, மெல்-மெல்லிய, அணை-பூவணையின்மேல், உதித்த-உதயமாகிய, திங்கள்-சந்திரனைப்போலும், வண்-காந்திபொருந்திய, முகத்து-முகத்தையுடைய, அணங்கை-தெய்வமாதுபோல்பவளை, மாரன்-மன்மதனது, ஒள்-ஒள்ளிய, கணை-அம்பானது, வெதுப்புகின்றது-சுடுகின்றது, ஒழிய-நீங்கும்படியாக, கிடத்தினார்-படுக்கவைத்தார்கள்-எ-று, வீரசோழியம்-பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல்வகைமேதகவிரிப்பின் மெய்க்கப்பட்டுள்ளனவிறந்தோற்றஞ்செவ்விதிற்றெரிந்துசெப்பின்மற்றதுவேசுப்பிரயோகமவிப்பிரயோகஞ்சோகமோகங் கீணமென்னு மைவைக்கணையுளாக்கிய காமாவையப ருதிட்டப்படும் ...சுப்பிரயோகஞ்சொல்லு நினைப்பும் விப்பிரயோகமெவ்வு தவிட

புறகல்சோகம்வெப்புஞ்சோறுண்ணாமையுமோகமயக்கமுமொழிபலவி
தற்றலு மரணமணங்கலுமானுமுமென்பாராணைஞ்சாவுறவறிவிஞோர்இ
வ்விதியால் சோகக்காற்றிடைத்தப்பட்டாள்-கருத்து-பாங்கியர் தமயந்தி
யைச்சோலையிற் றடாகக்கரையில சந்திரகாந்தமேடையேற் பூவணையிற்
கிடத்தினார்மள-எ-ம். ௰௨

மலையவெற்புயிர்க்கோர்காதம்வாசநாறுமாரமும்
மலைகடற்புறத்திலங்குமணிகொள்சோலையாரமும்
முலையினைவெப்பினாறழமுழுமையும்புதைத்தலாற்
சிலைமதற்குவெருவியீசனுருவெடுத்தல்சிவனுமே.

[இ-ள்] மலையவெற்பு-பொதியமலையினால், உயிர்த்து-தரப்பட்டு, ஓர் காதம்-ஒருகாதமளவாக, வாசநாறும்-வாசனைசெய்கின்ற, ஆரமும்-சந்தனமும், அலை-அலைகளையுடைய, கடலில்-கடலின்கண், பிறந்து-உண்டாகி இலங்கும்-விளங்காநின்ற, அணி-அழகை, கொள-கொண்ட, கோவை-வடங்களிலுள்ள, ஆரம்-முத்துகளும், முலையினை-முலைகளது, வெப்பின்-காமவெப்பத்தினால், நீறதாகி-சாம்பலாகி, முழுமையும்-தமயந்தியினுடைய முழுமையும், புதைத்தலால் மறைத்தலால், தமயந்தியானவள் சிலை வில்லையுடைய, மதனுக்கு-மன்மதனுக்கு, வெருவி-அஞ்சி, ஈசன்-பரமசிவனது, உருவு-வடிவத்தை, எடுத்த-எடுத்தவள்போலும்-எ-று. கருத்து சந்தனமும்-முத்துகளுந் தமயந்தியுடைய வெப்பத்தினாலே நீறாகித் திருமேனிமுழுதையு மறைத்தலால் மன்மதனுக்குப் பயந்து சிவனைப்போல வடிவெடுத்தாள்போலுமிருந்தது-எ-ம். ௰௩

வளைக்கடக்கைவெம்மைதீரவாரமேலவளைத்ததிற்
றெளித்தவாசநீர்நிறைத்துமுத்தணிந்தசெவ்விவான்
முளைத்ததிங்கடாரகைக்குலங்களோடுமொய்த்துமா
துளத்துவேளையார்வமோடுகாணவந்ததொத்ததே.

(இ-ள) வளை-வளையல்களையணிந்த, கடம்-பெரிய, கை-கைகளையுடையவளது, வெம்மை-காமவெப்பமானது, தீர-நீங்க, ஆரம்-சந்தனத்தால், மேல்-மார்பின்மேல், வளைத்து-கனைகோலி, அதில்-அதனிடத்தில், தெளித்த-தெளிக்க, வாசநீர்-பனிநீரால், நிறைத்து-நிறைவித்து, முத்து-முத்துக்களை, அணிந்த-செவ்வி, சுடரிலும்-அணிந்தமையால், உண்டாகிய-அழகானது, மாது-தமயந்தியினது, உளத்து-நெஞ்சிலிருக்கின்ற, வேளை-மன்மதனை, ஆர்வமோடு-ஆசையோடு, காண-பார்க்க, வான்-ஆகாயத்திலே முளைக்க-தோன்றுகிற, திங்கள்-சந்திரனானவன், தாரகைக்குலங்களோடு-உடுக்கூட்டங்களுடனே, மொய்த்து-நெருங்கி, வந்தது-அங்கேவந்திருத்தலாலுண்டாகியவழகை, ஒத்தது-நிகர்த்தது-எ-று-கருத்து- தமயந்தி மார்பில், சந்தனந்தடவித்து பனிநீராவிட்டு முத்துக்களையணிந்த அழகானது சந்திரனட்சத்திரங்களோடு தமயந்தியுள்ளத்து மன்மதனைக் காணவந்ததைநிகர்த்தது-எ-ம. ௰௪

பூசுசாந்தமெய்யினிற்பொருந்தெழூஉத்தீந்தன
வீசுமாலவட்டநெஞ்சில்விரகவெம்மைமூட்டின
வாசமூறுகெட்டுயிர்ப்பின்மாலைதீந்துவாடின
வாசைநோயின்வெம்மைதன்னையாற்றலாகுமேகொலாம்.

(இ-ள்) பூசு-பூசப்பட்ட, சாந்தம்-சந்தனங்களானவை, மெய்யினில்-உடம்பின்கண், பொருந்து-பொருந்தாக, எழூஉ-எழும்பி, தீந்தன-கரிந்தன, வீசு-வீசப்பட்ட, ஆலவட்டம்-விசிறிகளானவை, நெஞ்சில்-நெஞ்சிலுள்ள, விரகம்-விரகத்தாலாகிய, வெம்மை-நெருப்பை, மூட்டின-மூளவித்தன, மாலை-மாலைகளானவை, வாசம்-வாசனையை, வீசு-வீசுகின்ற, கெட்டுயிர்ப்பின்-பெருமூச்சினாலே, தீந்து-கருகி, வாடின-புலர்ந்தன, ஆசைநோயின்-காமநோயினது, வெம்மை-கனலின்வெப்பத்தை- ஆற்றலாகுமோகொல்-கெல்வாராற்றலாமோ-எ-று, தொல்காப்பியம்- வினையியல்-அ-ஆ-வெனவரூஉமிறுதி-யப்பாலூன்றே பலவற்றுப்படர்க்கை இவ்விதியாலதீந்தன என்றதன் தாதிறபலவின்படர்க்கை (கருத்து) சந்தனங்கள்தீந்தன ஆலவட்டங்கள்தீயினைமூட்டின பெருமூச்சால்மாலைகள்வாடின ஆகையால் காமாக்கினியையாவிக்கலாகுமோ எ-று, ௰௫

ஐயரிக்கண்மாதினன்மெய்யழன்றவெம்மையாற்றலாத்
தொய்யில்வெம்முலைபுகைந்ததோடவிழ்ந்ததாமரை
மையன்மாமதத்தயானைநளன்மணந்திவ்வாறுதன்
கையினாற்பிடிப்பனென்றுகாட்டுமாறுபோன்றவே,

(இ-ள்) ஐயரி-பஞ்சவரிகள்பொருந்திய, கண்-கண்களையுடைய, மதின்-மடந்தையினது, மெய்-உடம்பின்கண், அழன்ற-தகிக்கின்ற, வெம்மை-காமவெப்பத்தை, ஆற்றலா-பொறுக்கமாட்டாமல், தொய்யில்-சந்தனக்கோலத்தையுடைய, வெம்-விருப்பஞ்செய்கின்ற, முலை-முலைகளே, புகைந்த-கருங்கியழுங்கின்றனவும், தோடு-இதழ்களானவை, அவிழ்ந்த-விரியப்பெற்றனவுமாகிய, தாமரை-தாமரைகள், மையல்-மயக்கத்தைத்தருகின்ற, மா-பெரிய, மதத்த-மதம்பொருந்திய, யானை-யானையையுடைய, நளன்-நளராசனென்பவன், மணந்து-உன்னைவிவாகஞ்செய்து, இவ்வாறு-இவ்வண்ணமாக, தன்-தன்னுடைய, கையினால்-கைகளாலே, பிடிப்பனென்று-பற்றுவானென்று, காட்டுமாறுபோன்ற-காட்டுந்தன்மையைப்போன்றன-எ-று, ஏ-அசைநிலை [illegible] மேற்கோள்-ரூ-வடிவேவணவெ [illegible] ஒக்கிற வொப்பே இவ்விதியால்உட்புலவினைமறி (கருத்து) தமயந்திமுலைகளைப்பாவிபால்அழுக்கப்பட்ட தாமரைமலர்களானவை நளன்விவாகஞ்செய்து அவன்கையால் இவ்வாறுபிடிப்பானென்று காட்டுவனபோன்றிருந்தன-எ-ம. ௰௬

குரவவிழ்ந்தகோதைவாசமூகக்குளிர்ந்ததிங்களொன்
றருகிருந்துகாக்கநீருருப்பவெம்பியுளைசெய்வா
னிரவுதிங்களென்பேர்மலிந்ததெழுந்தவிரவியும்
வருதலின்றிபிரவிராகதல்லவென்னவாறறோ,

[இ-ள்] அவிழ்ந்த-மலர்ந்த, தூவு-தூய மலர்களைக்கொண்ட, கோதை-கூந்தலையுடையவளது வாள்-காந்தி பொருந்திய முகம் முகச்சந்திரனுளிர்ந்த சீதளம்பொருந்திய, திங்களொன்று-சந்திரனென்று-பகலே, இந்தக் காந்தனக்கு-மாகிய சந்திரகாந்தமானது உருகும்படி நீர்களையுருப்படி பொழிய, செம்மை-செங்கதிர், இரவு-இரவில், திங்களொன்று சந்திரனென்று சொல்லப்பட்டு, பேர்ந்துறந்து-சூரியனென்கிற தன்னியற்பெயரை மறைத்து, எழுகை-உதயமாகிக்கொண்டு, இரவிலும்-சூரியனும், வருகவின வராகிருக்க இரவிலும்-இச்சூரியகாந்தமானது-அழுவது-இவைப்பொழிவதாய் கனியாமென-என்னகாரணத்தினாலென்று உரைசெய்வான் சொல்லுவாளானாள்-என்று-... காமமிகுதியால சந்திரனைச் சூரியனென்று ... சூரியகாந்தமென்று பனீர்பொழிதலைத் தீயபொழிவென்றுஞ் சொன்னளென்பதாம். ௯௭

உருவினாளெதிர்க்க வெய்யகண்ணி லிற்குலித்தட
னருணவெண்ணிறத்த சோகவலையைப் பிறைத்தலும்
புரிநரம்பிரல் சொல்லிவருவவிற்குனித்தநீர்
வருணவாருதிதிகழ்ப்பொன் னுழைக்கணம்பிறைத்ததே

[இ-ள்] உருவினாள்-மன்மதனாவன், எதிர்க்குமுன்னும்-வெய்யகொடிய, கன்னலவில்-கருப்புவில்லை வளைத்துவளைத்து, உடனுடனே அருணவெண்ணிறத்து-சிவப்புவெளுப்புநிறத்தையுடைய, அசோகம்-அசோகமலர்களை ... அம்பு ... யாஸ்திரத்தை, இறைத்தலும்-செலுத்தியவளவில், புரி-கட்டையுடைய, நரம்பு-வீணையினது கதியானது, இசைந்து-இராகம் ... சொல்லையுடையவள், புருவவில்-தன்புருவமாகியவில்லை, குனித்து-வளைத்து, கோ-அவ்வாகிய னையாஸ்திரத்தையெதிராக, ... விபரீதாஸ்திரத்தைவிடுதல்போலச் செலுத்துதல்போல, மழை-குளிர்ச்சிபொருந்திய கண்-கண்களை ஸ்வபுசீரை, இறைக்கும்பொழிவாளானாள், என்ற-... மன்மதனக்கினியாஸ்திரம் தொடுக்கவளவில தமயந்தி புருவமாகியவில்லைவளைத்துக் கண்ணீராகிய வருணாஸ்திரங்களைத் தொடுத்தாளென்பதாம். ௯௮

தூயதிங்களவெண்குடைக் கருப்புவில்லிசோகமலர்ச்
சேயதேறலவருணவாளிமுனிவினிற்செலுத்தலும்
வேயைவென்றதோளிவெதும்பியுள்ளம்விம்முறு
வாயுவாளிபோலநெட்டுயிர்ப்பெறிந்துவாவிமே,

[இ-ள்] தூய-பரிசுத்தமாகிய, திங்கள்-சந்திரனாகிய, வெண்குடை வெள்ளைக்குடையையும் கருப்புவில்லையும் கருப்புவில்லையுமுடைய-மன்மதனால் தொடுக்கப்பட்ட மலர்-மலர்களது, சேய்தேறல செக்கச்சிவந்த, வருணவாளிவருணாஸ்திரத்தை, முனிவினில்-கோபத்தால், செலுத்தலும் செலுத்தியவளவில்; வேயை-மூங்கிலை, வென்ற-ஜயித்த, தோளி-தோள்களையுடையவள், வெதும்பி-வெப்பமுற்று உள்ளம் ... விம்முறு வாருதிலா

யுகாளிபோல்-வாயுவாஸ்திரத்தைச்- செலுத்தல்போல், நெட்டுயிர்ப்பு-பெருமூச்சை, எறிந்து-விட்டு, வருந்தி- சோர்வாளானாள்-எ-று. -கருத்து-மன்மதனானவன்மலர்த்தேருகிய வருணாஸ்திரந்தொடுத்தபோது சம்யக்தியானவள்பெருமூச்சாகியவாயுவாஸ்திரந்தொடுத்தாள்-எ-ம், ௰௯

கூறுமங்கையிருளங்கொதித்ததுவெம்புகாமநோய்
தேறுகின்றிலீரிதென்கொல்தேவியைப்பிரிந்தா
லாறணிந்தழல்விரகவெம்மையழலவெடித்ததன்றுகோ
னீறணிந்தகடவுளுக்குநெற்றியிற்கண்ணதே,

[இ-ள்] கூறு- என்னிடத்தே குறைவைச் சொல்லுகின்ற, மங்கையீர்- மாதர்களே, உளம்-என்னுள்ளமானது, கொதித்து-கொதிப்புற்று, வெம்பு-வெம்புதற்குக்காரணமாகிய, காமநோய்- காமநோயின்-கொடுமையை, தேறுகின்றிலீர்- அறிகின்றிலீரில்லை இது-இது-என்கொல்-என்னவேதனையை, நீறு-விபூதியை, அணிந்த-பூசிய, கடவுளுக்கு-பரமசிவனுக்கு, நெற்றியில்-நெற்றியினிடத்தாகிய கண்ணானது- நெருப்புக்கண்ணானது, தேவியை-உமையவளை, பிரிந்தகாலத்திலாகியதால், ஆறு-கங்கையை, அணிந்து-பரமசிவன்மேலே தரித்துப்-வெடித்தது- அந்நெற்றியைப் பிளந்துதோன்றியதாலே, விரகம் காமமாகிய, வெம்மை-வெப்பத்தையுடைய, அழலன்றுகொல்நெருப்பன்றோ-எ-று, -கருத்து- பெண்களேகாமக்கனற்கொடுமையைநீங்களறியவில்லைசிவனுமையைப் பிரிந்தகாலத்துக் கங்கையைத்தரித்து அக்காமாக்கினிநெற்றிக்கண்ணாகவெடித்ததல்லவோவென்பதாம், ௨௰

பண்ணமைந்த தீஞ்சொலீர்பழிப்பதென்னைமாநிலத்
தண்ணயந்ததலைவர்வீயினியிரையன்னமாதரா
ரெண்ணுகின்றமன்னுபெரியழற்குவெந்தழ
றண்ணிதென்றிழுமியந்தவெம்மையைத்தணிப்பரால்,

[இ-ள்] பண்பாட்டிசைபோல், அமைந்த-நிறைந்த, தீம்-மதுரம்பொருந்திய, சொலீர்சொற்களையுடையவர்களே, பழிப்பது-பழிப்பதற்குக்காரணம் என்னை-யாது, மாநிலத்து-பெரியபூமியினிடத்தே உள்ளநயந்த-விரும்பப்பட்ட, தலைவர்- கணவரானவர், வீயின்-இறந்துபோனால் உயிரையன்ன, அக்கணவருயிர்போலும், மாதரார்-மங்கையரானவள் எண்ணுகின்றவிங்கிதக்கப்படுகின்றகாயமென்னுமகாமமாகிய, எரியழற்கு-நெருப்புக்கு, வெந்தழல்வெப்பம்பொருந்திய நெருப்பானது, தண்ணிதென்று-குளிர்ச்சியதாயிருக்கின்றதென்றுநினைத்து. மூழ்கி-இந்நெருப்பினுள்ளேமூழ்கி, அந்தவெம்மையை அக்காம நெருப்பின்வெப்பத்தை, தணிப்பார்-நீக்குவார்கள்-எ-று. -கருத்து-மாதர்களே உலகிற்பெண்கள் தங்கள்கணவர்களிறந்தபோதுகாமாக்கினிக்குபயந்தல்லவாதீப்பாய்கிறார்களென்பதாம், ௨௧

என்றுகூறிநுழைசெப்பிறங்கொளெண்ணவிணமணிக்
குன்றுபோலெழுந்துவிங்குகொம்மைவெம்முலைத்தடம்
பொன்றயங்குபசலைபோர்ப்பமய்யநோய்பொறுக்கலா
மன்றலோதியைபருமூழ்ந்துதியர்குகாலியில்,

(இ-ள்) என்றுகூறி-என்றுசொல்லி, நுழை-நுண்ணிய, நுசுப்பு - இ
டையானது, இறுமென்ன-ஒடியுமென்ன, இனம்-இனமாகிய, மணி - ம
ணிகளின்மயமாகிய, குன்றுபோல்-மலைபோல், எழுந்து-உயர்ந்து, வீங்
கு-பருத்திருக்கின்ற, கொம்மை - இளமைபொருந்திய, வெம்விருப்பத்
தைத்-தருகின்ற, முலைத்தடம்-முலைகளினிடங்கள், பொன்-பொன்போ
ல், தயங்கு-விளங்காநின்ற, பசலை-பசப்புநிறத்தினால், போர்ப்ப-தன்மை
மூடிக்கொள்ள, மம்மர்நோய்-காமநோயை, பொறுக்கலா-பொறுமல், ம
ன்றல்-வாசனைபொருந்திய, ஓதி-கூந்தலையுடையவள், துயர்-துன்பத்தி
ல், உழந்து-வருந்தி, மதிமயங்கு-அறிவுகலங்கப்பெறுகின்ற, காலையில்-
காலத்திலே—எ-று இலக்கணத்திரட்டுபுணாக்காலைப்பொன்பசலையு
ம்(கருத்து) தமயந்தியானவள் காமவிகாரத்தைச்சகியாமல் அறிவுகலங்
குங்காலத்தில் என்பதாம், (௨௨)

> கையநுண்மருங்குல்காடவெம்மைபற்றுநாண்மலர்
> கையிலங்குவாண்முகங்கருந்தடங்கண்மெல்லடித்
> துய்யபங்கயந்தொடிற்சுடுங்கொலென்னவெண்ணியோ
> வெய்யவன்கரஞ்சுருக்கிவேலைபுக்கொளித்ததே,

(இ-ள்) கையும்-தேய்கின்ற, நுண்-நுண்ணிய, மருங்குல்-இடையையு
டையவளது, காமம்-காமத்தீயினது, வெம்மை-வெப்பத்தை,பற்று-கொ
ண்டிருக்கின்ற, கைகளும்-இலங்கு, விறங்காநின்ற-வாள்ஒளிபொருந்
திய, முகம்-முகமும், கரு-கரிய,தடம், விசாலம்பொருந்தியகண்- கண்க
ளும், மெல்-மெல்லிய, அடி-அடிகளுமாகிய, நாண்மலர்-அன்றுபூத்த,
துய்ய-பரிசுத்தம்பொருந்திய, பங்கயம் - தாமரைமலர்களை, தொடின-
தொட்டால், சுடுமென்ன-சுடுமென்று, எண்ணியோ-நினைத்தோ, வெய்
யவன்-சூரியனானது, கரம்-தன்கிரணமாகியகைகளை, சுருக்கி-சுருக்கிக்
கொண்டு, வேலை-மேற்கடலுள்ளேபுக்கு, முழுகி-ஒளித்தது, மறைந்த
து—எ-று, தொல்காப்பியம் எச்சவியல்-௰௭-சூ-அவற்றுளவேற்றுமை
த்தொகையேவேற்றுமையியல் இவ்விதியால வெம்மைபற்று இதில் ஐ
யுருபுதொக்கது (கருத்து) சூரியனானவன் தமயந்தியினுடைய அவயவ
த்தாமரைகளைத் தொட்டால் சுடுமென்றுநினைத்தோ அஸ்தமானமாயி
னன்என்பதாம் இதுபுராணிகற்கூற்று. (௨௩)

கைக்கிளைப்படலம்,

முற்றிற்று.

உ

மாலைப்படலம்

இப்படலத்தால்முன்சொல்லப்பட்ட தமயந்தியின் காமநோய்மிகு
தற்குக்காரணமாகியமாலையின் வரவுசொல்லப்படுகின்றது.

கலிநிலைத்துறை,

ஒற்றையாழியான்படமெனவுறுபகற்சிறுவன்
கற்றைவார்க்கதிர்க்கயிற்றினால்விடுதலுங்கதித்து
முற்றுறுமுலைநெட்டுயிர்ப்பெறிதலான்மொத்துண்
டற்றுவீழ்ந்தபோற்குடதிசைக்கடலுளாழ்ந்ததுவே,

(இ-ள்) ஒற்றையாழியான்-சூரியனானது, படமென-தனக்குக்காற்றாடி
யாக, உறு-உறப்பெற்ற, பகல்-பகலாகிய, சிறுவன்-சிறியோனானவன்க,
ற்றை - திரளாகிய, வார் - நெடிய, கதிர் - கிரணமாகிய, கயிற்றினால்-
கயிற்றைக்கொண்டு, விடுதலும் - ஆகாயத்தின்கண்விட்டவளவில், கதி
த்து-பருத்து, முற்றுறு - முற்றுத, முலை - முலைகளையுடைய, தமயந்
தியானவள்-நெட்டுயிர்ப்பு-பெருமூச்சை, எறிதலான்-விடுதலினால்,மொ
த்துண்டு-தாக்குண்டு அற்று-அக்கயிறற்று, வீழ்ந்தபோல்-வீழ்ந்ததுபோ
ல், குடதிசை-மேற்குத்திசையிலுள்ள, கடலுள்-சமுத்திரத்தினில், ஆ
ழ்ந்தது-அதுமூழ்கிற்று—எ-று. வீழ்ந்தஎன்றது விகுதிகுறைந்தது(கரு
த்து பகலென்னுஞ் சிறுபிள்ளை சூரியனைக்காற்றாடியாகக்கிரணக் கயி
ற்றாற் கட்டிவிட்டவளவில் தமயந்திபெருமூச்சால் அக்காற்றாடியற்று
மேற்கடலில்வீழ்ந்துமூழ்கிற்று என்பதாம், (க)

புதைத்தகாரிருட்படமொழிக்கித்துணைப்போது
முதித்த*கீழ்த்திசைமகட்புணர்ந்தாயென்றூடிக்
கொதித்துமேற்றிசையணங்கலத்தகப்பதங்கொடுமே
லுதைத்ததாலெனச்சிவந்ததுவெய்யவனுடலம்,

(இ-ள்) புதைத்த-மறைத்த, காரிருள்-கரியவிருளாகிய, படம்-போர்
வையை, ஒழித்து-களைந்து, இத்துணைப்போதும்- இவ்வளவுகாலமும்உ
தித்த-நீஉதயஞ்செய்யப்பெற்ற, கீழ்த்திசை-கிழக்குத்திக்காகிய, மகள்-
மாதை, புணர்ந்தாயென-கூடிக்கொண்டிருந்தாயென்று, மேற்றிசை-மே
ற்குத்திக்காகிய, அணங்கு-மாதானவள், ஊடி-பிணங்கி, கொதித்து-வெ
ப்பமுற்று, அலத்தகம்-செம்பஞ்சுசூட்டப்பெற்ற, பதங்கொடு-அடிகளை
க்கொண்டு, மேல்-வடிவத்தின்மேல், உதைத்தாலென-உதைக்கப்பெற்ற
துபோல், வெய்யவன்-சூரியனது, உடலம்-வடிவம், சிவந்தது-சிவப்பை
யடைந்தது—எ-று, * தருக்கசங்கிரகம்-நூ-கூ-கிழக்குமுதல் வடக்கிற்
கேதுதிசையே கருத்து) மேற்குத்திசைப்பெண்களுதைப்பட்டதுபோ
லுஞ்சூரியன்மேனி சிவந்ததென்பதாம். (உ)

சுகார்தொட்டவெண்டிரையெறிதடங்கடற்புகுதும்
புகரில்வெங்கதிரக்கடவுண்முன்போக்கிபகதிர்க

ணிகரினித்திலங்குளிப்பவர்நீர்நிலையறிவா
னகனெடுங்கடல்விடுத்தபொற்கழையெனலாமால்,

(இ-ள்) சகரர்-சகரரென்னப்பட்ட வரசர்களாலே—தொட்ட-தோண்டப்பட்டிருக்கிற—வெள்-வெள்ளிய—திரை-அலைகளை—எறி, வீசுகின்ற—தடம்-விசாலம்பொருந்திய,கடல்-கடலின்கண்—புகுதும்-புகுகின்ற புகரில்-குற்றமில்லாத—வெங்கதிர்க்கடவுள் சூரிய தேவனாலே—முன்-முன்னே—போக்கிய-செலுத்தப்பட்ட—கதிர்கள்-கிரணங்களானவை (நிகரில) ஒப்பிலாத—நித்திலம்-முத்துகளைக் குறித்து)—குளிப்பவர், (அக்கடலிலே மூழ்குவோர்—நீர்நிலை-நீராழத்தை. அறிவான்- அறியும் பொருட்டு,அகல்-விரிந்த,நெடுங்கடல்-நெடியகடலிலே,விடுத்த-விடப்பட்ட,பொற்கழை யெனலாம் பொன்மூங்கில்களென்று சொல்லலாம்—எ-று, ஆல்-அசை(கருத்து) கடலிற்சூரியனாற்செலுத்தப்பட்டகிரணங்களானவைஅக்கடலின் முத்தெடுக்க மூழ்குவோர்ஆழம்பார்க்கவிடுத்த மூங்கில்களைபோன்றிருந்தனஎன்பதாம். (௩)

மையுண்கண்ணியைமதிவரின்வருத்துவொன்றிரச்சி
யையபோகலென்றும் பல்வாயமலர்ந்தனவாவி
வெய்யவன்செழுங்கரங்களைவிழைவொடுந்தமது
கையினாலுறப்பிடித்தெனக்குவிந்தனகமலம்.

(இ-ள்) மையண்கண்ணியை-அஞ்சனத்தைக்கொண்டகண்களையுடையவளாகியதமயந்தியை,மதி-சந்திரனானவன்வரின்-வந்தால்,வருத்துமென்று,வருத்துவானென்று,இரங்கி-உள்ளிரங்கி,ஐய-சாமி,போகலென்று (இவளைக்கைவிட்டு)போகாதே யென்று-(சொலவனபோல்)வாவி-குளங்களிலே ஆம்பல் அல்லிமுகைகள்,வாய்மலர்ந்தன-முகமலர்ந்தன, வெய்யவன்-சூரியனது,செழும்-செழியகரங்களை(கிரணங்களானவை)கைகளை விழைவொடும்-ஆசையோடும்,தமது-தம்முடைய,கையினால்- கைகளால் உற-பொருந்த,பிடித்தனென்பிடித்தெனபோல்,கமலம்-தாமரை மலர்கள்,குவித்தன-கூப்பின—எ-று,வாவியில் ஆம்பல் வாய் மலர்ந்தன-தாமரைகுவிந்தனவெனக்கூட்டுக கருத்து) தமயந்தியைச்சந்திரன்வரில்வருத்துவானென்றுசொன்னது போலஆம்பல்களலர்ந்தன சூரியனைபோகாதேயென்று கையாற்பிடித்தல்போலுங் கமலங்கள் குவிந்தன என்பதாம் (௪)

பொருவிலாழியொன்றுருட்டியெப்புவனமும்விளக்கு
மிரவிமன்னவனிறத்தலுமெதிர்ந்தபுன்மாலை
பாவைமாநிலமுழுவதும் புறப்பவனிறப்ப
விரவுவெந்தொழிற்குறுநிலவேந்துபோன்றுளதே

(இ-ள்) பொருவில்-எப்பில்லாத,ஆழியொன்று,ஒருசக்கரத்தை, உருட்டி-செலுத்தி,எப்புவனமும்-எல்லாவுலகங்களையும்,விளக்கும்-ஒளிர்விக்கின்ற,இரவிமன்னவன்-சூரியனாகியவரசன்,இறத்தலும்-இறந்தவளவில் எதிர்ந்த-தோன்றிய,புன்மாலை-புல்லியமாலைக்காலமானது,பாவை- தடலையுடைய,மாநிலமுழுவதும்-பெரியவுலகமுழுதையும்,புரப்பவன்,காப்

பாற்றுகின்றவரசன், இரப்பு-இறத்தலைச்செய்ய, விரவு-(அத் தருணத்தி லே வியாபிக்கின்ற-வெந்தொழில் - கொடியசெல்கையையுடைய, குறு நிலவேந்துபோன் றுளது-சிறிய நிலத்தை யாளுமரசன் போலிருந்தது —.எ-று (கருத்து) சூரியன் சென்றவளவிலே மாலைக்காலம்வந்துசம்ப வித்தது தனிச்செங்கோல் வேந்தனிறந்தபின்புகுறுநிலவேந்தன்பெரு நிலமாளவந்ததுபோலும் என்பதாம். (௫)

மாலமென்னுமோர்வணிகன்மே லகன்றவானகல்லின்
ஞாலநீளிருளசீப்பவனலங்கொள்பொன்னுக
வேலுமாறுரைத்தெனவொளிர்செக்கர்வானிருண்ட
நீலவார்குழலுயிர்சுடவெழுந்தசெந்நெருப்பே

(இ-ள்) காலமென்னுமோர்வணிகன்-காலமாகிய வொரு வைசியனானவன், மேல்-மேலாக, அகன்ற-பரந்த, வான்கல்லின்-ஆகாயமாகிய (வுரை) கல்லிலே, ஞாலம்-பூமியினிடத்து, நீளிருள்-மிக்கவிருளை, சீப்பவன்-கெடுப்பவனாகியசூரியனை, நலங்கொள்-நற்குணத்தைக்கொண்ட, பொன்னுக-கனகமாக, வலுமாறு-பொருந்துமாறு, உரைத்தென-உரைத்தது போல, ஒளிர்-விளக்குகின்ற, செக்கர்வான்-செவ்வானமானது, இருண்ட-இருளுற்ற, நீலம், நீலநிறம்பொருந்திய, வார்-நெடிய, குழல்-கூந்தலையுடையதமயந்தியினது-உயிர், ஆவியை-சுட, சுடுதற்பொருட்டு-எழுந்ததோன்றியசெந்நெருப்பு-செந்தீயே, (யசம்)—எ-று, (கருத்து) செவ்வானந்தோன்றியது தமயந்தியுயிரைச் சுடவெழுந்தசெந்தீக்கொப்பாயிருந்தன-எ-ம், (௬)

செய்யவெங்கதிரிறத்தலுமவனுழைச்சிறந்த
மொய்கொளபேரொளிவனிதைக்குமூட்டுசெந்தழலி
வெய்யநீரதாய்பரந்தொளிர்செக்கர்வான்மெலிந்த
வையனுண்ணிடையணங்கினுக்கொலாயமையும்

(இ-ள்) செய்ய-செந்நிறம்பொருந்திய வெங்கதிர்-சூரியனானவன், உறத்தலும்-இறந்தவளவில், அவனுழை-அவனிடத்தேசிறந்த-சிறப்புற்றிருந்த-மொய்கொள், மொய்த்தல்கொண்ட, பேர்-பெரிய, ஒளிவனிதைக்குசாயாதேவிக்கு மூட்டு-மூட்டப்பட்ட-செந்தழலின்- செந்நெருப்புப்போல், வெய்யநீரதாய்கொடியகுணத்ததாய், பரந்து-விரிந்து, ஒளிர், விளங்காநின்ற, செக்கர்வான்செவ்வானமானது-மெலிந்த, காமநோயாலிளைத்த, ஐயம்-ஐர்துக்கிடமாகிய, நுண்ணிடை-நுண்ணியவிடையை யுடைய, அணங்கினுக்கு-தமயந்திக்கு, யென்கொலாயமையும்-எப்படிப்பட்டதாயிருக்கும்—எ-று. (கருத்து சூரியனிறந்தவுடனவன் மனைவி சாயாதேவிக்குமூட்டு நெருப்பைபோ லிருக்குஞ் செவ்வானமானது தமயந்திக் கெவ்வாறு யிருக்குமஎன்பதாம். (௭)

தணத்தவெண்ணிமெய்தளர்வுறுநேமியம்பறவை
புணர்த்தவஞ்சிறைப்புல்லுவிட்டொழியசெட்டுயிர்ப்பாற்

றுணர்த்தமொவ்வல்வண்டூரநீள்கக்குன்றூன்றேன்பிற்
பணைத்தவெம்முலைப்பாசிழையல்குலெனபடுமே,

(இ-ள்) தணத்தல்,பிரிவை எண்ணி,நினைத்து,மேய்-உடம்பு,தளர்வுறு தளர்ச்சியடைகின்ற,நேமியம்பறவை-சக்கரவாகப்பறவைகள்; நெடுயிர்ப் பால்-பெருமூச்சோடு,புணர்த்த-கலந்த,அம்-அழகிய,சிறை-சிறைகளின் புல்லு-தழுதலை,விட்டு-விடுத்து,ஒழிய-நீங்கவும்,வண்டு - வண்டுகளானவை,துணர்த்த-கொத்துகளைச்செய்த,பௌவல்-முல்லைமலரிலே, ஊத-ஆரவாரிக்கவும்,நீள்-நெடிய,கக்குன்றூன்-மாலையானது,தோன்றின்,உதிக்குமாயின்;பணைத்த-பருத்த,வெம்-விருப்பஞ்செய்கின்ற,முலை- முலைகளையும்,பாசிழை-பசியவாபரணத்தைகொண்ட - அல்குல்,அல்குலையுமுடைய தமயந்தியானவள்,என்படும்-என் படுவாள்—-எ-று. (கருத்து)சகோரங்கள் புணர்ச்சிவிட்டு நீக்கவும் வண்டுகள்சத்திக்கவும மாலைக்காலமுதிக்குமானால்தமயந்தி என்னபாடுபடாள என்பதாம் (௮)

அங்கண்வாகமுழுவது மவிரொளிபரம்பிக்
கங்குல்தாயடர்தாரகை யெழுந்தனகடலுட
பொங்குவங்கதிர்மணி விழுந்தெனத்திசைபுரப்போ
ரெங்குநாடுதற்கெடுத்தவஞ் சுடரொளையையும்.

(இ-ள்) கங்குலவாய்-இரவிகண்,அங்கண்-அழகியவிடத்தை யுடையவானகமுழுவதும்-ஆகாயத்திடமெங்கும்,அவிர்-விளங்காகின்றவொளி - ஒளியை,பரப்பி-விரித்துக்கொண்டு,எழுந்தன-தோன்றினவையாகிய, அடர்நெருங்கிய,தாரகை-உடுக்களானவை,கடலுள் - சமுத்திரத்தினுள், பொங்கு-விளங்காநின்ற,வெங்கதிர்-சூரியனாகிய,மணி-மணியானது, விழுந்தெனவிழுந்ததென்று,திசைபுரப்போர்-திக்குப்பாலகர்,எங்கும்- எவ்விடங்களிலும்,நாடுதற்கு-தேடுதற்பொருட்டு,எடுத்த-ஏந்திய,அஞ்சுடரொள-அழகியதீபங்கள்போல,இயையும்-பொருந்தும்,—எ-று (கருத்து நட்சத்திரங்களின் தோற்றங்களானவை சூரியனாகியமணி கடலில்வீழ்ந்ததென்று திக்குப்பாலக ரம்மணியைத் தேட எடுத்த தீபங்களைப் போன்றிருந்தன என்பதாம். (௯)

கருத்தினூடெழுகாமமெகொடுங்கனல்கற்ற
வருத்திபுற்றவாராருயிர்க்குளகினையயில்வா
னுருத்துவெங்கதிர்ப்பாரெறிந்துடுப்புகர்முகத்த
விருட்கடாக்களிறிருநிலத்திருக்கதையன்றே.

(இ-ள்) உடுப்புகர்-தாரகைகளாகிய,புள்ளிகள்பொருந்திய,முகத்த-முகத்தனையுடைய,இருட்கடாக்களிறு-இருளாகியமதயானை,உருத்துகோபித்து,வெங்கதிர்ப்பாகு-சூரியனாகியபாகனை எறிந்து வீசு,கருத்தி னூடு-நெஞ்சினுள்,எழு-வளா-கின்ற,காமமென் - காமமென்கிற. கொடுங்கனல், கொடியதீயானது,கனற்ற-சுடாநிற்க,அருத்தி-ஆசையை,உற்றவர்- பொருந்தினவருடைய,ஆர்-நிறைந்த,உயிர்க்குளகினை-உயிராகியதழையை,

அயில்வான்-உண்ணும்பொருட்டு இருநிலத்து-பெரியபூமியினிடத்து இறுத்தது தங்கியது—எ-று. (கருத்து) இருளாகிய மதயானையாவது சூரியனாகிய பாகனைக்கொன்று காமிகளது உயிராகிய தழைகளை யுண்ணும் பொருட்டுப் பூமியில் வந்ததுஎன்பதாம். (௰)

* தோட்டுமென்மலர்ப்பூங்கணை துரப்பமெல்லளிநாண்
பூட்டுபைங்கழைகுழைத்தெதிர்வேனிலான்புகழைத்
தீட்டுதாரகையெழுத்தொளிசிறந்திடவணிவான்
கூட்டுமையெனச்செறிந்ததுகூரிருட்பிழம்பே,

(இ-ள்) தோட்டு-இதழ்களையுடைய, மெல்-மெல்லிய மலர்-பூக்களாகிய, பூங்கணை-அழகிய அம்புகளை, துரப்ப-செலுத்த, மெல்-மெல்லிய, அளி நாண்-வண்டுகளாகிய நாரியை, பூட்டு-பூட்டிய, பைங்கழை - பசியகருப்பு வில்லை, குழைத்து-வளைத்து, எதிர்-எதிர்க்கின்றவேனிலான்-மன்மதனது புகழை-கீர்த்தியை, தீட்டு-எழுதப்பட்ட, தாரகை-உடுக்களாகிய-எழுத்து-எழுத்துக்களினது, ஒளிசிறந்திட-ஒளிவிளங்குதற்கு, அணிவான்-அழகியவாகாயத்தால், கூட்டு-கூட்டிய, மையென-மைபோல், கூர்- மிகுந்த அருள்-இருளினது, பிழம்பு-திரட்சியானது, செறிந்தது - நெருங்கியது —எ-று ○ தொல்காப்பியமரபியல்-அ௯-சூ-தோடேமடலே யோலையென்றுவேடேயிதழே பாளையென்றா, வீர்க்கேகுலையெனநேர்ந்தன பிறவு மபுல்லொடுவருஉமெனச்சொல்லினர்புலவர்-இவ்விதியால தோடென்றதுபுறக்காழென்னும் புல்லாம்-(கருத்து) இருட்கூட்டமானது மன்மதனது கீர்த்தியை எழுதப்பட்ட நட்சேத்திரவெழுத்தொளிசிறப்படைய ஆகாயத்திற்கூட்டியமைபோலிருந்ததுஎன்பதாம் (௧௧)

பட்டகாரிருட்கங்குல்போதரப்படர்திசைக
ளெட்டினுள்ளனபொருள்கவர்ந்தேகிலனென்று
விட்டிலங்கொளிவெய்யவன்றனதுமெல்விரலாற்
சுட்டியெங்கணுங்காட்டல்போற்சுடர்வன்சுடர்கள்,

(இ-ள்) பட்ட-உண்டாகிய, கார்-கரிய, இருள்-இருளையுடைய, கங்குல் இரவானது, போதர-வர, படர்-படர்ந்த, திசைகளெட்டின்-எட்டுத்திக்குகளிலும் உள்ளன-இருக்கின்றனவாகிய, பொருள்-பொருள்களை, கவர்ந்து அபகரித்துக்கொண்டு, ஏகிலனென்று-நான்போக இல்லையென்று, ஒளி-காந்தியை, விட்டு-வீசி இலங்கு-விளங்காநின்ற, வெய்யவன் சூரியனானவன், தனது-தன்னுடைய, மெல்விரலால் மெல்லிய விரலினாலே, சுட்டி-குறித்து. எங்கணும்-எவ்விடங்களிலும், காட்டல்போல்-காட்டுதல்போல் சுடர்கள்-தீபங்கள் சுடர்வன விளங்குவன—எ-று. (கருத்து) சூரியன் எண்டிக்கிலுமுள்ளபொருள்களைக்கவர்ந்தேகிலனென்று இரவினிக்குத்தன்விரலாற்சுட்டிக்காட்டல்போலப்பிரகாசிக்கின்றனதீபங்கள் (௧௨)

மாலைப்படலம்,

முற்றிற்று,

உ

நிலாத்தோற்றுப்படலம்.

இப்படலத்தால் அம்மாலைக்குப்பின்வரும் நிலாத்தோற்றுப்படலஞ்சொல்லப்படுகின்றது.

கலித்துறை.

வெவ்வராவினைவிண்டோடாமந்தரம்பிணித்துக்
கவ்வைமிக்கெழக்கடவுளர்கடைந்திடுங்காலைப்
பவ்வவெண்டிரையுயிர்த்தசெம்பதுமைவாண்முகம்போ
றெய்வவொண்கதிர்பரப்புமீதெழுந்ததுதிங்கள்,

(இ-ள்) கடவுளர்-தேவர்கள், வெவ்-வெவ்விய, அராவினை-வாசுகியென்னும்பாம்பை, விண்-ஆகாயமளவுங்கட்டை, தொடர்-அளாவியமந்தரம், மந்தரமலையினகண், பிணித்து-கயிறாகக்கட்டி, கவ்வை-ஒலியானது, மிக்கெழ-அதிகரிக்க, கடைந்திடுங்காலை - மதிக்குங்காலத்தில், வெண்டிரை-வெள்ளியஅலைகளையுடைய, பவ்வம் பாற்கடலானது, உயிர்த்த-ஈன்ற, செம்பதுமை-செந்தாமரையிலிருக்கின்றஇலக்குமியினது, வாள்-காந்திபொருந்திய, முகம்போல-முகத்தைப்போல், தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள, ஒண்கதிர்-ஒளிபொருந்தியகிரணங்களை, பரப்பி-விரித்து, திங்கள் நிலவானது, மீது-ஆகாயத்தின்கண், எழுந்தது - உதித்தது—எ-று, (கருத்து) திருப்பாற்கடல்கடையும்போது அதிற்பிறந்த திருமகள் திருமுகத்தையுடைய சந்திஉதையமாயிற்று என்பதாம். (க)

செறிந்தவாழ்கடற்செல்வனுமவனுழைச்சிறந்தாங்
குறைந்தவாருயிர்த்துணைவியர்பலருமுள்ளுவந்து
நிறைந்ததெண்டிரைநீர்குடைந்தாடலினிகலி
யெறிந்தமென்மலர்ப்பந்தெனவெழுந்ததுதிங்கள்.

(இ-ள்) செறிந்த-மிகுந்த, ஆழ்-ஆழ்ந்த, கடற்செல்வனும் - சமுத்திரராஜனும்: அவனுழை-அவனிடத்து, சிறந்து-சிறப்பையடைந்து, ஆங்கு அச்சமுத்திரத்தின்கண், உறைந்த-தங்கிய, ஆர்-நிறைந்த, உயிர் - உயிர்போன்ற, துணைவியர்பலரும், மனைவிமாரனைவரும், உள்ளுவந்து-மனமகிழ்ந்து, நிறைந்த-நிறைவையடைந்த, தெண்டிரை- தெளிந்தஅலைகளையுடைய, நீர்-நீரில், குடைந்து-குளித்து, ஆடலின்-விளையாடற்கண், இகலி பகைத்து, எறிந்த-வீசிய, மெல-மெல்லிய, மலர்ப் பந்தென - பூச்செண்டுபோல, திங்கள்-நிலவானது எழுந்தது-தோன்றிற்று,—எ-று, இகலியென்பதை வலிந்தெனினுமொக்கும் கருத்து சமுத்திர ராசனுமவன்மனைவியரும் நீராடும்போது அவர்கள் பகைத்தெறிந்தபந்தைபபோலுமெழுந்தது சந்திரன் என்பதாம். (உ)

கதிர்செய்நித்திலங்கறங்குதெண்டிரைக்கரத்தெறிவு
முதிர்ப்பநிக்கடன்முகட்டினின்முனைத்தொளிர்திங்கள்
விதியின்மாலையாந்துணைவியைவீங்கிருட்டலைவன்
வதுவையாற்றுவான்வைத்தபொற்குடமெனவயங்கும்.

(இ-ள்) கதிர்செய்-கிரணத்தைச்செய்கின்ற,நித்திலம்-முத்துக்களை-கறங்கு-ஒதுக்கின்ற-தெண்டிரை,தெளிந்த-அலைகளாகியகரத்து கைகளால்,எறியும்-வீசுகின்ற,முதிர்-முதிர்ந்த,பனிக்கடல்-குளிர்ச்சியையுடைய கடலினது,முகட்டினில்-உச்சியில்,முளைத்துதோன்றி, ஒளிர்-விளங்குகின்ற,திங்கள்-நிலவானது,விதியின்விதியினால்,மாலையாம்-மாலைக்காலமாகிய,துணைவியை-மனைவியைவிங்கு-மிகுந்தஇருள,இருளாகிய, தலைவன் நாயகன்,வதுவையாற்றுவான்-மணஞ்செய்யும்பொருட்டுவைத்தவைக்கப்பெற்ற பொற்குடமெனப்-பொன்னாலாகியகுடத்தைப் போல், வயங்கும் விளங்கும்-எ-று(கருத்து)சந்திரனுதயமானது இருளாகியநாயகன்மாலைக்காலமாகிய மனைவியைக்கலியாணஞ்செய்யும்பொருட்டுவைத்தகுடம் போலுமிருந்ததுஎன்பதாம், (௫)

தெள்ளுதெண்டிரைக்கருங்கடலெழுந்தவெண்டிங்கள்
புள்ளவாங்கணைமதனைப்பூம்புனலாட்ட
வள்ளிதழ்க்கருங்குவளைபெய்திரவெனுமடந்தை
வெள்ளிவெண்குடமேந்தினளாவெனவிளங்கும்

(இ-ள்) தெள்ளு-தொழிக்கின்ற, தெண்டிரைதெளிந்தவலை யுடைய கருங்கடல்-கறியகடற்கண்,எழுந்த-தோன்றிய,வெண்டிங்கள்-வெள்ளிய சந்திரனனது,புள்-வண்களானவை,அவாம்விரும்புகின்ற,மணை- மலர்க்கணைகளையுடைய-மதனனை, மன்மதனுக்கு பூம்புனல் - அழகிய நீரினாலே,ஆட்ட-அபிஷேகஞ்செய்ய-இரவெனுமடந்தை-இரவாகிய மடந்தையானவள்,வள்ளிதழ்-கூரியவிதழ்களையுடைய,கருங்குவளை நீலோற்பலப்பூவை,பெய்து-மேலேசூட்டி,வெள்ளி- வெள்ளியினாலாகிய, வெண்குடம்-வெள்ளியகுடத்தை,ஏந்தினளாமென்-ஏந்தினளென்றுசொல்லும்படியாக, விளங்கும் களங்கத்தோடுவிளங்கும்—எ-று.இலக்கணத்திரட்டு பொதுவியற்படலம்-௩ய-ரு-அவற்றுளின்மையைவகையாகும்இவ்விதியால்-கருந்திங்க ளில்லையென்றறி-இலக்கணக்கொத்திலுமிதுவே (கருத்து)சந்திரனுதையமானது இரவென்னும்பெண்ணனவள் மன்மதனுக்கபிஷேகஞ்செய்ய நீலோற்பலஞ் சூட்டி வெள்ளிக்குடத்தை யேந்தினள்போலும விளங்கும்என்பதாம். (௬)

புலவுநாறுவெஞ்சுறவெறிபொருதிரைமுகட்டி
னிலவுகொப்புளித்துயரியநிகரில்வெண்மதிய
மலகிறாரகைமீன்பயிலாரிருட்கடலி
* னுலகமாழ்தலுமெழுந்தபுற்புதமெனவொளிரும்.

(இ-ள்) புலவுநாறு- புலானாற்றநாறுகின்ற, வெம் - வெவ்விய, சுரவு-சுறுமீன்களை, எறி - எறியும், பொரு - கரையின்மோதுகின்ற, திரை அலைகளையுடைய, கடலினது, முகட்டில்-உச்சியில், நிலவு - சந்திரிகையை, கொப்புளித்து - உமிழ்ந்து, உரிய - எழுந்த, நிகரில் - ஒப்பில்லாத, வெண்மதியம் - வெள்ளியசந்திரனனது, அலகில் - கணக்கில்லாத, தாரகை - உடுக்களாகியமீன், மீன்களானவை, பயில் - சஞ்சரிக்கின்ற, ஆரிருள - நிறைந்தவந்தகாரமாகிய, கடலில் - சமுத்திர

உ

கடவுள்துணை.

படல அகராதி.

பக்கம்	ஆவது	படலங்களின்பெயர்.	விருத்தத்தொகை.
௪௫௩	௪௫௩	அரசாட்சிப்படலம்	௰௫
௩௩	௩௩	அன்னத்தைக்கண்ணுற்றபடலம்	௭௪
௬௧	௬௧	அன்னத்தைத்தூதுவிட்டபடலம்	௧௩௪
௧௬௬	௧௬௬	இந்திரப்படலம்	௨௧
௩௬௰	௩௬௰	இளவேனிற்படலம்	௰
௩௫௫	௩௫௫	கலிதோன்றுபடலம்	௰௪
௪௩௬	௪௩௬	கலிநீங்குபடலம்	௰௭
௪௱௧	௪௱௧	கான்புகுபடலம்	௨௧
௧௰௯	௧௰௯	கைக்கிளைப்படலம்	௨௩
௧௪௩	௧௪௩	சந்திரோபாலம்பன்ப்படலம்	௩௭
௨௨௫	௨௨௫	சுயம்வரப்படலம்	௧௭௫
௩௭௬	௩௭௬	சூதாடுபடலம்	௨௮
௪௪௨	௪௪௨	தேவியைக்கண்ணுற்றபடலம்	௨௯
௰௬	௰௬	நகரப்படலம்	௪௨
௩௮௬	௩௮௬	நகர்நீங்குப்படலம்	௪௯
௧௭௬	௧௭௬	நளன்றூதுப்படலம்	௧௩௬
௪	௪	நாட்டுப்படலம்	௨௭
௧௩௫	௧௩௫	நிலாத்தோற்றுப்படலம்	௨௰
௪௱௯	௪௱௯	பிரிவுறுப்படலம்	௩௭
௩௬	௩௬	புனல்விளையாட்டுப்படலம்	௨௨
௩௬௪	௩௬௪	போதுகொய்படலம்	௰௪
௨௯௭	௨௯௭	போர்புரிபடலம்	௭௮
௩௨௫	௩௨௫	மணம்புரிபடலம்	௬௮
௧௯௰	௧௯௰	மன்மதோபாலம்பனப்படலம்	௰௬
௧௩௰	௧௩௰	மாலைப்படலம்	௰௨
௩௫௰	௩௫௰	மீட்சிப்படலம்	௰௫
௪௨௯	௪௨௯	வீமன்தேடவிட்டபடலம்	௰௯
௪௨௨	௪௨௨	வேற்றுருவமைந்தபடலம்	௰௮

ஆகப்படலம்-௨௮-க்கு-செய்யுள்-௲௱௭௧

உ

கடவுள்துணை.

விருத்த அகராதி.

த்தில், உலகமாழ்தலும்- உலகமூழ்கிப்போதலும், எழுந்த அதிலிருந்து மேலெழுந்த புற்புதமென-குமிழியைப்போல், ஒளிரும்விளங்கும்-எ-று *தொல்காப்பியமரபியல்-அஅ-ரூ-நிலந்தீநீர்வளிவிசும்போடைந்து, கலந்த மயக்கமுலகமாதலி னிருதிணையைம்பாலிய- னெறிவாமூமைத்-திரிவில் சொல்லொடுதழா அல்வேண்டும் இவ்விதியால் உலகமைம்பூதமுடைத்து (கருத்து) சமுத்திரத்திடத்துதித்த சந்திரனுனது இருட்கடலெழுந்தநீர்க்குமிழியையொக்குமென்பதாம். (௫)

திரைநெடுங்கடலில்வயிறுளைந்தீன்றவெண்டிங்க
ணிரைசெழுங்கதிர்க்கரங்களாலம்பரநீவ
விரவுகின்றபுன்மாலையாந்தெரிவையுள்வெட்கி
யருணவெங்கதிர்ச்சுடரினையொளியறவவித்தாள்

(இ-ள்) திரை-அலைகளையுடைய- நெடுங்கடல்-நெடியகடலானது-வயிறுளைந்து-வயிறுநொந்து ஈன்ற-பெற்ற, வெண்டிங்கள்வெள்ளியசந்திரனுனவன், நிரைவரிசையாகிய, செழுங்கதிர்செழுமையுள்ளகிரணங்களாகிய கரங்களால், கைகளால், அம்பரம்-ஆகாயமெனனுங்கனதாடையை, நீவ-தடவ, விரவுகின்ற-கலக்கின்ற, புல்லிய, புல்லியமாலையாம்-மாலைக்காலமாகிய, தெரிவைபெண்ணானவள் உள-உள்ளத்தில், வெள்கி-நாணி, அருணம்-சிவப்பாகிய, வெங்கதிர்-சூரியனுகிய, சுடரினை-தீபத்தை, ஒளியற-ஒளிநீங்க, அவித்தாள்-அவித்தனள்-எ-று (கருத்து) சமுத்திரமீன்றசந்திரனுனவன்கிரணக்கரங்களால்மாலைக்காலமாகியபெண்வஸ்திரத்தைத்தடவ அப்பெண்வெட்கிச் சூரியனுகியவிளக்கை அவித்தாள்-எ-ம் (௬)

குறைவில்வெண்மதிதோன்றமென்குமுதநாண்முகையிற்
சிறகர்வண்டொடுபாணமாரவமு முயிரினிற்சிறக்கு
மிறைவன்வார்திரைக்கடன்முகட்டெழுந்தனனென்று
மறையவந்ததூதர்களசொல்லிற்றோன்றியதன்றே.

(இ-ள்) குறைவில்-களங்கமிராகிய, வெண்மதி-வெள்ளியசந்திரனுனவன், தோன்ற-உதையமாக, மென்-மெல்லிய, குமுதம் அல்லிகளையுடைய, நாள்-புதிய, முகையில்- அரும்புகளில், சிறகர்- இறகுகளையுடைய, வண்டு-வண்டுகள், பாண-இசைகளை, ஆரவம்-ஒலிசெய்தல், உம்-உம்முடைய, உயிரினில்- உயிர்க்காட்டிலும் சிறக்கு- சிறந்திருக்கின்ற இறைவன்-நாயகனுனவன், வார்-நெடிய, திரை-அலைகளையுடைய, கடல்-கடலினது, முகட்டு-உச்சியில், எழுந்தனனென்று-புறப்பட்டானென்று, அறையவந்தசொல்லவந்த, தூதர்கள்-தூதர்களுடைய, சொலில்-சொல்லைப்போல், தோன்றியது-தோன்றியது, (கருத்து) சந்திரனுதயமாக அல்லிமலரில்வண்டுகளொலிசெய்தல் உங்கள்நாயகன்புறப்பட்டானென்று சொல்லவந்ததூதர்சொல்லைப்போலுமிருக்கது-எ-ம். (௭

தெண்பனிக்கடற்றிரையினின்றுயிர்த்தவெண்டிங்க
டண்புனற்றடத்தடம்பலமெல்லிதழ்தனில்வர்
தொண்கரந்நிறுனெகிழ்ந்தலுரான்மீனூரக்
கண்டதைத்தெனக்குவிந்தனகடிகமழ்கமலம்;

(இ-ள்) தென்-தெள்ளி, பனி- குளிர்ச்சிபொருந்திய-திரை- அலைகளையுடைய, கடல்-கடலானது, இனிது-இனிதாக, உயிர்த்த-ஈன்ற, வெண்டிங்கள்-வெள்ளியசந்திரன், தண்-தண்ணிய, புனல்- நீரையுடைய, தடத்து-தடாகத்திலுள்ள, ஆம்பல்-அல்லியினுடைய, மெல்-மெல்லிய, இதழ்-இதழ்களாகிய, துகில்-ஆடையை, ஒள்-ஒள்ளிய, கரத்தினால்-கிரணமாகியகையினால், தைவந்து- தடவி நெகிழ்த்தலும்- அவிழ்த்தவளவிலே, கடி-வாசனை, கமழ்-மணக்கின்ற கமலம்-தாமரை, நாணம்- அச்செய்கையைக்கண்டுண்டாகியகாரணம்-மீதூர-அதிகரிக்க, கண்புதைத்தென-கண்களைமூடிக்கொண்டனபோல, குவிந்தன-முகிழ்த்தன-எ-று. (கருத்து) கடலீன்ற சந்திரனானவன் கிரணங்களால் அல்லிகளிதழாகிய வஸ்திரங்களையவிழ்த்தவளவில் தாமரைகள் வெட்கிக்கண்களை மூடிக்கொண்டனபோலுங் குவிந்தன-எ-ம். (அ)

களிசெய்காமநோய்விளைத்திடுமிரவெனுங்கன்னி
களிகொள்வெண்மதிநலங்கிளர் வாண்முகமதனாற்
றெளிநிலாக்கதிர்த்தேறலைக் கொப்புளித்தலுஞ்சிறந்த
வொளிகொள்வான்மகிழ்பூத்தெனவிளங்கினவுடுக்கள்.

(இ-ள்) களிசெய-களிப்பினைச்செய்கின்ற, காமநோய்- காமமாகியநோயை, விளைத்திடும்-உண்டாகும், இரவெனுங்கன்னி-இரவென்னுமங்கையானவள், களிகொள்-குளிர்ச்சியைக்கொண்ட, வெள்- வெள்ளிய, மதி-சந்திரனாகிய, நலங்கிளர்-நன்மைவிளங்காநின்ற, வாள்-காந்திபொருந்திய, முகமதனால்-முகத்தைக்கொண்டு, தெளி-தெளிந்த நிலா-ஒளிபொருந்திய, கதிர்-கிரணமாகிய, தேறல்-மதுவை, கொப்புளித்தலும்-உமிழ்தலும், சிறந்த-சிறக்கப்பெற்ற, ஒளிகொள்-ஒளியைக்கொண்ட, வான்-ஆகாயமாகிய, மகிழ்-மகிழமரமானது, பூத்தென- மலர்ந்ததுபோல, உடுக்கள்-தாரகைகள், விளங்கின-ஒளிசெய்தன, எ-று (கருத்து) இரவாகியபெண்ணானவள் சந்திரனாகியமுகத்தைக்கொண்டு கிரணமாகியதேனைக்கொப்புளிக்கச் சிறப்புற்றவாகாய மகிழமரங்கள் பூத்தனபோலும் நட்சத்திரங்களுதயமாயின-எ-ம். (௯)

நள்ளிருட்குறும்பெறிந்தெழுநளிர்மதிச்செல்வன்
விள்ளுமாம்பல்வாய்க்கங்குலாந் தெரிவையைவேட்ப
வள்ளிவான்மகள்சிதறுவெண் பொரியெனவமைந்த
புள்ளிமீனமகல்விசும்பினிற்பொடித்த.

(இ-ள்) அமைந்த-நிறைந்த, புள்ளி-பொறிகளாகிய, மீனினந்தாரகைகளுடைய கூட்டங்களானவை, நள்-மிக்க-இருள்-இருளாகிய, குறும்பு-குறுநிலமன்னனை, எறிந்து-அழித்து, எழுதோன்றியநளிர்குளிர்ச்சிபொருந்தி மதி-சந்திரனாகிய, செல்வன்-அரசிளங்குமரனானவன், விள்ளும்- மலர்கின்ற ஆம்பல்-செவ்வல்லிப்பூவாகிய, வாய்-வாயையுடைய, கங்குலாம்-இராவாகிய, தெரிவையைமங்கையை, வேட்ப-மணஞ்செய்ய, வான்-ஆகாயமாகியமகள்-மாதானவள், அள்ளி-கைகளாலள்ளி-சிதறு-இறைத்த, வெண்பொரியென வெள்ளியபொரிகளைப்போல, அகல்- அகன்றஇருவிசும்பினில் பெரியவாகாயத்தின்கண், பொடித்த-தோன்றினவென்பதாம், எ-று (க

ருத்து) சந்திரன் இரவென்றும்பெண்ணை மணஞ்செய்யவாகாயமென்னு மபெண்ணானவள் அள்ளித்தூவியபொரிகளைப்போல நட்சத்திரங்களுதயமாயின-எ-ம். (௰)

திங்கள்வேந்துவெண்டாரகைத் துணைவியர்செறிய
வங்கண்வானகத்தெழுதலுமாரமுதுகுக்கும்
பொங்குவெண்கதிர்வெள்ளியம்பிரம்புபார்போர்த்த
துங்கவல்லிருட்குறுநிலவேந்தினைத்துரந்த,

(இ-ள்) திங்கள்-சந்திரனாகிய, வேந்து-அரசனானவன், வெண்டாரகை வெள்ளியஉடுக்களாகிய, துணைவியர்-மனைவியர், செறிய-தன்னோடுநெருங்கிவர, அங்கண்-அழகியவிடத்தையுடைய, வானகத்து-ஆகாயத்தின்கண், எழுதலும்-தோன்றியவளவில், ஆர்-நிறைந்த, அமுது-அமிர்தத்தை, உகுக்கும்-சிந்துகின்ற, பொங்கு-மிகுந்த, வெள்-வெள்ளிய, கதிர்-கிரணங்களாகிய, வெள்ளிபம்பிரம்பு-வெள்ளிப்பிரம்புகளானவை, பார்-பூமியை, போர்த்த-மூடிய, துங்கம்-உயர்வுள்ள, வல்-வலிய, இருள்-இருளாகிய, குறுநிலவேந்தினை-குறுநிலமன்னனை, துரந்த-துரத்தின-எ-று. அம்சாரியை (கருத்து) சந்திரனாகியவரசன் நட்சத்திர மனைவிகளோடு வானத்திலுதித்தவளவில் அவன்கிரணமாகிய பிரம்புகள் இருளாகிய குறுநிலவரசனைத்துரத்தின-எ-ம். (௰௧)

தாழும்வண்டிமிர்தண்மலர்தடஞ்சினைக்கருவி
னிழலெலங்கணுந்துயல்வருகின்றனநெடுநீ
ராழிவெண்டிரைமுகட்டெழுமவிர்மதிக்கதிர்வாள்
போழும்வல்லிருட்டுணிபலபதைப்பனபோலும்.

(இ-ள்) வண்டிமிர்-வண்டிசையொலிக்கின்ற, தண்-குளிர்ச்சிபொருந்திய, மலர்-மலர்களையுடைய, தாழும்-தாழ்ந்த, தடம்-விசாலமுள்ள, சினை-கிளைகளைப்பொருந்திய, தருவின்-மரத்தினுடைய, நிழல்-நிழல்களானவை, எங்கணும்-எவ்விடத்தும், துயல்வருகின்ற-அசைகின்றன, நெடுநீர்-நெடியநீரையுடைய, ஆழி-கடலினது, வெண்டிரைமுகட்டு-வெள்ளியவலைகளினுடையவுச்சியில், எழும்-தோன்றும், அவிர்-காந்திபொருந்திய, மதி-சந்திரனானவன், கதிர்வாள்-கிரணங்களாகியவாளினாலே, போழும்-பிளக்கப்பட்ட, வல்-வல்லிய, இருள்-இருளினது, துணி-துண்டங்கள், பல-அனேகம், பதைப்பனபோலும்-பதைப்பனவற்றையொக்கும்-எ-று, (கருத்து) தருக்களினிழல்கள் அசைவன எவைபோலவெனின் சந்திரகிரணங்களென்னும் வாட்களாலவெட்டுப்பட்டு இருட்டுண்டங்கள்பதைப்பனபோலாம்-எ-ம். (௰௨)

செருவின்மாண்டவரம்பையர்ச்சேர்குவரென்றே
பொருவில்வெண்மதிபொழிகதிர்வாளினாற்போழ்ந்த
விருளுமின்னதிற்கொழும்புகையுருவெடுத்தெழில்சே
ரரமடந்தையர்கருக்குழற்கற்றைசென்றடைந்த.

[இ-ள்] செருவில்-போரின்கண், மாண்டவர்-இறந்தவர், அரம்பையர்-அரம்பையரை, சேர்குவர்-அடைகுவர், அன்றே-ஆகையால், பொருவில்-ஒப்பில்லாத, வெண்மதி-வெள்ளியசந்திரனானவன், பொழி-பொ

றுகின்ற, கதிர்-கிரணமாகிய, வாளினால்-கத்தியினால், போழ்ந்த-வெட்டப்பட்ட, இருளும்-அந்தகாரமும், இன்-இனிய, அகில்-அகிற்கட்டைகளது, கொழும்புகை-கொழுமிய தூமத்தினது, உருவேவித்து-வடிவெடுத்து, எழில்சேர்-அழகுபொருந்திய, அரமடந்தையர்-தெய்வமங்கையருடைய, கரும்-கரிய, குழற்கற்றை-மயிர்முடியை, சென்று-போய், அடைந்த-சேர்ந்தன-எ-று, கருத்து போரிலே மாண்டவரம்மையைச் சேருவர் ஆகையால்-சந்திரகிரணவாளால் வெட்டப்பட்ட இருட்களும், அகிற்புகைவடிவெடுத்தரமடையின் கூந்தலை அடைந்தன-எ-ம். (௰௩)

களிகொள்வண்டினமாம்பல்சேர்ந்திசைபயில்காட்சி
யொளிரும்வெண்மதிதாரத்தலுடைந்தகாரிருள்போ
லளியின்மேல்லுருவெடுத்தவனருந்துணைவியர்பா
லெளிமையின்னுரையிரங்கிவீழ்ந்திசைப்பனவியையும்.

(இ-ள்) களிகொள்-மகிழ்ச்சியைக்கொண்ட, வண்டினம்-வண்டுக்கூட்டங்கள், ஆம்பல்சேர்ந்து-அல்லிமலர்களையடைந்து, இசைபயில்-இராகத்தைப்பாடுகின்ற, காட்சி-தோற்றமானது, ஒளிரும்-விளங்குகின்ற, வெண்மதி-வெள்ளியசந்திரனுடைய, தாரத்தலும்-தாக்கியவளவிலே, உடைந்த-சிதைந்த, காரிருள்-கரியவிருளானது போல், தன்னுருவ-நீங்கி அளியின்-வண்டுகளுடைய, மெல்லுருவெடுத்து-மெல்லியவுருவங்கொண்டு, அவன்-அச்சந்திரனுடைய, அரும்-அருமையாகிய, துணைவியர்பால்-மனைவியரிடத்து, எளிமை-எளிமையாகிய, இன்னுரை-இனியசொற்களை, இரங்கி-புலம்பி, வீழ்ந்து-அடிபணிந்து, இசைப்பனவியையும்-சொல்வனவற்றையொக்கும்-எ-று, கருத்து அல்லிமலர்களின் வண்டுகள் சேர்ந்திசைபாடுங்காட்சியானது சந்திரனுறாக்கியவளவில் சிதைப்பட்டவிருட்களானவை வண்டுருக்கொண்டு அச்சந்திரன்மனைவியரிடத்திரங்கிச் சொல்வனபோலுமிருந்தது-எ-ம். ௰௪

முள்ளரைச்செழுமுளரியுமுருகொப்புளிக்கு
மள்ளலங்கயத்தாம்பலுமுறவெனவுட்கொண்டு
கள்ளுலாமலர்குழிந்தவக்கடிமலர்க்கமல
பிள்ளைவண்டினுக்கூறுந்தேன்பெரிதளித்ததனால்

(இ-ள்) கள்ளுலாம்-தேனொழுகுகின்ற, மலர்-அல்லிப்பூவானது, குழிந்த-குவிந்த, அக்கடி மலர்க்கமலம்-அப்படிப்பட்டவாசனையுள்ள, தாமரை-மலரினது, பிள்ளைவண்டினுக்கு-பிள்ளையாகியவண்டுக்கு, ஊறுகின்ற, தேன்-தேனை, பெரிது-மிகவும், அளித்ததனால்-கொடுத்ததனால், அள்ளல்-சேற்றையுடைய, அம்-அழகிய, கயத்து-குளத்திலுள்ள, முள்-முட்களையுடைய, அரை-தாளைபொருந்திய, செழு-செழிய, முளரியும்-தாமரைப்பூவும், முருகு-தேனை, கொப்புளிக்கும்-உமிழுகின்ற, ஆம்பலும்-அல்லிப்பூவும், உறவென-தம்முறவுடையனவென்று நாம, அறிந்தேம்-அறிந்துகொண்டேம்-எ-று, கருத்து அல்லிமலர்களானவை தாமரைகளிலுள்ள வண்டுகளுக்குத் தேனைக்கொடுத்தமையால் இரண்டுமுறவென்றறிந்தோம், (௰௫)

கங்குலெய்தியகாரிருட்கருங்கடறெளியத்
திங்களென்சுடர்த்தேற்றினற்றேற்றலுஞ்சிறந்து
பொங்குவெண்ணிலாத்தெளிந்தகலனீரெனப்பொலிந்த
பங்கமென்னநீடருநிழல்படியினிற்படிந்த,

(இ-ள்) கங்குல்-இரவிலே, எய்திய-அடைந்த, கார்-கரிய, இருள் - இருளாகிய, கருங்கடல்-கரியகடலானது, தெளிய-கலக்கந்தீர, திங்களென-சந்திரனென்னும், சுடர்-காந்தியையுடைய, தேற்றினல்-தேற்றாமவித்தினாலே, தேற்றலும்-உரைத்துத்தெளிவித்தவளவில், சிறந்து-சிறப்புப்பெற்று, பொங்கு-விளங்குகின்ற, வெண்ணிலா-வெள்ளியசந்திரிகைகள், தெளிந்த-தெளிவையடைந்த, கலனீரென-கலநீர்போல, பொலிந்த-பொலிவையடைந்தன, நீள-நெடிய, கருநிழல்-மரங்களுடைய நிழல்களானவை, படியினில்-பூமியின்மேல், பங்கமென-சேறுபோலபடிந்தன-எ-று, கருத்து இருட்கடலானது தெளியச் சந்திரனென்னுந் தேற்றாமவித்தினாலே உரைத்துத் தெளிவித்தளவில் அவ்வகிரணங்களே நீர்போலிருந்தன தருக்களினிழல்கள் அவ்வேலை சேறுபோலிருந்தன எ-று, ௯௬

அகல்விசும்பெனுமாவின்மென்மடியெனத்தோன்றித்
திகழும்வெண்மதியுமிழ்தருசெழுங்கதிர்ப்பால்
முகைநெகிழ்ந்துதேன்பிலிற்றியமுல்லையம்புறவி
னுகளபுனிற்றிளங்கன்றெனச்சகோரங்களுண்ணும்,

(இ-ள்) அகல்-அகன்ற, விசும்பெனும், ஆகாயமென்கிற- ஆவின்பசுவினது, மெல்-மெல்லிய, மடியென-மடியைப்போல, தோன்றி-உண்டாகி, திகழ்-விளங்குகின்ற, வெண்மதி-வெள்ளியசந்திரன், உமிழ்தரு-சொரிகின்ற, செழுவ-செழிய, கதிர்-நிலை, வாகியதீம்-மதுரமபொருந்திய பால்-பாலை, முகை-அரும்புகள், நெகிழ்ந்து-விரிந்து, தேன்-தேனை, புலிற்றிய-துளித்த, முல்லைக்-கொடியையுடைய, அம்-அழகிய, புறவின்-முல்லைநிலத்தினது, உகள-துள்ளுகின்ற, புனிற்றிள-மிகுந்தவிளமையையுடைய, கன்றென-கன்றுபோல், நின்று-நிலைபெற்று, உண்ணும்-குடிக்கும்-எ-று, கருத்து ஆகாயமென்னும் பசுவினது மடியாகத்தோன்றுஞ் சந்திரனது கிரணமாகிய பாலைமுல்லைநிலத்திளங்கன்றைப்போற சகோரங்களுண்ணும்-எ-று, ௯௭

நன்கமைந்தசாளரத்துறுநகைநிலாக்கொழுந்தை
யன்பினீடுகூர்வாயினற்சகோரங்களருந்தன்
மின்செய்வெள்ளிவெண்கம்பியைவிளங்கு
பொன்செய்கம்மியர்குறட்டினல்வாங்குதல்போலும்,

இ-ள், நன்கமைந்த-அழகுபொருந்திய, சாளரத்து-பலகணியினுள், உறு-அடைகின்ற, நகை-ஒளிபொருந்திய,நிலாக்கொழுந்தை-சந்திரனுடையவிளங்கிரணங்களை, அன்பின்-ஆசையோடு, நீடு-நீண்ட, கூர்வாயில-கூரியவாயினல், சகோரங்கள்-சகோரப்பறவைகள், அருந்தல்-உண்ணுதல், மின்செய்-காந்தியைச்செய்கின்ற வெள்ளி-வெள்ளியினுலாகிய [illegible] வெண்கம்பியை-வெள்ளியகம்பியை, விளங்கு-விளங்குகின்ற, [illegible]

ல்-கம்பிபச்சென் னுங்கருவியில்,பொன்செய்கம்மியர்-பொன்வேலைசெய் யுங்கம்மாளர், கூட்டினல்-குட்டினுற்பற்றிவாங்குதல்போலும். இழு த்தலையாக்கு ம-எ-று, கருத்து பல்கணியுட்பொருந்துஞ் சந்திரகிரண ங்களைச் சகோரங்களுண்ணுதல்லாது போலெனின்போற்கெ ல்லர்வெள் ளிக்கம்பியைக் கம்பியச்சிறகுரட்டால் இழுக்தல்போலும்-எ-ம், ௯௮

துலங்குவெண்மதித் தூநிலாக்கதிரினின் றிலங்கு

பொலங்கொண்மாடமேற்பு துநிலாமணிபுனல்பொழித

நலம்பெய்நேமியம்புட் குலம்பிரிவுள்நலியப

புலம்புமாறுகண்டுள்ளநெக்குருகுதல்போலும்,

இ-ள், துலங்கு-விளங்குகின்ற, வெண்மதி-வெள்ளியசந்திரனது, தூ-பரிசுத்தமாகிய, நிலாக்கதிரில்-சந்திரிகையில், நின்று-நிலைபெற்று, இலங் கு-ஒளிர்கின்ற, பொலங்கொள-அழகினைக்கொண்ட, மாடமேல்-உப்பரி கைமேற்பதித்த, புது-புதிய, நிலாமணிர்-சந்திரகாந்தங்கள்,புனல்-நீரை பொழிதல்-சொரிதலானது, நலம்பெய-சுகத்தையளித் தருகின்ற, நேமிய ம்புள்-சக்கரவாகப்பறவைகளானது, குலம்-கூட்டத்தினது, பிரிவு- ஆ ண்பெண்களின்பிரிவானது, உளம்-அவற்றின்மனத்தை, நலிய-வருத்த புலம்புமாறு-அலைவருந்துன்மையை, கண்டு-அரிச்சந்திரகாந்தங்கள் க ண்டு,உள்ளம-தம்துள்ளம,நெருக்குதல்போலும-கரைந்துருகுதல்போ லும்-எ-று, கருத்து சந்திரன்கிரணங்களால்சந்திரகாந்தம்நீரைப்பொழி தலானது சகோரங்கள்பிரிதலைக்கண்டுருகுதல்போலும்-எ-ம், ௯௯

இன்னகாரிருட்கங்குலுக்கெல்லைகாணகிலளாய்க்

கன்னலஞ்செழுங்கழனிசூழ்விதப்பநாடளிக்கு

மன்னர்மன்னவனருந்தவப்பேற்றினால்வந்த

பொன்னைவாஞ்சணக்கணிமுலைப்பூங்கொடி புலம்பும்,

இ-ள், கன்னல்-கரும்புகளையுடைய, அம்-அழகிய, செழும்- செழுமை யுள்ள, கழனிசூழ்-வயல்கள்சூழ்ந்த, விதர்ப்பநாடு- விதர்ப்பதேசத்தை அளிக்கும-காக்கின்ற, மன்னர்-மன்னவன், அரசர்க்கரசனாகியவீமனது, அருந்தவப்பேற்றினால-அரியதவப்பலத்தினால், வந்த-தோன்றிய,பொ ன்னைவாம-விரும்புகின்ற, கணைக்கணி-தேமலணிந்த, முலை- தனத்தினை யுடைய, பூங்கொடி-மலர்க்கொடிபோல்பவளாகிய, தமயந்தி இன்னஇத் தன்மைத்தாகி, காரிருள்-கரியவிருளையுடைய, கங்குலுக்கு-இராவிற்கு, எல்லைக்காணகிலளாய் - அளவுகாணாதவளாகி, புலம்பும் - புலம்புவாள் எ-று, விரசோழியமபொருளதிகாரமேற்கோள், கூ-அகமெய்ப்பாட யனையுங்காலை, விளர்ப்பேபசப்பே, மெலிவேவிதிர்ப்பே துளக்கந்துயர் த்தல் அமலசோர்தல் வியர்க்தல் வெருவுதல் விம்முதல்-விரும்புதல் ஒப்பிலாமை யுருகுதல் மயங்குதல் மூரியுயிர்ப்பு மூர்ச்சனை மூ ருவல் காரிகைகெடுதல் கழிக்கணோட்ட மிருந்தழி மிராமை

யாமமிழ்கமிழ்தல், வருந்திக்காட்டுதல் வாய்சனியுருதல், சிந்தையைகூர்தல் சேர்துயிலின்மை, கண்டதுமருந்தல் காட்சிவிருப்பட, உண்டிவிரும்பாமையு ணர்த்ததுமறத்தல், கண்ணீர்விழிக்கலைகணவுகனிகாண்டலென, வெண ணற்றுமையு-மென்மனார்புலவர், இவ்விதனாநபுலம்புவாள் (கருகது) கம யந்தியானவள இவ்விராக்காலத்துளவு காணுதவளாய்ப்புலம்புற லுருவ ளாயினள. எ-ம். ௨௰)

நிலாத்தோற்றுப்படலம்

முற்றிற்று.

௨

சந்திரோபாலம்பனப்படலம்.

இப்படலத்தால்மேலுதித்தசந்திரனை விரகநோய்கொண்ட தமயந்தியானவள் நிந்தித்துச்சொல்லப்படுகின்றன

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிதெண்டிரைநீர்க்கருங்கடல்வான்முகட்டிலெழுந்தவெண்டிங்காள்
மருவுதிரைநீர்கவற்றுசிகைவடவைபிடத்தொமைவிளர்ப்பக்
கருகுங்கொடியவெவ்விடத்தின்கண்ணேதனைக்காருயிர்பருக
வெரிவெங்கிரணவுடலைவெதுப்பையாணடுக்கற்றாயறியேமால்

[இ-ள்] விரி- விரிந்த, தெள்ளிய, திரை- அலைகளையுடையநீர்- நீராயுள்ள, கருங்கடல்- கரியகடலானது, வான் உயர்ந்தமுகட்டில்உச்சியில், எழுந்த-உதயஞ்செய்த, வெண்டிங்கள்- வெள்ளியசந்திரனே, உணர்ந்தார்- பிரிந்தவர்களுடைய, உயிர்பருக- உயிரைக்குடிக்க, எரி-எரிகின்ற, வெங்கதிரால்-வெவ்வியகிரணத்தினால், உடல்வெதுப்பப்பட்ட லேச்சுட-மருவுபொருந்துகின்ற, திரைநீர்-அலையையுடையநீரினை, கவற்று- கவறச்செய்கின்ற சிகைகொழுந்தினையுடைய- வடவையிடத்தோ- வடவைத்தீயிடத்தோ மைவிளர்ப்ப அஞ்சனமும்வெள்ளிதாக, கருகும்-கருகிய, வெவ்விடத்தின் கண்ணேனுவெவ்வியவிடத்தினிடத்தோ- யாணடுக்கற்றாய்-இவ்விரண்டினுள்எதனிடத்துக்கற்றுக்கொண்டாய், அறியேம்-யாம்அதனைஅறிந்திலோம், எ-று [கருத்து] சந்திரனே வெவ்வியகிரணங்களாலேபிரிந்தவருடலைச்சுட வடவாமுகாக்கினியிடத்துக் கற்றாயோ எவ்விடத்திற்கற்றாய்-எ-ம். ௧

செய்யகமலமலர்கூம்பச்சேர்ந்தகொடியவெண்டிங்காள்
வெய்யகதிர்வாள்வீசியுயிர்விட்டியதனாற்புகழ்பெறுக
பொய்யிரவத்தினிற்பயந்தபுணரிவேந்தன்குலம்வாழ்க
மையல்கூரென்றனுனானும்பெருந்தகாதொழிற்பல்வேண்டிமால்.

[இ-ள்] செய்ய,சிவந்த,கமலமலர்-தாமரைப்பூக்களானவை, கூப்ப-குவிய, சேர்தர-அடைந்த, கொடிய-கொடுமைபொருந்திய,வெண்டிங்கள் வெள்ளிசந்திரனையும்புல்லூர்மயக்கமிருந்தவ, என்றனை-என்னை,நாளுமெந்நாளும்,வருத்தாது-வருத்தஞ்செய்யாமல்,ஒழியவேண்டும்,சரவேண்டும்,வெய்ய-வெவ்விய கதிர்வாள்-வீசி- கிரணமாகியவாளைவீசி,உயிர்விட்டனனுயிரைக்கொன்று-அதினால் அக்கொலைத்தொழிலினால்,புகழ்கீர்த்தியை,பெறுக,பெறக்கடவாயாக பொய்யில்,பொய்தவிர்ந்த,தவத்தின் தவத்தினால்,சிறப்பயகை-உன்னைப்பெற்ற புணரிவேந்தின்- கடலரசனுடைய குலம்-மரபு,வாழ்க-வாழக்கடவது,என்று, வீரசோழியம்பொருளதிகாரமேற்கோள்கு-புறமெய்ப்பாடே கிரணுவிப்புகலி-லாரணங்காயவங்காமங்காமனை,காரணம்பற்றிக்கருக்குலேறுபட்டு, மற்றுமோரோழுயமெய்க்கண்டகனேடு, மெட்டாமெனைபரியல புணர்ந்தோரோ இவ்விதியால் ஆரணங்காகிய தலைவருக்சம்திகையுற்றாள்[கருகதுை]கொடுமையளசந்திரனை என்னைவருத்தா தொழிவாயாக, கிரணவாளால்வெட்டிப்புகழ்பெறுவாயாக என்னைப்பெற்றவருண ராஜனகுலமும்வாழ்க-ம் உ

விரவுகரிபகூரிருள்வாம் வெய்யோனென்னக்கதிர்பரப்பி
மருவுகொழுநர்ப்பிரிந்தாரை வருத்தாநிற்குமாமதியே
திரைசெய்கடல்பொன்னுருக்கியபோற்செங்கேழெழுந்தபுலரிழு
மிரவிகதிரால்சவியழுங்கியிருக்கல்யானேசாண்குவனுல்,

[இ-ள்]விரவு-உலகமெங்கணும் கடந்தகரிய-கறுத்தகூரிருள்வாய்-மிக்கவிருளினிடத்தில்,வெய்யோனென்ன-சூரியனென்றசொல்ல, கதிர்கிரணங்களை,பரப்பி,விரித்து,மருவு- கலமையணைந்த,கொழுநர்ப்பிரிந்தாரை தலைவரைப்பிரிந்தமாதர்களை-வருத்தாநிற்கும்-வருத்துகின்ற,மாமதியே-பெரியசந்திரனே, திரைசெய்- அலைகளையுண்டாக்குகின்ற.கடல்-கடலானது,பொன்னுருக்கிய போல்,பொன்னையுருக்கியதுபோல்-செங்கேழய்த்செந்நிறமடையபுலரி-விடியற்காலத்தில்,எழும்-எழுகின்ற.இரவிகதிரால்சூரியகிரணத்தால், சவிமழுங்கி,ஒளிகெட்டு,இருத்தல்,இருக்கையையானே-நானே,காணுகுவன்-பார்ப்பேன்-எ-று-கருத்து-மகிழ்நரைப்பிரிந்தமாதரைவருத்துகின்றசந்திரனேநீசூரியகிரணத்தாலொளிமழுங்கியிருக்கலையானேகாணப்பேனை-ம, ௩

கன்றுகுணிலாக்கனியுகத்தோன் கடலினமுதங்கடைந்தெடுப்பக்
குன்றமிடலுக்கலையனைத்துந்தகர்ந் துள்ளாவிகுறைந்திலையே
துன்றுகதிர்வெண்கலைமதியே சுலவுதிரைநீர்கடல்முடித்த
வன்றுகலசமுனிவயிற்றிலற்றுயென்னிலழலாயே

இ-ள்கன்று-பொருந்திய,கதிர்கிரணங்களையுடைய,வெள்வெள்ளிய,கலைமதியே-கலைகளையுடையசந்திரனேகன்றுபகவின்கன்றை,குணிலா-குறுந்தடியாகக்கொண்டு,கனி-விளாங்கனியை, உகுத்தோன் -உதித்தநாரணனவன்,கடலின பார்க்கடலிலே,கடைந்து- மதித்து- அமுதம்- அமிர்தத்தை,எடுப்ப-எடுத்தல்வேண்டி,குன்றம்மந்தரமாலையை இடலும்-இட்ட

வளவில்—கலையனைத்தும்-பதினாறுகலைகளும், தகர்ந்து-உடைந்து, உள்ளாவி-உள்ளேயிருக்கின்ற, உயிர்-குறைந்திலை, நீ-குறைந்தாயில்லை. கடல்-கடலினுடைய—சுலவு-சுழல்கின்ற, திரை-அலைகளையுடைய; நீர்-நீர்முழுவதையும்—குடித்தபாணம்-பானம்பண்ணின, அன்று-அந்நாளில்—கலசமுனி-அகத்தியமுனியுடைய—வயிற்றில்-வயிற்றினிடத்தில்—அற்றுயெனில்-நிசீரணித்தாயானால், அழலாய்-இன்றுசுடமாட்டாய்—எ-று. (கருத்து) வெள்ளியசந்திரனே திருமாலானவர் திருப்பாற்கடலிலமுதங்கடைந்தெடுக்க மந்தரமலையை யிட்டவளவில் கலைகள்கெட்டாவிகுறைந்திலை அந்நாளில் கடலைக்குடித்த அகத்தியத்திற் சீரணித்தாயென்னில் என்னைச்சுடாய் என்பதாம். (௪)

மட்டுவிரியுமலர்வாளிவருந்துந்தமியேனுயிர்சோரப்
பட்டபுழையிலழலுமிழுங்கதிர்கள்சுருக்கிப்பார்வேந்த
னெட்டுவரையுமிகழ்ந்துபொலங்கிரியோடிகலுமிருகடந்தோ
டொட்டகரமென்கரத்தாலென்னுடலந்தொடுவாய்சுடர்திங்காள்.

(இ-ள்) சுடர்திங்காள்-ஒளியையுடையசந்திரனே—நீவருந்துதல்-விரகத்தினால்வருந்துகின்ற—தமியேன்-தமியேனாகிய—வென்னுடையஉயிர்சோர - ஆவிசோர—மட்டுவிரியும் - தேனொழுகுகின்ற—மலர்வாளி-மலர்ப்பாணங்கள்—பட்ட - தைத்த—புழையில் - துவாரத்தில்—அழலுமிழும் - அக்கினியையுமிழ்கின்ற—கதிர்கள - கிரணங்களை—சுருக்கி- அடக்கிக்கொண்டு—பார்வேந்தின் - புவிக்கரசனாகியநளமகாராசனுடைய—எட்டுவரையும்- அட்டகுலகிரிகளையும், இகழ்ந்து-இகழ்ச்சிசெய்து—பொலங்கிரியோடு-மேருமலையுடனே—இகலும்-பகைக்கின்ற—இரு-இரண்டாகிய—தடந்தோள்-பெரியபுயங்களை—தொட்ட-தீண்டிய—கதிர்-கிரணங்களாகிய—மென்கரத்தால்-மெல்லியகரங்களால்—என்னுடலம் - என்னுடையதேகமுழுவதையும்—தொடுவாய் - தீண்டுவாயாக—எ-று. (கருத்து) சந்திரனே நளனைத்தொட்டகரத்தாலென்னைத்தொடுவாயென்றாள் என்பதாம். (௫)

அல்லினிருண்மாக்கடல்சுவற்றியளியன்முலைமேலழலூற்றிக்
கொல்லுங்கொடியவெண்டிங்காள்கொழிக்குநினதுகதிர்சிறிது
புல்லும்பொழுதிலொழியாது புனல்கான்றிந்துகாந்தமெனுங்
கல்லுமுருகுமெனிலுலகி லெவரேயாவிகரையாதார்.

(இ-ள்) அல்லின்-இரவின்கண்—இருள்-இருளாகிய—மா-பெரிய—கடல்-கடல்நீரை—சுவற்றி-சுவரச்செய்து—அளியன்-எளியவளாகியவென்னுடைய—முலைமேல்-தனத்தின்கண்—அழலூற்றி- அக்கினியைச்சொரிந்து—கொல்லும்-கொல்லாநின்ற—கொடிய- கொடுமைபொருந்திய—வெண்டிங்காள-வெள்ளியசந்திரனே—கொழிக்கும்-கொப்பளிக்கின்ற—நினதுகதிர்-உன்னுடையகிரணங்கள்—சிறிது-கொஞ்சம்—புல்லும்பொழுதில்-பொருந்தும்பொழுதில்—ஒழியாது-ஓயாமல்—இந்துகாந்தமென்னுங்கல்லும்-சந்திரகாந்தமென்னுங்கல்லும்—புனல்கான்று-நீரைக்கக்கி—உருகுமெனில்-கரையுமேயானால்—உலகில்-உலகத்தில்—ஆவி

களையர்தார்-லென்மையாகியஉயிர்களையாதவர்—எவர் - யாவர்—எ-று,
(கருத்து) சந்திரனே உன்கிரணங்களால் கல்லுமுருகுமானால் உலகத்தி
ல் யார்தா முருகாதவர் என்றுள என்பதாம். (௬)

பணந்தாழராவுண்டுமிழ்மதியேயமிழ்தினேடும்பலதேவ
கணந்தாமவெருவும்விடத்தொடும்வந்ததனாலன்றோகணவர்புய
மணந்தாருள்ளங்குளிர்ப்பேறத்தண்ணெனக்கதிர்கள்வழங்குவதும்
தணந்தாருள்ளாமிகவெதும்பத்தழல்போலுருக்குந்தன்மையுமே

(இ-ள்) தாழ்-வளைந்த—பணம்-படத்தையுடைய—அரவு-தப்பமானது—உண்டு-விழுங்கி—உமிழ்மதியே-உமிழ்கின்றசந்திரனே—கணவர்புயம்-தலைவருடையபுயத்தை—மணந்தார்- சேர்ந்தவர்களது—உள்ளம்-மனமானது—மிகவெதும்ப-மிகவும்வாட—தழல்போல்- அக்கினியைப்போல்—உருக்கும்-உருக்கின்ற—தன்மையும்-குணமும்—அமிழ்தினோடும்-அமிர்தத்துடனேயும—பலதேவகணம்- பலவாகியதேவகூட்டங்கள்—வெருவும்-பயப்படுகின்ற—விடத்தோடும் - நஞ்சுடனும்வந்ததனாலன்றோ—எ-று. (கருத்து) அரவுண்டு கக்கியசந்திரனே மணந்தார்க்குத் தண்கதிர்களும் தணந்தார்க்கு வெங்கதிர்களும் வழங்குவது அமிர்தத்துடனும் விஷத்துடனும் பிறந்தகுணமோ என்றுள என்பதாம், (௭)

வடவானலத்தினுடன்பிறந்தாய்வளர்பூங்கலையொன்றெய்தியபின்
படர்வார்சடையோனழல்பரப்புநுதற்கணேடுபயின்றிருந்தாய்
சுடர்கால்கலைகணிறைந்துமுழுமதியாங்காலைத்தொடரரவின்
விடவாயுறைந்தாய்மதியேநீ*வெம்மைக்காலவதரிதேயோ.

(இ-ள்) மதியே சந்திரனே—வடவானலத்தினுடன் - வடவாமுகாக்கினியுடனே—பிறந்தாய்-உதித்தாய்—வளர் - வளர்கின்ற—பூ-அழகிய—கலையொன்று-கலையொன்றினை—எய்தியபின்-அடைந்தபின்பு—படர்-படர்கின்ற—வார்-நெடிய—சடையோன்-சடையினையுடையபரமசிவனது அழல்-அக்கினியை—பரப்பும்-விரிக்கின்ற—நுதற்கணோடு - நெற்றிக்கண்ணுடனே—பயின்றிருந்தாய்-பழகிக்கொண்டிருந்தாய்—சுடர்-கிரணங்களை—கால்-உமிழ்கின்ற—கலைகணிறைந்து - பதினாறுகலையுநிறைந்து, முழுமதியாங்காலை-பூரணசந்திரனைபொழுது—தொடர்-தொடருகின்ற—அரவின்-பாம்பினுடைய—விடவாய்-விடமுள்ளவாயிலே—உறைந்தாய்-தங்கினாய்—ஆகையால்-நீ-நீ—வெம்மைக்கால்வது- வெப்பத்தைத்தருவது—அரிதேயே- அரிதாகுமோ—எ-று. தொல்காப்பியம்-பெயரியல்-௩௫-சூ-ம்-நீயென்கிளவி யொருமைக்குறித்தே (கருத்து) சந்திரனேவடவாமுகாக்கினியுடன் பிறந்தாய்ஒருகலைபெற்ற பின்பரமசிவன் நெற்றிக்கண்ணோடு பழகியிருந்தாய் பாம்பின் வாயிலுறைந்தாய்-நீஅக்கினியைக்கக்குத லரிதோஎன்றுள் என்பதாம் (௮)

தொய்யின்முலைகன்பசுப்பூரத்துணைவர்ப்பிரிந்துதுயிறுறந்த
மைபன்மடவாருயிர்கவாஅன்கூற்றம்போலவருமதியே
வையமிலையுன்னுடற்களங்கமழலுங்கொடியவிடமன்றே
வெய்யபருவாய்க்கரும்பாந்தள்விழுங்கிறுமிழ்ந்ததுவே.